பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 20 வியாழக்கிழமை (04.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 098

# இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா கொழும்புக்கு முக்கிய விஜயம்

## நாளை மறுதினம் இங்கு வருகின்றார்



கொழும்பு, மார்ச் 04

இந்தியாவின் வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் அம்மையார் இரண்டு நாள் விஜயமாக நாளை மறுதினம் சனிக்கிழமை கொழும்பு வருகின்றார்.

இந்தியாவின் வெளியுறவுச் செயலர் பதவியை ஏற்றபின்னர் அவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் விஜயம் இது என்பதாலும் -

இலங்கையில் பொதுத் தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ள இந்தச் சமயத்தில் அவர் இலங்கைக்கு வருவதாலும் -

இந்த வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இலங்கையில் இந்தியத் தூதராகவும், தூதரகத்தின் முதலாவது செயலாளராகவும் பணியாற்றியவர் நிருபமா ராவ் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை - அதிகாரப் பரவலாக்கல் யோசனைத் திட்டம் ஒன்றை - முன்வைக்குமாறு கொழும்புக்கு புதுடில்லி அழுத்தம் கொடுத்து வருகையில், இந்தியத் தூதுவரின் கொழும்பு வருகை இடம்பெறுகின்றமை மிகவும் முக்கியமானதாகும்.

இந்திய வெளிவிவகாரச் செயலரின் இலங்கை வருகை வழமையான - இரு தரப்பு பரஸ்பர நலன் நோக்கிய - உறவாடல் தொடர்பானதே என அதிகாரிகள் மட்டத்தில் கூறப்பட்டது.

எனினும், இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தீர்க்கமான சில கொள்கை முடிவுகள் குறித்து கொழும்பு, இந்தப் பொதுத் தேர்தலுக்கு முன்னர் கோடிகாட்ட வேண்டும் எனப் புதுடில்லி கருதுவதாகவும் -

புதுடில்லியின் அந்த நிலைப்பாட்டை நிருபமா ராவ் தனது கொழும்பு விஜயத்தின் போது இங்குள்ள அதிகார வர்க்கத்திடம் அழுத்தம், திருத்தமாகத் தெரியப்படுத்துவார் எனவும்(24ஆம் பக்கம் பார்க்க)

## அவசர காலச் சட்டத்தை நீடிக்க கைச்சாத்திட்டார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 04

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கு நாடாளுமன்றைக் கூட்டுவதற்கான வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கைச்சாத்திட்டுள்ளார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கென நாடாளுமன்றம் எதிர்வரும் 9ஆம் திகதி விசேடமாகக் கூடவுள்ளது.

நாடாளுமன்றம் கடந்த பெப்ரவரி 9ஆம் திகதி கலைக்கப்பட்டது. இந்நிலையில் அவசரகாலச்(24ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் 9 ஆம் திகதி அமர்வுக்குச் செல்ல எம்.பிக்களுக்குத் தேவைப்படின் பாதுகாப்பு

கொழும்பு, மார்ச் 04

அவசரக்காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்காக இம்மாதம் ஒன்பதாம் திகதி நாடாளுமன்றம் கூடவுள்ளதால், தற்போது பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ள எம்.பிக்களுக்கு அச்சந்தர்ப்பத்தில் பாதுகாப்புப் பிரச்சினை ஏதும் இருந்தால் அவர்கள் அரசிடம் முறைப்பாடு செய்து பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன நேற்றுக் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தல் இடம்பெற்று, மீண்டும் நாடாளுமன்றம் கூடுவதற்கு முன் அவசர தேவைகள் ஏதும் ஏற்பட்டால் இடையில் நாடாளுமன்றத்தைக் கூட்டலாம். அதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் இலக்கங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 04

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகள், சுயேச்சைக்குழுக்களின் வேட்பாளர்களுக்கான இலக்கங்களின் பட்டியல் நேற்று யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்களத் துக்கு கிடைத்ததாக உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

ஒரு சில கட்சிகள் மட்டுமே தமது வேட்பாளர்களின் விருப்பு இலக்கப் பட்டியலைப் பெற்றுச் சென்றுள்ளதாகவும் ஏனைய கட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் இன்று மாலை வரை தமது வேட்பாளர்களுக்கான இலக்கங்களைப் பெறமுடியும் எனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

இன்றைய தினம் தமது வேட்பாளர்களுக்கான இலக்கங்களை கட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் தேர்தல் திணைக்களத்தில் பெறாவிடின் குறித்த இலக்கங்கள் உரிய கட்சிகளுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (அ-6)

(மேலும் விவரம் 23ஆம் பக்கத்தில்)

## ரஷ்யாவிலிருந்து எண்ணெய் நிர்ணயிக்கப்பட்ட விலையில்

கொழும்பு, மார்ச் 04

ரஷ்யா தனது பிரதான எண்ணெய் நிறுவனத்தின் ஊடாக இலங்கைக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையில் எண்ணெய் வழங்குவதற்கு இணங்கியுள்ளது.

இலங்கை தற்போது சிங்கப்பூர் ஊடாகவே எண்ணெயைப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வருட இறுதிக்குள் ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இது குறித்து உடன்பாடு கைச்சாத்தாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரஷ்யாவிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த வேளை அந்த நாட்டின் பிரதான எண்ணெய் நிறுவனமான 'காஸ்புரொம்' உடன் இது குறித்துப் பேச்சுகளை மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையர்கள் 13 பேருடன் சவுதி அரேபியக் கப்பல் கடத்தல்

### சோமாலியக் கடற்கொள்ளையர்கள் கைவரிசை

கொழும்பு, மார்ச் 04

இலங்கைப் பணியாளர்கள் 13 பேர் உள்ளிட்ட 14 பேரை ஏற்றி சென்ற சவூதி அரேபியக் கப்பல் ஒன்றைச் சோமாலியக் கடற் கொள்ளையர்கள் கடத்திசென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

'நிஷா அல் சவூதி' எனப்படும் இந்தக் கப்பல் கடந்த திங்கட்கிழமை கடத்தப்பட்டதாக கிழக்கு ஆபிரிக்காவுக்கான சமுத்திரங்கள் சார்ந்த நிவாரண அமைப்பு தெரிவித்துள்ளது.

சோமாலியாவை அண்மித்த ஏடன் குடா பகுதியில் இந்த கப்பல் கடத்தப்பட்டுள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

கல்விச் சுடர்

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் மாதிரி வினாத்தாள்

நாளை

## சித்திரைப் புத்தாண்டு வரையில் பொருள்களின் விலை உயராது

கொழும்பு, மார்ச் 04

எதிர்வரும் சிங்கள - தமிழ்ப் புத்தாண்டுக்கு முன்னதாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை அதிகரிப்பதில்லை என அரசு தீர்மானித்துள்ளது.

நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக இறக்குமதியாளர்களுக்கு வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கைச் செலவு தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின்போது இது குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எரிவாயு மற்றும் பால்மா நிறுவனங்கள் விலைகளை அதிகரிக்குமாறு கோரியபோதிலும் இவற்றின் விலைகளை அதிகரித்தால் ஏனைய பொருள்களின் விலைகளிலும் தாக்கம் [illegible] வேண்டுகோளை ஏற்க மறுத்துள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

## பொன்சேகாவின் மருமகனைப் பிடிக்க ஹஸான் திலகரட்ணவின் வீட்டில் தேடுதல்

கொழும்பு, மார்ச் 04

ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகன் தனுனா திலகரட்ண மறைந்திருக்கிறார் எனக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து [illegible] கிரிக்கெட் வீரர் ஹஸான் திலகரட்ணவின் வீட்டை நேற்றுக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சோதனையிட்டனர்.

ஹஸான் திலகரட்ணவின் வீட்டில் தனுனா திலகரட்ண மறைந்திருக்கிறார் எனக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே அவரது வீட்டைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சோதனையிட்டனர் எனப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஹஸான் திலகரட்ண அவ்வேளை வீட்டில் இருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ள அவர்,(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு உட்பட வெளி மாவட்டங்களிலுள்ள குடாநாட்டு வாக்காளருக்கு போக்குவரத்து வசதி

## சொந்த மண்ணுக்கு வந்து வாக்களிக்க வேண்டும் என்கிறார் விஜயகலா

யாழ்ப்பாணம், மார்ச் 04

கொழும்பு உட்பட வெளிமாவட்டங்களில் வசிக்கும் குடாநாட்டில் வாக்குப்பதிவு உள்ளவர்கள் அனைவரும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தவறாமல் வாக்களிக்க வேண்டும். அவ்வாறானவர்களுக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் நாங்கள் தயாராக உள்ளோம்.

இவ்வாறு அறிவித்துள்ளார் யாழ்.மாவட்ட ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன்.

குடாநாட்டு மக்கள் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அவர் நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் நிலையான சமாதானம் ஏற்பட்டு தமிழ் மக்களின் அன்றாட அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்பட வேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிபீடம் ஏற்றுவதே ஒரே வழியாகும். இதற்கான பாதையை யாழ்.குடா நாட்டு மக்கள் ஏற்ப டுத்த வேண்டும். குடா நாட்டு மக்கள் சிந்தித்து உரிய முறையில் வாக்களித்தால் ஐ.தே.கவின் சார்பில் 6 உறுப்பினர்கள் குடாநாட்டில் இருந்து தெரிவாவது உறுதி.

### குடா நாட்டுக்கு வந்து வாக்களிக்க வேண்டும்

யாழ்.குடாநாட்டில் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ஏழரை இலட்சமாக இருந்த போதிலும் இங்கு வாழ்பவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. யாழ்ப்பாணத்தில் வாக்காளர்களாக பதிவு செய்தவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் கொழும்பிலும் நாட்டின் இதர பகுதிகளிலும் இடம் பெயர்ந்து குடியே றியுள்ளனர். இத்தகையவர்கள் நாடாளுமன்றத் தேர்தலின் போது குடா நாட்டுக்கு வந்து தமது வாக்குகளை அளிக்க வேண்டும். இதன் மூலமே எமது பிரதிநி தித்துவத்தை உறுதிப்படுத்த முடியும்.

குடாநாட்டு மக்கள் இதுவரை சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வந்தனர். தற்பொழுதும் குடா நாட்டு மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. எனவே இந்தத் தேர்தலில் சிந்தித்து வாக்களிப்பதன் மூலமே சுபீட்சமான வாழ்வுக்கு குடா நாட்டு மக்கள் அத்திபாரம் இடமுடியும். இது தான் உண்மையும் யாதார்த்தமுமாகும்.

மக்கள் வாக்குகளைச் சிதறிடிக்காமல் வாக்களித்து எமது அணியலிருந்து 6உறுப்பினர்களைத் தெரிவு செய்தால் அது ஆட்சி மாற்றத்துக்கான அத்திபாரமாக அமையும்.

இத்தகைய நிலை ஏற்பட வேண்டுமானால் குடாநாட்டில் உள்ள மக்கள் வாக்களிப்பில் ஆர்வம் காட்ட வேண்டும். குடாநாட்டில் பதிவு செய்யப்பட்ட வாக்களர்கள் சொந்த மண்ணுக்கு வந்து வாக்களிக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் போட்டியிடுபவர்களில் அதிக எண்ணிக்கையான தமிழ் உறுப்பினர்கள் யாழ்.குடாநாட்டிலேயே தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கொழும்பில் கூட ஐ.தே.கவின் சார்பில் தமிழ் வேட்பாளர்கள் எவரும் நிறுத்தப்படவில்லை. எனவே யாழ்ப்பாணத்தில் இருந்தே ஐ.தே.கவிற்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே யாழ்.குடாநாட்டில் வாக்காளர் பதிவைக் கொண்ட மக்கள் அங்கு வந்து வாக்களிக்க வேண்டியது அவசியமாகும். இத்தகையவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டால் அதற்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த நாம் தயாராக உள்ளோம்.

### தமிழருக்காக உயிரையே கொடுத்தவர் என் கணவர்

தமிழ் மக்களுக்காக எனது கணவர் உயிரை இழந்தார். நான் இன்று அவரைப் பிரிந்த பெரும் துயரத்தில் இருந்து மீளமுடியாது தவிக்கின்றேன். எனது நிலையில் குடாநாட்டிலும் ஏனைய பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையான பெண்கள் உள்ளனர். எனவே இந்தத் தேர்தலின் பின்னராவது இத் தகையவர்களின் துன்ப துயரங்கள் நீங்க வேண்டும். குடும்பத்தில் கணவனை இழந்த எனக்கு ஏனைய குடும்பங்களில் ஏற்பட்ட இழப்புக்களின் சுமை தெரியும்.



எனவே எனது அணியினரை வெற்றி பெறச் செய்ய சகல மக்களும் ஒத்துழைக்க வேண்டும். தமிழ் மக்களின் நலன்குறித்து எனது கணவர் நாள்தோறும் சிந்தித்தார். நாம் தமிழ் மக்களுக்கு துன்பம் ஏற்படும் போது அவர்களை விட்டுவிட்டு வெளிநாடு செல்பவர்கள் அல்லர். எனவே மக்கள் இம் முறை சிந்தித்து வாக்களிக்க வேண்டும். 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நாம் விட்ட தவறை இன்று உணர்கின்றோம். அதே போன்று இம் முறைத் தேர்தலிலும் குடாநாட்டு தமிழ் மக்கள் தவறிழைத்து விடக்கூடாது என வினயமாகக் கேட்டுக் கொள்கின்றேன் -என்றுள்ளது. (ஒ)


## வாழ்த்துக்கள்

அகவை அறுபது காணும்

உயர் திரு.வீ.இராசையா

(மாகாணக் கல்விப்பணிப்பாளர்)

அவர்களை தொடர்ந்தும் கல்விப்பணியாற்ற வாழ்த்துகின்றேன்.

திருமதி R.இருதயநாதன்
(ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்).

கொழும்பு. (95398)


## மெய்வன்மைத் துறையின் சாதனையாளன்

### வழிகாட்டிகளின் வாழ்த்து



*சண்முகம் தயாளன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தெரிந்து எடுத்த தனிமுத்து.*

*உதைப்பந்தாட்டத் துறையில் அகில இலங்கை 19 வயது அணியில் 1975 ஆம் ஆண்டில் அணிவீரராகவும், அடுத்த ஆண்டு அதே அணியின் முதல்வராகவும் (Caption) தெரிவு செய்யப் பெற்று சிங்கப்பூர், அக்ரா முதலிய இடங்களில் பல நாட்டு அணிகளுடன் இவர் சிறப்புற ஆடியுள்ளார்.*

*துடுப்பாட்டத்துறையின் உச்சமாக 1998 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட அணியின் முதல்வராகத் தெரிவு செய்யப் பெற்றார்.*

*1975 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட ஹொக்கி அணியிலும் இவர் வீரராகக் கலந்து கொண்டுள்ளதுடன் 1976 ஆம் ஆண்டு அணியின் முதல்வராகவும் இருந்துள்ளார்.*

*கூடைப்பந்தாட்டத்துறையில் யாழ் மாவட்ட அணிவீரராக 1976, 1977 ஆம் ஆண்டுகளில் இவர் பங்கு கொண்டுள்ளதுடன் 1978 ஆண்டு அணியின் முதல்வராக நின்று ஆடியுள்ளார்.*

*மெய்வன்மைத்துறையில் பல சாதனைகள் புரிந்தவர் இவர். 1975, 1976 ஆம் ஆண்டுகளில் இலங்கைப் பாடசாலை அணிகளின் அகில இலங்கை மெய்வன்மைப் போட்டியில் இவர் ஈட்டி எறிதல் (Javelin), கோலூன்றிப் பாய்தல் (Pole Vault) ஆகிய இரு துறைகளிலும் முதலாம் இடம் பெற்றமையுடன் கோல் ஊன்றிப் பாய்தலில் இவர் ஏற்படுத்திய சாதனை (10 அடி 0. 5 அங்குலம்) இற்றைவரை மீறப் பெறவில்லை.*

*திரு. சண். தயாளன் இத்தனை ஆண்டுகளின் பின் காலந்தாழ்த்தி இனங்காணப்பெற்று உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். இவரின் மெய்வன்மை சார் அறிவும், அனுபவமும், ஆற்றலும் எம் மாணவ சமூகத்திற்கு முழுமையாக கிடைக்க வேண்டும் என வேண்டி வாழ்த்துகின்றோம்.*

04.03.2010
யாழ்ப்பாணம்

யாழ். இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் குழுமம்.


## காணவில்லை



ஏழாலை மத்தி சிவகுரு கடையடியைச் சேர்ந்த
விபுலானந்தராசா புவிசாந் (வயது -16)
கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் கடந்த
27.01.2010 அன்று வீட்டில் இருந்து புறப்பட்டவர்
இன்னும் வீடு திரும்பவில்லை. இவரைக் கண்டவர்கள்
பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
0774747506, 0772478103, 0770489598

தகவல்: பெற்றோர்.

## மீண்டும் GNANA (ஞானா) BEAUTY PARLOUR

அதிநவீன முறையில்

1. Bridal/ Convocation/ Dance make up
2. Facial for different types of skin with treatment
3. manicure & Pedicure
4. Hair Cutting/Hair Styles
5. Threading
6. Waxing
7. Wedding / Birthday Cake orders are undertaken

மேலதிக விவரங்களுக்கும் பதிவுகளுக்கும் தொடர்பு கொள் ளவும்.
162, ஆடியபாதம் வீதி (பொற்பதி சந்திக்கு அருகாமையில்) கொக்குவில்.
தொ.பே: 222 3885 (95391)


## அறிவித்தல்

### நாடாளுமன்றத் தேர்தல் - 2010.04.08

### தேர்தல்கள் திணைக்கள தற்காலிக அடையாள அட்டைகள்

நடைபெற்று முடிந்த தேர்தல்களின்போது விநியோகிக்கப்பட்டது போன்று எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போதும் தேர்தலில் வாக்களிப்பதற்குத் தேர்தல்கள் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட அடையாள அட்டைகளிலொன்றை வைத்திருக்காத தேருநர்களுக்கு தேர்தல்கள் திணைக்களத்தினால் தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் தேருநர்கள் பிரதேச செயலகங்கள்/உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி இரண்டு 1¼"X1" அளவிலான வர்ணம் அல்லது கறுப்பு, வெள்ளை புகைப் படங்களுடன் கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலகங்கள்/ உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் சமர்ப்பிக்கவேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த தேருநர்களுக்குத் தற்காலிக அடையாள அட்டைகள் கிராம அலுவலர் ஊடாக தேருநர்களிடம் கையளிக்கப்படும்.

நடைபெற்று முடிந்த தேர்தல்களின்போது ஆள்களைப்பதிவு செய்யும் திணைக்களம்/தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு மீளப்பெறப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக கிராம அலுவலரூடாக தேருநர்களிடம் கையளிக்கப்படும்.

க.கணேஷ்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
இல. 10, யாழ்ப்பாணம்.

(சி/565371)


## ஆசிரியர்கள் தேவை

சிங்களம், ஆங்கில மொழி கற்பிப்பதற்கு திறமை வாய்ந்த ஆசிரியர்கள் தேவை.
தொடர்பு: விவேகானந்த அக்கடமி
இல. 3,2 nd Lane (அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்) பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0774842464, 021 321 6928


## சிறுவர் விடுதிக்கான கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடைநிறுத்தப்பட்டிருந்த சிறுவர் விடுதிக் கட்டடவேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அம்புலன்ஸ், வைத்தியர்களின் வாகனங்கள் தரிப்பிடங்களும் ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் மோட்டார் சைக்கிள், சைக்கிள்களுக்கான பாதுகாப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

யாழ். பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் முயற்சியினால் ஜப்பானிய நிறுவனத்தினரால் நவீன வசதிகள் கொண்ட குழந்தைகள் விடுதியும் மாகாண சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வாகன தரிப்பிடங்கள் மற்றும் பாதுகாப்பு நிலையங்களும் அமைக்கப் படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

## மரண அறிவித்தல்

### சின்னையா யோகலிங்கம் (கிளி)



மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு, ஐயா கடையடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா யோகலிங்கம் நேற்று (03.03.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும் கார்த்திகா, நவரூபன் (கட்டார்), சுபத்திரா, யசித்திரா, எயிற்றா, திவ்யா ஆகியோரின் தந்தையும் நவிகரன், ஜெயக்குமார் ஆகியோரின் மாமனாரும் துஷிராஜின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2010) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐயா கடையடி,*
*சாவகச்சேரி வடக்கு.* (95409)

தகவல்:
யோ.நவரூபன் (மகன்).

## தசாக கிரஹயக்ஞ அழைப்பு



அமரர் பிரம்மஸ்ரீ கனகசபாபதிஐயர்
பாலசுப்பிரமணியசர்மா (கண்ணன்ஐயா)

அவர்களின் ஆத்ம சாந்தி அபரக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

*04.03.2010* வியாழக்கிழமை தசாகம் (காலை 10 மணி)
*05.03.2010* வெள்ளிக்கிழமை மாசியம்
*06.03.2010* சனிக்கிழமை சபீண்டிகரணம்
*07.03.2010* ஞாயிற்றுக்கிழமை கிரஹயக்ஞம்

மேற்படி கிரியைகளிலும் 07.03.2010 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மடம் வீதி,
கல்வியங்காடு. 021 222 9886

தகவல்: பெறாமகன் வ.கேதீஸ்வரசர்மா
(சமுர்த்தி முகாமையாளர், வேலணை).

(95408)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நிருபமா ராவின் இலங்கை விஜயம்

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளராகப் பதவியேற்றுக் கொண்டுள்ள நிருபமா ராவ் அம்மையார் அதன் பின்னர் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை மறுதினம் கொழும்பு வருகின்றார். அவர் இரண்டு நாள்கள் கொழும்பில் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது சாதாரணமாக அயல்நாடு ஒன்றின் வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் இரு தரப்பு உறவு தொடர்பான விடயங்கள் குறித்துக் கலந்துரையாடும் நோக்குடன் கொழும்புக்கு மேற்கொள்ளும் வழமையான விஜயம் என்றே அதிகார மட்டத்தினால் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், இந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய வெளிவிவகாரச் செயலாளரின் விஜயத்துக்கு அர்த்தங்கள் அதிகம் உள்ளன என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

நிருபமா ராவ் அம்மையார் இலங்கைக்குப் புதியவரல்லர். இலங்கை தொடர்பான இந்தியாவின் கடந்த முப்பத்தியைந்து ஆண்டு காலச் செயற்பாடுகளில் அதிக பங்களிப்புக் காட்டிய - சேவையில் உள்ள - இந்திய உயரதிகாரி ஒருவர் என்று இப்போது யாரையேனும் புதுடில்லி பக்கத்தில் சுட்ட முடியும் என்றால் அது நிருபமா ராவ் அம்மையாராகத்தான் இருக்க முடியும்.

இலங்கை விடயத்தைக் கையாளும் புதுடில்லியின் அதிகார வர்க்கத்தின் பிரிவில் நிருபமா ராவ் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்த காலத்தில் எல்லாம், இலங்கை விடயத்தில் இந்தியா தள்ளி நிற்காமல் நேரடியாக ஈடுபாடுகாட்டி வந்திருப்பதும் கவனிக்கத்தக்கது. இது சில சமயங்களில் சந்தர்ப்பவசமாகவும் நேர்ந்திருக்கலாம். ஆனாலும் அதுதான் உண்மை.

எண்பதுகளின் பிற்பகுதிகளில் இலங்கை விவகாரத்தில் இந்தியா நேரடியாகத் தலையிட்டது. ஈழத் தமிழர் பிரச்சினையை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு இலங்கைப் பிரச்சினைக்குள் அது புகுந்தது. தன்னுடன் ஒரு கட்டாய ஒப்பந்தத்துக்கு கொழும்பு அடிபணிந்து வரும் அளவுக்கு புதுடில்லி பல்வேறு வகையான - தந்திரோபாய - அழுத்தங்களை அப்போது கொடுத்தது. அந்த ஒப்பந்தத்தை வைத்துக்கொண்டு தனது படைகளை இலங்கையின் வடக்கு, கிழக்கிற்கு - தமிழர் தாயகத்துக்கு - அனுப்பி அதை ஆக்கிரமிக்கவும் செய்தது.

இந்தக் காலகட்டத்தில் கொழும்புக்கான இந்தியத் தூதுவராக ஜே.என். டிக்ஸிற் இருந்தார். அச்சமயம் அந்தத் தூதரகத்தின் முதல் செயலாளராக இருந்தவர் இதே நிருபமா ராவ் அம்மையார்தான்.

அதன் பின்னர், நிருபமா ராவும் கொழும்பிலிருந்து பிற இடங்களுக்கு இடமாற்றம் பெற, புதுடில்லியும் சுமார் ஒன்றரை தசாப்தகாலம் இலங்கைப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடாமல் பார்த்திருக்கும் பண்பியல்பைப் பின்பற்றியமை அவதானிக்கத்தக்க விடயமாகும்.

மீண்டும் இந்த மிலேனியத்தின் முதலாவது தசாப்தத்தின் நடுப் பகுதியில், இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் தலையீடு - வெளிப்படையாக இல்லாவிட்டாலும் - ஒளிவுமறைவாகவும் சத்தம் சந்தடியின்றியும் மெல்ல மெல்லத் தலையெடுத்து விரிவடைந்தது.

இலங்கை அதிபராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற சமயத்தில் கொழும்புக்கான தூதுவர் பதவியில் இருந்தவர் நிருபமா ராவ்தான்.

அச்சமயம் பிரதான எதிர்க்கட்சியாகவிருந்த ஐ.தே.கட்சியுடன் அணி சேர்ந்திருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான நட்புறவு முறுகலடைந்த நிலையில், கொழும்பில் தனது உத்தியோகபூர்வ இல்லமான 'இந்திய ஹவுஸ்' மாளிகைக்கு இருவரையும் அழைத்து, விருந்து கொடுத்து, சமரசப்படுத்தி வைத்தவரே நிருபமா ராவ் அம்மையார்தான். அவ்வளவு தூரம் அவருக்கு இலங்கை அரசியல் விவகாரங்களில் அதீத செல்வாக்கு இருந்தது.

அந்தக் காலகட்டத்தில்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் சிதைத்து அழிக்கும் திட்டத்தை இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ வகுத்து செயற்படுத்தத் தொடங்கினார்.

அப்போது முதல் 2009 மே நடுப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது என இலங்கை அரசு அறிவிக்கும் வரை இலங்கை யுத்த விவகாரத்தில் இந்தியாவின் பங்களிப்புக் குறித்து இலங்கைத் தமிழர்களுக்குக் கசப்பான - விரக்தியான - எரிச்சலான - சீற்றமான - ஆவேசமான - கருத்துணர்வு உண்டு என்பது வெளிப்படையானது.

அத்தகைய ஒரு கருத்து நிலைப் போக்கை, இலங்கைத் தமிழர் விடயத்தில் புதுடில்லி கைக்கொள்வதற்கான கால்கோள் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்தை ஏற்ற சமயத்தில் - நிருபமா ராவ் அம்மையார் கொழும்புக்கான இந்தியத் தூதர் பதவியை அலங்கரித்த வேளையில்தான் - இடப்பட்டது என்பதும் கவனிக்கத்தக்கது.

இத்தகைய விதத்திலான இந்தியத் தலையீட்டுக்கு முழுக் காரணம் நிருபமா ராவ்தான் என்று நாம் குற்றம் சுமத்துகிறோம் என யாரும் கருதிவிடக் கூடாது. ஆனால் சந்தர்ப்பவசமாகவோ என்னவோ, இலங்கை விவகாரத்தைக் கையாளும் புதுடில்லித் தரப்பில் நிருபமாராவ் சம்பந்தப்பட்ட காலத்திலேயே, ஈழத் தமிழருக்கு விசனத்தையும், எரிச்சலையும் ஊட்டும் விதத்திலான செயற்போக்கை அல்லது செயற்றிறனின்மையை இந்தியா வெளிப்படுத்தி வந்திருக்கின்றது என்பதுதான் இங்கு கவனிக்கத்தக்க விடயமாகும்.

இப்போதும் இலங்கையில் பொதுத் தேர்தல் சமயம். தமிழர் தரப்பில் அதிக பிரதிநிதித்துவத்தை வெளிப்படுத்தி நிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 'இந்தியாவின் எடுபிடியாகி விட்டது, புதுடில்லியில் ஏவல் நாயாகிவிட்டது' என்றெல்லாம் கூட்டமைப்புக்கு எதிராகக் கடும் பிரசாரங்கள் சில தரப்புகளினால் கிளப்பி விடப்பட்டிருக்கும் சமயத்தில் நிருபமா ராவ் அம்மையார் கொழும்பு வருகின்றார்.

இந்த வருகையின் பின்புலம் என்னவென்பது இனித்தான் அம்பலமாகும். அற்காகப் பொறுத்திருப்போம்.

# உயர்பாதுகாப்பு வலயத்தில் குடியமரும் குடும்பங்களுக்கு உதவுவதற்கு வடக்கின் துரித மீட்சித் திட்டம் நடைமுறைக்கு

## உலக வங்கியின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படுகிறது

யாழ்ப்பாணம்,மார்ச் 4

உயர்பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உதவவென உலக வங்கியின் நிதியுதவியுடன் தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்டத்துறை, உட்கட்டுமான அபிவிருத்தி அமைச்சு ஊடாக வடக்கின் துரித மீட்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மேற்படி திட்டம் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் யாழ்.மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டமானது உயர்பாதுகாப்பு வலயத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உதவி செய்யவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 8 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 34 கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக்குடியமர்த்தப்படும் 2,363 குடும்பங்கள் இதன் மூலம் பயனடையவுள்ளன.

இத்திட்டக் கூற்றின் 'ஏ' ஒதுக்கீட்டின் கீழ் -

* விவசாய காணி துப்புரவு செய்தல் 13.78 மில்லியன் ரூபா.
* விதைகள் வழங்கல் 19.95 மில்லியன் ரூபா.
* அடிப்படை வசதிகள் வழங்கல் 16.69 மில்லியன் ரூபா என்பன உள்ளடங்கும்.

திட்டக்கூறு 'பி'யின் கீழ் ஒவ்வொரு குடும்பமும் தங்களது சொந்த வீடுகளைத் துப்பரவாக்க குடும்பத்தில் ஒருவர் 10 நாள்களுக்கு ஈடுபடுவதற்கு நாள் ஒன்றுக்கு 500 ரூபா வீதம் மொத்தமாக 5,000 ரூபா அவரது கணக்கில் வரவு வைக்கப்படும்.

பொது வேலைகளில் ஈடுபடும் குடும்பத்தில் ஒருவருக்கு 40 நாள்களுக்கு ஈடுபடுவதற்கு நாள் ஒன்றுக்கு 500 ரூபா வீதம் மொத்தமாக 20,000 ரூபா வரை அவர்களது கணக்கில் வரவு வைக்கப்படும்.

திட்டக்கூறு 'சி'யின் கீழ் குறித்த கிராமங்களின் கீழ் பௌதீக வள அபிவிருத்திகள் இடம்பெறவுள்ளன. தற்பொழுது தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் உள்ள 7 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 507 குடும்பங்களுக்கு தங்களது வீடு வளவுகளை துப்புரவாக்கியமைக்கான குடும்பம் ஒன்றுக்கு 5,000 ரூபா வரையான நிதி அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு நேற்று புதன்கிழமை விடுவிக்கப்பட்டது. உயர்பாதுகாப்பு வலய தெற்கு 300 மீற்றர் முன்னரங்கில் குடியமர்ந்துள்ள/தற்போது குடியமரும் குடும்பங்களுக்கு இந்த நிதி உதவி வழங்கப்படுகிறது.

தெல்லிப்பழையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வேலைத்திட்டம் படிப்படியாக கோப்பாய், உடுவில் சாவகச்சேரி, மருதங்கேணி பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது - என்றுள்ளது. (50)

# தனியார் கலைக்கூடங்களை பதிவு செய்ய விண்ணப்பிக்கலாம்

யர்ழ்ப்பாணம்,மார்ச்4

தனியார் கலைக்கூடங்களைக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை கலாசார அலுவல்கள் திணைக்களம் கோரியுள்ளது.

மேற்படி விண்ணப்பப் படிவங்களைத் தத்தமது பிரதேச செயலகங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

இம்மாதம் நடைபெறவுள்ள தேசிய நாட்டிய விழா-2009 இற்கான போட்டிகளில் பங்கு பற்றும் கலைக் கூடங்கள் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒருவர் தமது பெயரில் ஒரு கலைக்கூடத்தையே பதிவு செய்ய முடியும். இதேவேளை பதிவு செய்யும் தனியார் கலைக்கூடங்கள் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட புதிய சட்டதிட்டங்களுக்கு அமைந்தவையாக இருத்தல் வேண்டியது அவசியமாகும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-16)

# பொது உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,மார்ச் 4

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினால் நடத்தப்படும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் கற்கைநெறி 2009/2010இற்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு பொது உளச்சார்பு பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் உளச்சார்பு பரீட்சைக்கான விண்ணப்பங்களை (www.ucsc.cmb.lk)எனும் இணையத்தளத்தில் பெற்று எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வவுனியா வளாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் வி.சிறிதரன் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைகள் அடுத்தமாதம் 25ஆம் திகதி கொழும்பு, கண்டி, மிகிந்தலை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து பரீட்சை நிலையங்களில் நடத்தப்படவுள்ளன. இது தொடர்பான மேலதிக விவரங்களை மேற்படி இணையத்தளத்தினூடாகப் பெற்றுக் கொள்ள முடியும். (50-16)

# தமிழ்த்தினப் போட்டிகளை சிவராத்திரி தினத்தில் நடத்துவதைக் கல்வியமைச்சு கைவிட வேண்டும்

## அமைச்சர் சுசில் பிறேம ஜயந்தவுக்கு இந்து மாமன்றம் கடிதம்

யாழ்ப்பாணம்,மார் 4

மகாசிவராத்திரி தினமான மார்ச் 13 ஆம் திகதி தமிழ்த் தினப்போட்டிகளை நடத்த உத்தேசிக்கப்பட்டிருப்பதைக் கைவிடும்படியும், வழக்கம் போல் ஜூலை மாதம் சுவாமி விபுலானந்தர் தினக் கொண்டாட்டங்களின் போது தமிழ்தின விழாவையும் நடத்த வேண்டும் என்றும் கல்வி அமைச்சருக்கு எழுதியுள்ள மகஜர் ஒன்றில் அகில இலங்கை இந்துமாமன்றம் கேட்டுள்ளது.

இதுதொடர்பாக மன்றத்தின் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் கல்வி அமைச்சருக்கு எழுதியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:


சிவராத்திரி தினமான மார்ச் 13 ஆம் திகதி தமிழ்த்தினவிழாவினை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதாக வடக்கிலும் கிழக்கிலுமுள்ள இந்துக்களான மக்கள் எமக்கு முறைப்பாடு செய்திருக்கிறார்கள். இது இந்து மாணவர்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கும் என்பதுடன் அத்தினத்தில் தமிழ்த் தினப்போட்டிகளை நடத்துவதை பின்போடும் படியாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தொன்னூறுகளில் நாம் விடுத்த கோரிக்கையொன்றினை ஏற்று வருடம் தோறும் சுவாமி விபுலானந்தரின் நினைவைக் கொண்டாடும் வகையில் ஜூலை மாதத்தில் இப்போட்டிகளை நடத்த கல்வி அமைச்சர் ஒப்புக் கொண்டிருந்தார். அவ்வாறே வருடந் தோறும் நடைபெற்று வந்துள்ளது. எனவே முன்போலவே இந்த போட்டிகளை நடத்தும்படி நாம் கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (ப)

## நாளை

| | | |
|---|---|---|
| மாசி 21 | 05.03.2010 | |
| | வெள்ளிக்கிழமை | |
| திதி | :பஞ்சமி | |
| | பி.ப.02.45 வரை | |
| நட்சத்திரம் | : சுவாதி | |
| | பி.ப.01.28 வரை | |
| சுபநேரம் | : 06.26-07.56 வரை | |
| ராகுகாலம்: | 10.56-12.26 வரை | |

# தேசிய கல்வி நிறுவகத்தின் சுற்றுநிருபம் தனிச் சிங்களத்தில்




யாழ்ப்பாணம்,மார் 4

தேசிய கல்வி நிறுவகத்தால் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு அண்மையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபம் தனிச் சிங்களத்தில் காணப்படுவதால் அதில் உள்ள விவரங்களை அறிந்துகொள்வதில் அதிபர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2007ஆம் ஆண்டு கல்விச் சீரமைப்பின் பிரகாரம் புதிய செயற்றிட்டத்தின் படியான ஆசிரியர்களைத் தயார்ப்படுத்தலுக்கான திட்டத்தில் ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கான சுற்றுநிருபமே இவ்வாறு தனிச்சிங்களத்தில் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை அறிந்து கொள்வதில் பாடசாலை அதியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தமிழ்ப்பாடசாலைகளுக்கான சுற்றுநிருபங்களை இவ்வாறு தனிச் சிங்களத்தில் அனுப்புவதில் அவற்றை மொழிபெயர்த்து விளங்கிக் கொள்வதில் பாடசாலை அதிபர்கள் சிங்களம் தெரிந்தவர்களின் உதவியை நாடவேண்டியுள்ளது.

பாடசாலைகளுக்கான சுற்று நிருபங்களைத் தமிழ் மொழியில் அனுப்பினால் என்ன? எனப் பல பாடசாலைகளின் அதிபர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (50-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக மகளிர் குழு உறுப்பினர் நிர்மலோஜினி யோகநாதனின் அன்புத் தாயாரும் எமது கழக உறுப்பினர் க.யோகநாதனின் அன்பு மாமியாரும் ஆகிய

**திருமதி நாகேஸ்வரி நடராஜா**

அவர்கள் மறைவடைந்ததையிட்டு எமது கழகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வளர்மதி முன்வேற்றக் கழகமும், வளர்மதி நிறைவாழ்வகமும்,
சம்பியன் லேன், கொக்குவில். (C/565373)

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

### வல்லிபுரம் செல்லப்பா

(சின்னவேலு ஆசாரியார்)



02.02.2010அன்று அமரத்துவம் எய்திய வல்லிபுரம் செல்லப்பா (சின்னவேலு ஆசாரியார்) அவர்களது வீட்டுக் கிருத்தியம் இன்று (04.03.2010) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் இவர்களுடன் அந்தியேட்டிக்கு அழைப்புக் கிடைக்கப்பெறாத அனைவரும் இந் நிகழ்வில் கலந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (95345) குடும்பத்தினர்.



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்!

**யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய**

நூற்றாண்டு விழாக் குழுவினரது அனுசரணையில் யாழ்.தமிழ் மண்ணில் முதன் முறையாகத் தமிழகத்தின் தலை சிறந்த பேச்சாளர் சொல்வேந்தர்

**சுகி சிவம்**

அவர்கள்

**புதியதோர் உலகம் செய்வோம்**

என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார்

இடம்: யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம்: இன்று (04.03.2010) வியாழக்கிழமை
மாலை 04.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

இறைவணக்கம்:
வரவேற்புரை: அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்
தலைமையுரை: பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்
(வாழ்நாள் பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்புரை: சொல்வேந்தர் சுகி சிவம் அவர்கள்
நன்றியுரை: திரு.த.துரைசிங்கம்
(நூற்றாண்டு விழாக்குழுத் தலைவர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: குறித்த நேரத்திற்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும் ஆதலால் தவறாது சமுகம்தருக.

**நூற்றாண்டு விழாக்குழுவினர்**

விளம்பர அனுசரணை: அன்னை நாதர பூச்சிற்றி
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

## Walk in Interview



E.com

Position: Receptionist (Female), Instructor, Lecturer (Visiting)
Salary: Attractive & Negotiable
Date: 06-03-2010
Time: 01.00 p.m.

E.Com Computer Learning Center
No.95A Temple Road,
Nallur, Jaffna T.P. 0217429005

## வீடு தேவை

கணனி நிறுவனம் ஒன்றுக்கு பின் வரும் இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.
யாழ்.நகர், மானிப்பாய், சுன்னாகம்.
(பிரதான வீதிகளில் இருத்தல் வேண்டும்)
தொடர்பு: 0776684302

## தவறிவிட்டது

வறுத்தலைவிளான், தெல்லிப்பழை எனும் முகவரியை உடைய இராசநாயகம் திரிபாலா என்பவருடைய தே.அ.அட்டை (822124275V)யும் மற்றும் வேறு சில முக்கிய ஆவணங்களும் உடுவிலுக்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைக்கவும்.
தொ.பே.இல: 0774064025 (95326)

## விற்பனைக்கு

21ரக MD90 மோட்டார் சைக்கிள் நெல்லியடிப்பகுதியில் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: தொ.பே.இல. 0778759885

## சூழல் பாதுகாப்பு வரி; நாளை மீளப்பெறலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 04

நல்லூர் பிரதேச செயலகத்தில் ஜன வரி மாதத்துக்கான சூழல் பாதுகாப்பு வரி செலுத்தியோர் அதனை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் இருந்து சூழல் பாதுகாப்பு வரி நிறுத்தப்பட்டுள்ளதால் தை மாதம் முதலாம் திகதி முதல் 4ஆம் திகதி வரை இந்த வரியைச் செலுத்தியோர் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இதற்கான பணத்தை பிரதேச செயலக கணக்காளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-16)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 2மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி ரி.ஏ. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை உதவித் தலைவர் லயன் டாக்டர் வைத்திலிங்கம் தியாகராஜா கலந்து கொள்வார். (50-16)

## யோகப் பயிற்சி கருத்தரங்கு

கைதடி, மார்ச் 4

பிரியா யோகப் பயிற்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் யோகப் பயிற்சி தொடர்பான கருத்தரங்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைதடி ப.நோ.கூ. சங்க தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் யோகப் பயிற்சி தொடர்பான கருத்துரைகளை யோகி.வி.சிவனேசராஜா 'சொன்ட்' நிறுவன இயக்குநர் எஸ். செந்தூரராஜன் மற்றும் ஆர்.பிரியதர்சினி ஆகியோர் வழங்கினர். (201-288)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரி நடராசா



நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி நடராசா நேற்று (03.03.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற க.மு.நடராசாவின் அன்பு மனைவியும், மீனலோசனி, மதனலோஜினி (கனடா), ரவீந்திரன் (கனடா), புஷ்பராணி, ஜெயராணி (கனடா), நிர்மலலோஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவலிங்கம் (ஆனந்தன்), விக்னேஸ்வரன் (கனடா), வசந்தராணி (கனடா), கெங்காதரன், இந்திரதாஸ் (கனடா), யோகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுஜா-Dr.குணதீபன், கார்த்திகா, சாளினி, மகிழினி, தர்சிகா, தர்சிகன், லக்ஷிகா, திலக்ஷனா, அபிரா, அபர்ணன், ராகவி, நிஷாந்தன், தர்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, இராசரத்தினம், கந்தசாமி மற்றும் இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் லேன்,
(சம்பியன் லேன்),
கொக்குவில் கிழக்கு. (C/565374)

தகவல்:
குடும்பத்தினர்.

### அருணாசலம் சின்னையா



கோயிலாமனை, மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் சின்னையா நேற்று (03.03.2010) புதன் கிழமை அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம்- மற்றும் சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை- சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், அமரர் சிதம்பரத்தின் (அன்னம்) அன்புக் கணவரும், அமரர்களான வள்ளிப்பிள்ளை, செல்லத்துரை (மட்டுவில்), கணபதிப் பிள்ளை, வைரவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி செல்வராணி (ஜேர்மனி), திருமதி பாக்கியராணி (இந்தியா), சிவராசா (சுவிஸ்), திருமதி சித்திராணி (சாவகச் சேரி ஆதார வைத்தியசாலை), அமரர் புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசமூர்த்தி (ஜேர்மனி), ஜெகதீஸன் (இந்தியா), விஜயகுமார், திருமதி மகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுஷா-கேதீஸ்வரன், ரேணுகா-சுஜீபன், அகிலன், விசாகினி, விமோசனா, ஐங்கரன், அஜித்தா, கோபிகா, சேந்தன், சயந்தா, தர்சனா ஆகியோரின் அன்புப் பேரனும், அக்சனா, அரணியா, அட்ஷயா, அபினயா ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயிலாமனை,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

தகவல்:
கந்தையா விஜயகுமார் (மருமகன்),
செல்லத்துரை சுப்பிரமணியம் (பெறாமகன்).

### இராசம்மா குலசேகரம்பிள்ளை



வேலணை கிழக்கு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா குலசேகரம்பிள்ளை நேற்று 03.03.2010 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வள்ளிபுரம்- இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமார்-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், லீலாவதி, புனிதவதி, இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி, தம்பிஐயா, சிவபாலன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ் சென்றவர்களான சொர்ணம்மா, சோமசுந்தரம் மற்றும் சண்முகராஜா, ஐயாத்துரை, காலஞ்சென்ற சிவராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சசிகுமார், சசிகலா, சாந்தநிதி, சந்திரகுமார், சரண்யா, தர்சினி, சுபாசினி, கமலினி, கஜன், சிவலக்சன், சில்வியா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், கௌசிகா, டிலக்சனா, லகீசன், நிரூஷன், விதுஜா, விரிஷா, மீனா, விக்னேஸ்வரன், டிலான், ஜாலினி, கஜிபன் ஆகியோரின் அன்புப் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாட்டி இந்து மயானத்திற்கு இன்று (04.03.2010) வியாழக்கிழமை பிற்பகல் 4மணிக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தவிடுதின்னிப்பிள்ளையார்
கோவிலடி, வேலணை கிழக்கு,
3ஆம் வட்டாரம்.
தொ.பே. 0217900052 (95407)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜன் - கதிர்காமர் வெற்றிக்கிண்ணத்தை போராடிக் கைப்பற்றியது சென். பற்றிக்ஸ்

## யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆரம்பவீரர்கள் சோபிக்கவில்லை

வலி.வடக்கு, மார்ச் 4

ராஜன் - கதிர்காமர் வெற்றிக்கிண்ணத்தை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி பெரும் போராட்டத்தின் மத்தியில்



கைப்பற்றியுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே மட்டுப்படுத்திய 50 ஓவர்களுக்கான கிரிக்கெட்போட்டி யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி யாழ்ப்பா ணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கமில்டன், மனோஜ் ஆகியோர் களமிறங்கித் துடுப்பெடுத்தாடினார்கள்.

13 பந்துகளில் 10 ஓட்டங்களை பெற்றி ருந்த கமில்டன் நிகே தனின் பந்தை அடிக்கமுற்பட்டபோது நிரோசனிடம் பிடிகொடுத்து வெளியேற ரியூடர் ஆடுகளத்திற்கு வந்தார்.

9.1 ஓவர்களில் 33 ஓட்டங்களை அணி பெற்ற நிலையில், 49 பந்துகளில் 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த மனோஜ், ஸ்ரீகுகனின் பந்திற்கு முகம் கொடுக்கமுடியாமல், பிரியலக்ஸனிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து ஜெகான் துடுப்பெடுத்தாட வந்தார்.

15 ஓவர்களில் அணியின் ஓட்ட எண்ணக்கை 41 ஆக இருந்த போது ரியூடர் 13 பந்துகளில் 02 ஓட்டங்களை பெற்ற நிலையில் பிரியலக்சனின் பந்தை அடிக்க முற்பட்டு நிகேதனிடம் பிடிகொடுத்து வெளியேற தொடர்ந்து மைக்கல் களமிறங்கினார்.

மைக்கலும் ஜெகானும் களத்தில் நிதானமாக நிலைத்து நின்று விளையாடினர். 29.3 ஓவர்களில் 95 ஓட்டங்களை அணி பெற்ற நிலையில், ஜெகான் 45 பந்துகளில் 21 ஓட்டங்களைப் பெற்று நிகேதனின் பந்து வீச்சில் சீராளனிடம் பிடி கொடுத்து வெளியேறினார். இதனைத் தொடர்ந்து மைக்கலுடன் மிலாண்டோ இணைந்து கொண்ட போதிலும் மைக்கல் 59 பந்துகளை சந்தித்து 23 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிரசாந்தின் பந்தை அடித்து விளையாட முற்பட்டபோது விக்கெட்டை இழந்து வெளியேறினார்.

தொடர்ந்து களமிறங்கிய நவதீபன் அதிரடியாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை அதிகரிப்பார் என்று ரசிகர்கள் எதிர் பார்த்தனர். இந்நிலையில் 10 ஓட்டங்களைப் பெற்றிருந்த மிலாண்டோ பிரசாத்தின் பந்தில் பெஞ்சமினிடம் பிடிகொடுத்து மைதானத்தை விட்டு நடையைக் கட்டினார்.

இந்த நிலையில் கிளின்ரன் களமிறங்கினார். நவதீபன் 05 பந்துகளில் ஆறு ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிரசோபனால் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டார்.

தொடர்ந்து கவாஸ்கர் களமிறங்கினார். இருந்த போதிலும் மறுமுனையில் கிளின்ரன் 15 பந்துகளில் 06 ஓட்டங்களைப் பெற்று நிகேதனின் பந்தைத் தடுக்க முற்பட்டு 'எல்.பி.டபிள்யூ' முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து எரிக்பிரதாப் துடுப்பாட்டத்தை ஆரம்பித்து நிதானமாக விளையாடினார். 38.3 ஓவர்களில் அணி 125 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 03 பந்துகளில் 05 ஓட்டங்களைப் பெற்ற கவாஸ்கர், பிரசாத்தின் பந்து வீச்சில் ஸ்ரீகுகனிடம் பிடிகொடுத்து வெளியேற சஜீந்திரன் களமிறங்கினார்.

எரிக்பிரதாப் - சஜீந்திரன் இணை மெதுவாக ஓட்டங்களைப் பெற்ற நிலையில் எரிக்பிரதாப் 44 பந்துகளில் 14 ஓட்டங்களைப் பெற்றநிலையில் நிகேதனின் பந்தில் சீராளனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

சஜீந்திரன் 22 பந்துகளில் 20 ஓட்டங்களைப் பெற்று இறுதிவரை ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார். உதிரிகளாக 37 ஓட்டங்கள் பெறப்பட்டமை பற்றிக்ஸ் கல்லூரி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற வழிகோலியது.



யாழ்ப்பா ணக் கல்லூரியைச் சேர்ந்த நிகேதன் 09 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 14 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், பிரசாத் 08 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், ஸ்ரீகுகன், நிரோசன், பிரியலக்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

170 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னணி வீரர்கள் எதிர்பார்ப்பை ஈடுசெய்வது போல விளையாடாததால் யாழ்ப்பாணக் கல்லூரி தோல்வியை தழுவிக் கொண்டது.

அந்த அணி 46.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 151 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. உதிரிகளாக 10 ஓட்டங்கள் பெறப்பட்டன.

ஆரம்ப வீரர்களாக பெஞ்சமின், பிரசோபனன் ஆகியோர் களமிறங்கினர். எனினும் 1.2 ஓவர்களில் பெஞ்சமின் 08 பந்துகளில் 04 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் எரிக்பிர தாப்பின் பந்து வீச்சில் 'எல்.பி.டபிள்யூ' முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.



தொடர்ந்து பிரசாத் களமிறங்கிய போதிலும் 02 பந்துகளை சந்தித்து ஓட்டம் எதுவும் பெறாத நிலையில் எரிக்பிரதாப் வீசிய பந்தில் ஜெகானிடம் பிடிகொடுத்து 1.4 ஓவர்களிலேயே வெளியேறினார். பென்டில்கரன் களமிறங்கி மெதுவாக ஓட்டங்களைப் பெற்றார். இந் நிலையில் 12.3 ஓவரில் அணி 51 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது பென்டில்கரன் 30 பந்துகளில் 13 ஓட்டங்களுடன் கிளின்ரனின் பந்தைச் சந்தித்து ஜெகானிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

தொடர்ந்து நிகேதன் களமிறங்கி பிரசோபனுடன் இணைந்து இணைப்பாட்டமாக 35 ஓட்டங் களைப் பெற்றார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 17.3 ஓவரில் 86 ஆகக் காணப் பட்ட நிலையில் பிரசோபன் 10 'பௌண்டரிகளுடன்' 54 பந்துகளில் 53 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கமில்டனின் பந்துவீச்சில் கிளின்ரனிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அடுத்து களமிறங்கிய ஸ்ரீகுகன் துடுப்பாட ஆரம்பிக்க மறுமுனையில் நிகேதன் 13 பந்துகளில் 9 ஓட்டத்துடன் கவாஸ்கரின் பந்தில் ஜெகானிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

பின்னர் நிரோசன் களமிறங்கிய நிலையில் ஸ்ரீகுகன் 11 பந்துகளில் 2 ஓட்டத்தைப் பெற்றிருந்த போது கவாஸ்கரின் பந்தை அடிக்கமுற்பட்டு ஜெகானிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

சீராளன் துடுப்பாட்டத்தை ஆரம்பிக்க வந்தபோது நிரோசன் 7 பந்துகளில் 3 ஓட்டங்களைப் பெற்று கவாஸ்கரின் பந்து வீச்சில் ஜெகா னிடம் பிடிகொடுத்து வெளியேறினார். 22.1 ஓவரில் 92 ஓட்டங்கள் என்ற நிலையில் அணி காணப்பட்டது.

எனினும் மதுசன் போட்டியின் போக்கை மாற்றுவதற்காக மிகவும் நிதானமாக களத்தில் நின்றதுடன் ஓட்டங்கள் பெறுவதிலும் கவனம் செலுத்தினார்

எனினும் 12.2 ஓவரில் 21 ஓட்டங்களை மட்டும் பெற்ற நிலையில் சீராளன் 33 பந்துகளில் 18 ஓட்டங்களுடன் மனோஜ் வீசிய பந்திற்கு கவாஸ்கரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பிரியலக்சன், மதுசன் மெதுவாக ஓட்டம் எடுத்து விளையாடி 10.2 ஓவரில் இணைப்பாட்டமாக 29 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிரிய லக்சன் 24 பந்துகளில் 12 ஓட்டங்களைப் பெற்று சஜீந்திரனின் பந்து வீச்சில் விக்கெட்டை இழக்க கோமளதரன் இறுதி ஆட்டக்காராக களமிறங்கினார்.

ஆனாலும் மதுசன் 83 பந்துகளில் 17 ஓட்டங்களுடன் காணப்பட்ட நிலையில் சஜீந்திரன் வீசிய பந்தை அடித்துவிட்டு ஓடமுற்பட்ட நிலையில் சஜீந்திரனால் 'ரன்அவுட்' செய்யப்பட்டார்.

கோமளதரன் 07 பந்துகளில் 9 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் கவாஸ்கர் 10 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 23 ஓட்டங் களுக்கு 3 விக்கெட்டுக்களையும் எரிக்பிரதாப் 8 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சஜீந்திரன், கிளின்ரன், மனோஜ், கமில்ரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்கள் (50-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# நட்பு ரீதியான உதைபந்தாட்டப் போட்டியில் பங்கேற்க யாழ்.தெரிவு அணி மாத்தறை சென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 04

வடக்கு-தெற்கு மாகாணங்களுக்கிடையே நட்புறவை ஏற்படுத்தும் வகையில் யாழ்.லீக் தெரிவு அணிக்கும் மாத்தறை லீக் அணியினருக்குமிடையிலான நட்பு ரீதியான உதைபந்தாட்ட போட்டிப் இன்று வியாழக்கிழமை இரவு 7மணியளவில் மின்னொளியில் மாத்தறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்.லீக் அணியினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாத்தறைக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

யாழ்.லீக் அணியின் முகாமையாளர் ரி.சுரேந்திரன், யாழ். லீக்செயலாளர் மு.பிரான்ஸிஸ், தெரிவுக்குழுத் தலைவர் மரியதாஸ், செயலாளர் [illegible] ஆகியோரும் இந்த அணியி[illegible]னர். (04-23)

# ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்கான போட்டிகள் இன்று ஆரம்பம்

வலி.வடக்கு, மார்ச் 04

வடமாகாண ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக வடமாகாண, மாவட்ட, கல்வி வலயங்களுக்கு இடையே நடைபெறும் 'ருவெண்ரி 20' கிரிக்கெட் போட்டி மற்றும் உதைபந்தாட்டப் போட்டி என்பன இன்று காலை 8.30மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

வடமாகாணத்துக்கு உட்பட்ட யாழ். [illegible] 5கல்வி வலயங்க[illegible] வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த தலா இரண்டு கல்வி வலய அணிகள் வீதம் ஆறு அணிகளும், கிளிநொச்சி மாவட்ட ஒரு கல்வி வலய அணியுமாக மொத்தம் 12அணிகள் இப் போட்டிகளில் கலந்து கொள்கின்றன.

இன்று ஆரம்பமாகும் இப் போட்டிகளுக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இப்போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கு முறையே 2லட்சம், ஒரு லட்சம் ரூபா பணப்பரிசில்களும் மற்றும் பதக்கங்கள், கேடயங்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளன. (50-86)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கடவுள் ஒருவரே?

சூரியன் உதிக்கும் போது மரத்தின் உச்சியில் அதன் ஒளிக்கதிர்கள் படிகின்றன. ஆனால் மரத்தின் கீழ் கொஞ்சம் நிழல், கொஞ்சம் வெளிச்சம் எனப் பலவகையாக ஒளி பிரிக்கப்படுகிறது. ஆனால் சூரியன் மட்டும் ஒன்றுதான், ஆனால் பரவியிருக்கும் கிளைகளில் ஒளியும் நிழலும் மாறிமாறி ஏற்படுகின்றன. இதெல்லாம் மரக்கிளைகள் உருவாக்குபவையே தவிர சூரியன் இதற்குப் பொறுப்பாகாது. சூரியன் ஒன்றே.

ஆனால் வெவ்வேறு வடிவங்களில் தென்படுகின்றது. அதே போல் கடவுள் ஒன்றே. எண்ணங்களைப் பொறுத்து மனிதனுக்கு அவர் தென்படுகின்றார். தெய்வத்துக்கு அநேக வடிவங்கள் இருப்பதாக நினைக்கிறீர்கள். நிஜந்தான், ஆனால் எல்லாவடிவமும் இறைவன் தான் எனப் புரிந்து கொள்ளுங்கள். ஒருவடிவத்திற்கும் மற்ற வடிவத்துக் குமிடையே எந்த சம்பந்தமும் இல்லாமல் போகலாம்.

அலைகள் பலவிதத்தில் எழுந்து புரண்டு கரையை நோக்கி ஓடிவரலாம். அவைகள் வேறு வேறாயினும் சமுத்திரம் மட்டும் ஒன்றுதான் அல்லவா? அலைகள் வேறுபட்டிருந்தாலும் அலைவேறு கடல் வேறு என எண்ண முடியுமா?

இங்கு ஒரு பிராமணன் இருக்கின்றான். அவர் உள்ளே பூசை செய்கின்றார். பூசை செய்யும் வரை அவர் பூசாரி, பிராமணன் என அழைக்கப்படுகின்றான். சமையலறையில் போய் சமையல் செய்தால் அவர் பிராமண சமையல் காரர் என அழைக்கப்படுகிறார். அதே பிராமணர் பஞ்சாங்கம் பார்த்துச் சொல்லும் போது அவர் பஞ்சாங்கப் பிராமணனாகக் கருதப்படுகின்றார். பிராமணன் ஒருவரே அவரது செயல்களை வைத்துப் பெயர்கள் அமைகின்றன.

அதேவிதமாகக் கடவுள் ஒருவரே எத்தனையோ வடிவங்களைத் தாங்குகின்றார். இந்தப் பெயர்களும் வடிவங்களும் நமது கற்பனைகளே. தெய்வத்துக்கு பெயரும் இல்லை வடிவமும் இல்லை.

நிர்க்குணம், நிரஞ்சனம், சனாதனம், நிகேதனம், நித்ய, சுத்தபுத்த, முக்தநிர்மல, ஸ்வரூபணம் என வேதங்கள் அவரை அழைக்கின்றன. இத்தகைய தெய்வத்தை நாம் புரிந்து கொள்ளாமல் அனேகப் புனித நூல்களைப் படிக்கின்றோம். பலவிதமான குருக்களைத் தேடிச் செல்கின்றோம். எத்தனையோ ஆன்மீக விடயங்களை கேட்கின்றோம். இத்தனைக்கும் பிறகு நமக்குக் கிடைப்பது என்ன? கடைசியில் பார்த்தால் நமக்குக் கிடைக்கப் பெறுவதில்லை என்பதை உணருகின்ஜோம்.



மேகம் முழுவதும் கறுத்திருக்கின்றது. அத்தகைய அடர்ந்த கறுத்த மேகத்துக் கிடையே வெளுத்த ஒளியுடன் கூடிய மின்னலைக் காண்கின்றோம். மேகத்தினிடையே தோன்றும் மின்னல் எப்படிக் கறுத்த சூழலையும் ஒளிமயமாக மாற்றுகின்றதோ, அதே போல் உன் உள்ளத்திலும் நீ கற்ற கல்வி நல்ல மாற்றத்தை உருவாக்க வேண்டும். தெய்வீகம் என்பது கறுத்த மேகங்களுக்கிடையே காணப்படும் மின்னல் ஒளிக் கீற்றுப்போன்றது. அவ்வொளி வெள்ளத்தில் மனமும் கூட நம் கண்ணில் படாமல் மறைகின்றது. மனமே மறைந்த பிறகு நீயாரைப் பற்றிக்கொள்ள வேண்டும். யாரைப் பூஜிக்க வேண்டும்.

## சாயி சிந்தனை

# சுற்றுலாப் பயணிகள் பொது நூலகத்தை பார்வையிடுவதற்குப் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணம் வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் யாழ். பொது நூலகத்தைப் பார்வையிடுவதற்குக் கட்டுப்பாடுகள் விதிக் கப்பட்டுள்ளன.

யாழ். மாநகராட்சிமன்றம் இந்தப் புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

தினமும் மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரையே நூலகத் தைப் பார்வையிட முடியும். நூலகத்திற்குள் படம் எடுத்தல், வீடியோ எடுத்தல், கைத்தொலைபேசி பாவித்தல், சத்தம் போடு தல் போன்றவை தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

நூலகப் பாவனைக்கு வரும் பொதுமக்களுக்கு சுற்றுலாப் பயணிகளால் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கும் முகமாகவே இந்தப் புதிய நடைமுறையை மாநகராட்சிமன்றம் அமுல்படுத் தியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

04.03.2010 இல் மணிவிழாக் காணும் நாயகன்

**உயர்திரு. வீ.இராசையா**

B.Ed. (Hons), M.Phil, S.L.E.A.S - I அவர்கள்
(வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்)

முப்பத்து நான்கு வருட கல்விப் பணியில்
26 வருடங்கள் கல்வி நிர்வாக சேவையில் (S.L.E.A.S)
பதவி உயர்வு பெற்று சேவையாற்றி வரும்



உயர்திரு வீ.இராசையா அவர்கள்
அகவை அறுபதைப்
பூர்த்திசெய்து மணிவிழாக்
காணும் நாயகனை எமது
பாடசாலைச் சமூகம்
வாழ்த்துவதுடன் அவரது
கல்விப்பணி மேலும் தொடரவும்,
நீண்ட ஆயுளுடன்
சிறப்புற வாழவும்
வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி
வித்தியாசாலை.

(95388)



## பாராளுமன்றத் தேர்தல் - 2010



தேர்தல் மாவட்டம் இல. 10
யாழ்ப்பாண மாவட்டம்.

சுயேட்சைக் குழு இல. 11






தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக
அதனை நன்கு புரிந்து கொண்ட
அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின்
தலைமையைப் பலப்படுத்த
இலங்கை மக்கள் கட்சியில் இணைந்துள்ளேன்.
உங்கள் வாக்கை மாங்கனி சின்னத்திற்கு இடுவதுடன்
விருப்பு வாக்கு 1 ஐ எனக்கு அளிக்குமாறு
வேண்டுகின்றேன்.

| 2 | கலாநிதி கந்தையா குணராசா | 1 |
|---|---|---|

புத்திலங்கை



## உதவி நிர்வாக அலுவலர் தேவை

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்திற்கு ஆங்கிலம் மற்றும் கணக்கீட்டு அறிவுள்ள அரச, தனியார் நிறுவனங்களில் கடமைபுரிந்து ஓய்வுபெற்ற அலுவலர் தேவை.
விண்ணப்பங்கள் 10.03.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்**

*இல. 165, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி/565362)



## தேவை

சமையல் வேலை செய்வதற்கும், சப்பிளை செய்வதற்கும் தகுதியான வேலை ஆள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப் படும்.
தொடர்பு:
*சரஸ்வதி சைவ உணவகம்*
*கிறீம் ஹவுஸ்*
பிரதானவீதி, பண்டத்தரிப்பு. தொ.பே: 0214900749



## T.V கள் விற்பனைக்கு

புதிய Sony Wega 21"T.V கள் 26000/=, $G_{21}Q_{2}$ 14000, புதிய இரட்டைக்கதவு SISIL குளிர் சாதனப் பெட்டிகள், ரேடியோக்கள் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: இ.மகேஸ்வரன் (அப்பளக்கொம்பனி)
சீனிப்புளியடி ஆரம்பப்பாடசாலை அருகில்,
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
T.P: 0771393670



## மனமுவந்து பாராட்டுகிறோம்



யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள்
வணிக பீட பீடாதிபதியும் மாணவர்
மனங்களை வென்றவருமாகிய

**திருவாளர்**
**கந்தையா தேவராஜா**

அவர்கள் பேராசிரியராகப் பதவியுயர்வு
பெற்றதையிட்டு மாணவர்களாகிய நாங்கள்
மனமுவந்து பாராட்டுகின்றோம்.
அத்துடன் மேன்மேலும் அவரது
உயர்வுக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

2007 மூன்றாம் வருட மாணவர்கள்
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.








வரணி, இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பொருளியல்துறையின் வெளிக்கள சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சந்திரசேகரம், கோட்டக்கல்வி அதிகாரி கே.சிவானந்தம், ஓய்வுபெற்ற அதிபர் சி.துரைராசா ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், விருந்தினர்கள் மாணவர்களினால் அழைத்துவரப்படுவதை இரண்டாவது படத்திலும், மாணவர்களின் இடைவேளை நிகழ்வின் ஒரு காட்சியை மூன்றாவது படத்திலும் காணலாம். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புண்ணிய நாச்சியம்மையார் தினம் அண்மையில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.இதில் ஆசிரியர் இரா.செல்வவடிவேல் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்விவலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் இதில் இடம்பெற்ற மாணவி ஒருவரின் பண்ணிசை நிகழ்வை மூன்றாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள் : சுகந்தன்)

# மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## டாக்டர் யமுனானந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம் மார்ச் 4

தற்போது நிலவும் அமைதியான சூழ் நிலையைப் பயன்படுத்தி மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை மீளவும் இயங்கச் செய்ய வேண்டுமென மாவட்ட காசநோய் வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.யமுனானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்தகால அசாதாரண சூழ்நிலைகளினால் 1990 ஆம் ஆண்டில் இருந்து இந்த வைத்தியசாலை இயங்காமல் உள்ளது.

தற்போது உள்ள அமைதியான சூழ் நிலையைப் பயன்படுத்தி இந்த வைத்திய சாலையை மீளவும் இயங்கவைக்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது கோப்பாய் வைத்தியசாலையிலேயே காசநோயாளர்கள் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.இதனால் இந்த வைத்தியசாலையில் இட நெருக்கடிகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்த நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை மீளச் செயற்படுத்துவதே ஒரேயொரு வழி- என்றார். (50-224)

# மூளாய் வைத்தியசாலையில் இன்று கண்பரிசோதனை

யாழ்ப்பாணம்.மார்ச் 4

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் இன்று பிற்பகல் 2 மணியிலிருந்து இலவச கண்புரை பரிசோதனை நடத்தப்படவுள்ளது.

மனிதநேயம் நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் இப்பரிசோதனையில் கண்வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.குகதாசன் தலைமையிலான குழுவினர் பரிசோதனை நடத்துவார்கள். அத்துடன் சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டியவர்கள் இனம் காணப்பட்டு அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி பரிசோதனையில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்களின் பொருளாதார நிலைமைகளைக் கருத்திற் கொண்டு சத்திரசிகிச்சைச் செலவுகளை முழுமையாகவோ, பகுதியாகவோ மனித நேயம் நம்பிக்கை நிதியம் பொறுப்பேற்கவுள்ளது என்பதைக் கவனத்தில் கொண்டு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (50-16)

# 'எதிர்பார்ப்பு' குறுந்திரைப் படம் வவுனியாவில் வெளியிடப்பட்டது

வடமராட்சி,மார்ச் 4

காப்பு, பள்ளிக்கூடம் ஆகிய குறும் படங்களின் இயக்குநர் சு.வரதகுமாரின் இயக்கத்தில் ''எதிர்பார்ப்பு'' என்னும் குறுந் திரைப்படம் வெளிவந்துள்ளது.

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள குறுந்திரைப்படக் கல்லூரி மாணவர்கள் தயாரிப்பில் வெளிவந்துள்ள இக் குறும் படத்தை வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.ஆர்.ஏ.ஒக்ஸ்வேட் வெளியிட்டுவைத்தார்.

சிறுவன் ஒருவனின் உளவியல் பிரச்சினையை முன்வைத்துள்ள இப்படம், சம்பவம் ஒன்றினால் தாய், தந்தை காணாமல் போனபின் சிறுவன் எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகளை யதார்த்தமாக சித்தரிக்கிறது.

பலரது வரவேற்பைப் பெற்றுள்ள இத் திரைப்படம் வவுனியாவில் உள்ள கிராமங்கள், பாடசாலைகளில் காண்பிக்கப் பட்டு வருவதுடன் தேசிய மரபுரிமைகள் அமைச்சு நடத்திய குறும்படப் போட்டியில் இலங்கையில் முதலிடம் பெற்றுள்ளது.

இத்திரைப்படம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் காண்பிக்கப்பட்ட பின்பு குடாநாட்டின் பல பகுதிகளிலும் காண்பிக்கப்படவுள்ளது. (50-236)



யாழ்.நகரில் கே.கே.எஸ். வீதியில் வண்ணை சிவன் கோயிலுக்கு அருகில் நேற்றுக்காலை பொருள்களுடன் வந்த கனரக வாகனம் ஒன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. மின்கம்பத்துடன் மோதிய வாகனம் மின்கம்பத்தை இழுத்துச்சென்று வீதிக்கு குறுக்கே நின்றபோது எடுக் கப்பட்ட படம் இது. (படம் : நந்தன்)

# மக்கள் வங்கிக் கிளைகளில் மீட்கப்படாத அடகு நகைகள் ஏலத்தில் விற்பனை

யாழ்ப்பாணம், மார்ச்4

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகள் அவற்றின் சேவை நிலையங்களில் கடந்த 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை அடகு வைத்து மீட்கப்படாத தங்க நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக்கிளையில் இடம்பெறும் இந்த ஏலவிற்பனையில் மீட்கப்படாத நகைகள் ஏலத்திற்கு விடப்படும் திகதிகளும் கிளைகள், சேவை நிலையங்கள் விவரம் வருமாறு:

எதிர்வரும் 16 ஆம் திகதி - யாழ். பிரதான வீதி, சங்கானை, காங்கேசன்துறை ஆகிய கிளைகள், உரும்பிராய் சேவை நிலையமும்.

17 ஆம் திகதி - யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை, மானிப்பாய், மல்லாகம் சேவை நிலையங்கள்.

18 ஆம் திகதி - சாவகச்சேரி, யாழ். பல்கலைக்கழக கிளைகள், திருநெல்வேலி சேவை நிலையம்.

19 ஆம் திகதி - அச்சுவேலி, சுன்னாகம் கிளைகள்.

20 ஆம் திகதி -பருத்தித்துறை நெல்லியடி,வல்வெட்டித்துறைகிளைகள்.

21 ஆம் திகதி - யாழ். கன்னாதிட்டிக்கிளை, இணுவில் சேவை நிலையம். (50-236)

# குடாநாட்டில் உள்ள நூலகங்களின் பயன்பாட்டுக்கு ஒரு தொகுதி நூல்கள்

## தேசிய நூலக ஆவணமாக்கல் சபை வழங்கியது

யாழ்ப்பாணம்,மார்ச் 4


தேசிய நூலக ஆவணமாக்கல் சபை யாழ்.குடாநாட்டில் உள்ள நூலகங்களின் தேவைக்கென ஒரு தொகுதி நூல்களை வழங்கியுள்ளது.

இந்த நூல்களைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மாலை யாழ். பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நூல்கள் குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு பிரதேச சபைகளின் நூலகங்களுக்கும் விநியோகிக்கப்பட்டன.

பிரதேச சபைகளைச் சேர்ந்த பிரதிநிகள் இந்த நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை வன்னிப் பகுதியில் உள்ள பிரதேச சபைகளின் நூலகங்களுக்கும் தேசிய நூலக ஆவணமாக்கல் சபை நூல்களை விரைவில் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)




# தேசிய நாட்டிய விழாப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்4

இலங்கைக் கலாசாரத் திணைக்களமும் இலங்கைக் கலாமண்டலத்தின் தேசிய நாட்டியப் பொம்மலாட்டப் பிரிவும் இணைந்து ஒழுங்கு செய்து நடத்தும் ''தேசிய நாட்டிய விழா 2009'' இற்கான போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் நடைபெற இருந்த இப்போட்டிகள் இம் மாதம் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள் ளதாக கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மூன்று சுற்றுக்களாக நடைபெறும் இப்போட்டிகளில் முதல் சுற்றுப்போட்டி மாவட்டமட்டப் போட்டிகளாகவும், இரண்டாம் சுற்றுப் போட்டி மாகாணமட்டப் போட்டிகளாகவும், இதில் மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பத்துக் குழுக்கள் பங்குபற்றும் மூன்றாம் சுற்றுப் போட்டியாக தேசிய மட்டப் போட்டி நடைபெறும். இதில் மாகாண மட்டப் போட்டி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து குழுக்கள் பங்குபற்றும்.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றும் தனியார் கலைக் கூடங்கள் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (50-16)

# பெரும்பாலான வயல் நிலங்களில் இம்முறை இயந்திரம்மூலம் நெல் அறுவடை

யாழ்ப்பாணம்.மார்ச் 4

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இம்முறை இயந்திரம் மூலம் நெல் அறுவடை செய்யும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

கூடுதலாகத் தென்மராட்சிப் பிரதேசத்திலேயே இயந்திரம் மூலம் நெல் அறுவடை செய்யும் பணிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கென தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட இயந்திரங்கள் மூலமே இம்முறை அறுவடைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் வலிகாமம் மேற்குப் பகுதியிலும் சிலர் தமது வயல்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்களை இயந்திரம் மூலம் அறுவடைசெய்து வருகின்றனர். (50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடல்சார் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் CINEC கல்வி வளாகம்

இலங்கையில் 1945இல் உருவாக்கப்பட்ட இலவச கல்விக் கொள்கையால் மூன்றாவது கல்வி நிலையை எட்டுவதற்காக அதிகளவு மாணவர்கள் போட்டியிடும் நிலை தோன்றியுள்ளது.

இருந்தபோதிலும் மூன்றாவது கல்வி நிலைக்கான அனுமதி பல விதத்திலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இதற்கான வாய்ப்பு 11 வீதமான மாணவர்களுக்கே வழங்கப்படுகின்றது. இதில் 3 வீதமானோர் மட்டுமே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் CINEC பெறுமதிவாய்ந்த கல்வியை மாணவர்களின் கேள்விக்கும் சந்தைத் தேவைக்கும் ஏற்றவாறு வெற்றிகரமாக வழங்கி வருகின்றது.

இதுபற்றி CINEC வளாகத்தின் நிகழ்ச்சித் திட்ட அலுவலர் மதுரங்க பெரேரா கூறுகையில், ''உலகெங்கும் எண்ணிலடங்காத அளவில் பல்கலைக்கழகங்களும், கணக்கிலடங்காத கல்வித் திட்டங்களும் உள்ளன. ஆனால் ஜி.சீ.ஈ சாதாரண தரம் , உயர்தரம் என்பனவற்றைப் பூர்த்திசெய்த நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு அவர்களின் சொந்த மண்ணிலேயே உலகத் தரம் வாய்ந்த வளாகம் ஒன்றுள்ளது - அது CINEC ஆகும்''

CINEC 1990 இல் ஸ்தாபிக்கப்பட்டது. அத்துடன் அது அடிப்படையில் பெருமைமிக்க அரிதாகக் காணக்கூடிய நான்கு பெருமைமிக்க முகாமைத்துவ ஒழுங்கு முறையைக் கொண்டுள்ளது. அவையாவன:

(I) தர உத்தரவாத நியமம்
(II) சுற்றுச் சூழல் நியமம்
(III) தொழில் முறையான சுகாதாரப் பாதுகாப்பு நியமம்
(IV) DNV கடல்சார் கல்வியியல் நியமம் என்பனவாகும்.

மேலும் ஓர் ஒழுங்கான கட்டமைப்பைக் கொண்ட CINEC நான்கு முக்கிய பீடங்களைக் கொண்டுள்ளது. இவை 150இற்கும் மேற்பட்ட தரம் வாய்ந்த கல்வித் திட்டங்களைக் கொண்டுள்ளதுடன் இவையெல்லாம் கடல்சார் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கக் கூடியன.

CINECஇனால் உருவாக்கப்பட்ட சர்வதேச போக்குவரத்து முகாமைத்துவத்தில் B.Sc பட்டமானது Dalian கடல்சார் பல்கலைக்கழகத்தால் (Dmu) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பல்கலைக்கழகமானது இந்தப் பாடத்தில் மிக உயர்ந்த இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் CINECஇல் B.Sc பட்டம் பெற்ற மாணவர்களை இந்தப் பல்கலைக்கழகம் M.Sc, M.B.A.,PhD பட்டங்களைப் பெறுவதற்கு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

CINEC மாணவர்களிடம் சமீபத்தில் ஒருமுறை கேள்வி கேட்டபோது ''எமது நோக்கம் பரீட்சையில் சித்தி பெறுவது மட்டுமல்ல. விஞ்ஞான பூர்வமான அறிவும், தொழிற்கல்வியில் தேர்ச்சி பெறுவதுமே ஆகும். இவை நாம் நல்ல வேலைவாய்ப்புக்களைப் பெறவும், அதிக வருமானம் ஈட்டவும் உதவும்'' என்று பதிலளித்துள்ளார்கள்.

CINEC இனால் வழங்கப்படும் வர்த்தக விஞ்ஞானப் பட்டத்தின் நோக்கமே உயர் மனோதிடமுள்ள பட்டதாரிகளை உருவாக்குவதே. அத்துடன் அவர்கள் நடப்பு விஞ்ஞான அறிவும், தொழில்நுட்ப பயிற்சியும் உள்ளவர்களாகத் திகழ்வார்கள்.

மேலும் ஒரு முக்கியமான சேவையை CINEC வழங்குகின்றது. மாணவர்கள் தமது கல்வியறிவினை கடல்சார் பொறியியல் முகாமைத்துவத்தில் அதிகரித்துக்கொள்ளும் பொருட்டு ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, சீனா ஆகிய நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் இணைந்து சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளத்தக்க பட்டய நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டுள்ளமையே அச்சேவை ஆகும்.

## வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் இம்பீரியல் உயர்கல்வி நிறுவனம்

1996 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் உயர் கல்வியை வழங்கி வருகின்ற மிக பழமையும் அனுபவமும் கொண்ட பல்கலைக்கழகமாக விளங்குவதில் இம்பீரியல் இன்ஸ்டிட்டியூட் மற்றும் வேல்ஸ் பல்கலைக்கழகம் பெருமைபட்டுக் கொள்ள முடியும்.

**1996 ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கையில் தரமான உயர்கல்விக்கான முன்னோடி நிறுவனம்**

வேறு எந்தவொரு இலங்கையிலுள்ள பல்கலைக்கழகமும் இம்மாதிரி சாதனைகளைப் புரிந்துள்ளதாகவோ நிறைவேற்றியிருப்பதாகவோ பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது.

இது வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் தரத்தினை நிலைநாட்டி வருவதை நிரூபிப்பதாகவுள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்தின் உயர்தன்மையானது அது பயிற்றுவித்து வெளியேற்றும் மாணவர்களின் தரத்தைக் கொண்டு அல்லாமல் அது உள்வாங்கிக் கெள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கொண்டு கணிக்கப்படுவதில்லை.

இம்பீரியல் இன்ஸ்டிடியூட்டின் வாயில் வழியாக உள்ளே நுழைகின்ற ஒரு மாணவரானவர் தனது துறையில் திறமையான ஒருவராக முன்னேறும் வாய்ப்பினைப் பெறுகின்றார். ஒரு பல்கலைக்கழக பெறுமதிமிக்க சான்றிதழானது தொழில்துறைகளில் புதிய வழித்தடங்களாக திறந்து விடுவதாக அமையும் .அவ்வாறாயின் பெறுமதிமிக்க பல்கலைக்கழகச் சான்றிதழ் ஒன்றினை எவ்வாறு பெற்றுக் கொள்ளவது?

நிலைபெற்ற இடைநிலைக் கல்வியை வழங்குகின்ற ஒரு நிறுவனத்தினால் மட்டுமே இதனை வழங்கமுடியும். கல்வித்துறை சிறப்பியல்பு, புகழ்பெற்ற ஒரு பல்கலைக்கழகத்துடனான நீண்ட காலத் தொடர்பு, சர்வதேச மற்றும் உள்நாட்டுத் தொழில்துறைகளுக்கு திறமையானவர்களை உருவாக்கி வழங்கியுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகமொன்றாக அது இருத்தல் வேண்டும்.

இந்த தனித்துவமான தகுதிகளை உயர்கல்விக்கான இம்பீரியல் இன்ஸ்டிடியுட் நிறைவு செய்வதாய் உள்ளது. உயர்கல்விக்கான இம்பீரியல் இன்ஸ்டிடியூட்டின் பட்டமொன்று ஐக்கிய ராஜ்யத்தின் வேல்ஸ் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுவதானது வெற்றிகரமான பட்டதாரிகளை உருவாக்கி வெளிப்படுத்துகிறது என்பதாகும். இவர்களுக்கு உலகம் முழுவதும் வாய்ப்புகள் இருக்கின்றன. மேலும் இது ஒரு மூலதனமாகும். அதன் பெறுபேறுகளை உடனடியாகவே அறுவடை செய்யக் கூடியதாகவும் இருக்கும்.

### பெறுமதி மிக்க பட்டதாரிகள் திட்டத்தின் முக்கியத்துவம்

பெறுமதிமிக்க பட்டம் என்பதானது ஒரே தன்மை கொண்ட மற்றும் சட்டபூர்வமான ஒரு திட்டமாகும். இது பிரதான அதிகாரசபையினால் வழங்கப்படுவது. மாணவர்களுக்கான கல்வி வழங்கல், மதிப்பீடு, தரம்பிரித்தல் மற்றும் உள்நாட்டில் திட்டங்களைச் செயல்படுத்தல் யாவும் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் தன்மையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தை தெரிவுசெய்யும் மாணவர்கள் அதிலேயே நிலைத்திருக்கவும் அதன் பயன்பாடுகளை அனுபவிக்கவும் செய்தவற்காக இப்படிச் செய்யப்படுகின்றது. உயர்கல்விக்கான இம்பீரியல் கழகத்தின் பட்டதாரிகள் பெற்றுக்கொள்கின்ற சான்றிதழ்களாவன வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் அதே சான்றிதழ்களாகவே அமைகின்றன.

அத்துடன் அவர்கள் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் உள்வாரி மாணவர்கள் போலவே தகுதியும் பெறுகின்றனர்.

பரீட்சையாளர்கள் வருடத்துக்கு இருதடவைகள் வருகை புரிந்து கல்வித் தரத்திலும் உள்கட்டமைப்பு விடயத்திலும் சமாந்தரமான தராதரம் பேணப்படுகின்றதா என்பதை அவதானிக்கிறார்கள்.

## நீங்கள் எதிர்பார்க்கும் அதிர்ஷ்டம் அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து

அபிவிருத்தி லொத்தர்சபை ஸ்தாபிக்கப்பட்ட தினத்திலிருந்து இலங்கையில் லொத்தர் சீட்டிழுப்புத் துறையில் நவீனமயப்படுத்தப்பட்ட லொத்தர் சீட்டிழுப்புக்களை அறிமுகப்படுத்தி வருகிறது. அந்த வகையில் 1983ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி லொத்தர் உடனடிப் பரிசு கிடைக்கும் 'சுரண்டல் டிக்கெட்' ஆகவே ஆரம்ப காலகட்டத்தில் அறிமுகமானது.

இதன் மூலம் கிடைத்த நல்ல வரவேற்பு, மக்கள் மத்தியில் அபிவிருத்தி லொத்தர் தொடர்பில் ஏற்பட்ட நம்பிக்கை ஆகியவற்றை கவனத்தில் கொண்டு, புதிய பல பரிசு விவரங்களுடன் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இலங்கை லொத்தத் சீட்டிழுப்பு வரலாற்றில் முதன்முறையாக தொலைக்காட்சி ஊடான 'வனிதா வாசனா' எனும் சீட்டிழுப்பு 1987 ஆம் ஆண்டு சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

நாட்டில் அதிர்ஷ்டத்தைப் பெற்றுக்கொள்ள மக்களின் பெயர் மற்றும் ராசி ஆகியவற்றைப் பொருந்தச் செய்து அதிர்ஷ்டத்தை பெற்றுத் தருகின்ற சந்தர்ப்பத்தை அபிவிருத்தி லொத்தர் சபை 1998ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. லொத்தர் சீட்டிழுப்பின் வரலாற்றில் முதல் தடவையாக ஜோதிடத்தை தொடர்புபடுத்தி இராசி லக்கினத்தை உள்ளடக்கி அபிவிருத்தி அதிர்ஷ்டம் எனும் பெயரில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டாலும் அந்த டிக்கெட் பொதுமக்கள் மத்தியில் ராசி அதிர்ஷ்டம் என்றே புகழ்பெற்றது.

அதன் பின்னர் 2002ஆம் ஆண்டில் லொத்தர் சீட்டிழுப்பு வரலாற்றில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி வெற்றி பெறாத டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்களுக்கு அதிர்ஷ்டத்தைப் பெற்றுத் தருகின்ற வாய்ப்பை அபிவிருத்தி லொத்தர் சபை ஏற்படுத்திக் கொடுத்தது. இதன் அடிப்படையில் வெற்றிபெறாத அபிவிருத்தி அதிர்ஷ்ட லொத்தர் டிக்கெட்டுக்களுக்கு ஐந்து முச்சக்கர வண்டிகளும், வெற்றி பெறாத சனிக்கிழமை அதிர்ஷ்டம் டிக்கட்டுக்களுக்கு ஐந்து தங்க ஆபரணங்களும் அதிர்ஷ்டப்பரிசாக வழங்கப்பட்டன.

அபிவிருத்தி லொத்தர் சபைக்கு மற்றுமொரு வெற்றிகரமான வருடமாகவே 2004 ஆம் ஆண்டு அமைந்திருந்தது. அதாவது முதல் சீட்டிழுப்பிலேயே பிரதான பரிசு ஒரு கோடி ரூபாவாக ஆரம்பிக்கின்ற சுப்பர் வெற்றிப் பரிசோடு ஜயோதா லொத்தர் சீட்டிலுப்பை அபிவிருத்தி லொத்தர் சபை சந்தைக்கு அறிமுகப்படுத்தியது.

**விளம்பர விவரணம்**

இந்த நாட்டு மக்களின் கனவுகளை நனவாக்குகின்ற வகையில் ஒவ்வொரு முறையும் பல லொத்தர் சீட்டிழுப்புக்களை அறிமுகப்படுத்திய அபிவிருத்தி லொத்தர் சபை அதனை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் 2008ஆம் ஆண்டில் தயட்ட கிருள (தேசத்திற்கு மகுடம்) என்ற பெயரில் புதிய டிக்கெட் ஒன்றை அறிமுகப்படுத்தியது. தற்சமயம் இந்த டிக்கெட் ஜனஜய என்ற பெயரில் இந்த டிக்கட் சந்தையில் விற்பனையாகிறது. இந்த சீட்டிழுப்பின் பிரதான அம்சம் என்னவென்றால் தீர்வையற்ற புத்தம் புதிய நவீனரக மோட்டார் வாகனம் ஒன்றை சுப்பர் பரிசாக பொதுமக்களுக்குப் பெறக் கூடிய வாய்ப்பு உள்ளதென்பதாகும். இதன்போது மற்றுமொரு முக்கிய விடயம் என்னவென்றால் குறைந்த பெறுமதி கொண்ட டிக்கெட் மூலம் 10 லட்சம் ரூபா பரிசு மற்றும் 25 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணப் பரிசுகளையும் வெல்லக்கூடிய வாய்ப்பு உள்ளது என்பதாகும்.


லொத்தர் சீட்டிழுப்பு வரலாற்றில் எப்போதும் புதிய நவீன மாற்றங்களை அறிமுகப்படுத்துகின்ற அபிவிருத்தி லொத்தர் சபை அதை மேலும் விரிவுபடுத்துகின்ற வகையில் டபிள் சான்ஸ் எனும் பெயரில் சுரண்டல் லொத்தர் டிக்கெட் ஒன்றையும் சீட்டிழுப்பு லொத்தர் டிக்கெட் ஒன்றையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம் வாடிக்கையாளர்களுக்கு ஒரேநேரத்தில் இரண்டு வெற்றி வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. இதன் அடிப்படையில் சுரண்டல் டிக்கெட்டின் மூலம் பல பணப்பரிசில்களை உடனடியாக வாடிக்கையாளர்களுக்குப் பெறக்கூடிய வாய்ப்பு உண்டு. அதேவேளை சீட்டிழுப்புக்கான டிக்கெட்டின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு குறிப்பிட்ட டிக்கெட் சீட்டிழுப்பின் மூலம் பல பணப்பரிசில்களை வெல்லமுடியும். லொத்தர் டிக்கெட்டுக்களை சந்தையில் கொள்வனவு செய்கின்ற வாடிக்கையாளர்களின் முக்கிய வேண்டுகோள் இதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. அதாவது சாதாரண பரிசுகளுக்கு மேலதிகமாக இரண்டாவது முறையாகவும் பல பணப்பரிசில்களைக் குறைந்த பந்துகளைக் கொண்டு கூடுதல் வெற்றி வாய்ப்புக்களைத் தருகின்ற ஒரு டிக்கெட்டாக இதனை அறிமுகப்படுத்தலாம். இந்த வேண்டுகோளை கவனத்தில் கொண்டு இந்த டிக்கெட் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## மன்னிக்கத் தெரிந்த உள்ளம்......

ஒரு திருமண வீட்டிற்கு இருவர் சென்றிருந்தனர். ஒருவர் பணக்காரர், ஒருவர் ஏழை. அந்தப் பணக்கார மனிதன் அந்த ஏழையைக் கண்டு இழக்காரம் கொண்டவராக, அவனை மிகவும் அலட்சியப்படுத்தினான். அந்தச் சபையில் தான் மிகவும் செல்வாக்கு மிகுந்தவர் என்ற ஆணவத்தால் அந்த ஏழையைப் பலமுறை அவமானப்படுத்தினான். சபையோர் முன்னிலையில் கேவலமாக நடத்தினான் . அப்பொழுது அந்தப் பணக்கார மனிதன் அத்திருமண மண்டபத்திலே நடந்துசென்று கொண்டிருந்த போது, கால் இடறி தரையிலே விழுந்துவிட்டான். இதைப் பார்த்து சபையோர் அனைவரும் ஏளனமாகச் சிரித்தனர். யாருமே உதவி செய்ய முன்வரவில்லை. இதைக் கண்டதும் அந்த ஏழை உடனே ஓடிச்சென்று அவனைத் தூக்கி அழைத்துச் சென்று ஓர் இருக்கையில் அமரச் செய்து அவனுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுத்தான்.

இந்த நிலையில் அந்தப் பணக்காரனின் மனநிலை எப்படி இருந்திருக்கும். அவன் மிகவும் வெட்கிப் போயிருந்தான். தான் வீழ்ந்ததினால் அல்ல, மாறாக தன்னால் அவமானப்படுத்தப்பட்ட ஓர் ஏழை அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், மன்னித்து உதவி செய்ததை எண்ணி நாணிப் போயிருந்தான். உண்மையில் எமக்குத் தீமை செய்த ஒருவருக்கு தண்டனை கொடுக்க விரும்பினால், முதலில் அவனை மன்னித்து, அவனுக்கு ஓர் நல்லதைச் செய்கின்ற போது, அவனுக்கு மிகப்பெரும் தண்டனையை வழங்குகிறோம். ஒருவர் எமக்குச் செய்த தீமையை மறந்து நாம் அவருடன் சிரித்துப் பேசும் ஒவ்வொரு தடவையும் அவர் தனக்குள்ளேயே மனம் வெதும்பி நாணிப் போவார். இக் கதையில் வரும் ஏழையும் மற்றவர்களைப் போல சேர்ந்து சிரித்திருந்தால் அந்த பணக்காரனின் மனதில் பகையுணர்வு இன்னும் அதிகரித்திருக்கும். அந்த ஏழையைப் பழிவாங்க சந்தர்ப்பம் தேடியிருப்பான். ஆனால் அந்த ஏழை மனிதன் அவனை மன்னித்து நன்மை செய்தபோது அவன் நாணிப்போய், தனக்குள்ளேயே மனம் நொந்திருப்பான். இப்பகைமை என்பது நம்மை நாமே அழித்துக் கொள்ளும் ஒரு செயல். எமக்கு பகைவர் கூடக் கூட எம் நிம்மதி குறைந்து கொண்டே செல்லும் என்பதை எம்மில் பலர் அனுபவரீதியாக உணர்ந்திருப்போம்.

**தவக்காலச் சிந்தனை**



எனவே பகைவரை வீழ்த்துவதற்கு சந்தர்ப்பம் தேடிக் கொண்டு, எமது நிம்மதியையும் தொலைக்காமல்,எமக்குத் தீமை செய்தவர்களை மன்னித்துப் பாருங்கள். மரணம் வரையில் அதுவே அவனுக்குப் பெரும் தண்டனையாக மாறும். இவ்வாறு மற்றவர்களை நாம் மன்னிக்கின்ற போது இறைவனும் எம் பாவங்களை மன்னித்து எமக்கு ஆசீர் வழங்குவார்.

உங்களுக்குள் ஒவ்வொருவரும் தம் சகோதர, சகோதரிகளை மனமாற மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்கமாட்டார்.

*(மத்18:34.-35)*

தோமஸ் ரேகா,
நாவாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறக்க முடியவில்லை

வெள்ளைக் கொக்குகளாய் நாம்
நடந்து திரிந்த கல்லூரிச்சாலையை
என்றுமே மறக்க முடியவில்லை......

பரல்கள் மீதேறி பாடிய பாடல்கள்
என்றுமே மறக்க முடியவில்லை.....

நண்பருடன் நடனமாடி
சண்டையிட்டு உயிரைக் கொடுத்து
மகிழ்ந்த நாள்களை
எத்தனை எத்தனை ஜென்மங்கள்
கடந்தாலும் நினைக்க நினைக்க
தெவிட்டாத அந்த வாழ்க்கையை
மறக்க முடியாது உயிருடன் கலந்து
விட்டது.

தலையணையைச் சொந்தமாக்கி
தலைவலியைப் பெற்ற நாள்களை
மறக்க முடியாது.

அன்புடன் அரவணைக்கும்
ஆசான்களை என்றும் மறக்க முடியாது.
ஏனெனில் – நாம் இந்நிலைவர
அவர்கள் பேசிய பேச்சும்
உணர்த்திய அறிவுரையும்
என்றுமே மறக்க முடியாது.

எஸ்.கஜனி.(2009 O/L)

# உறவு

உறவுகள் உறைந்துவிட்ட பூமியிலே
ஊமையாய் அலைகின்றேன்
உண்மை உறவின் அர்த்தம் தேடுகின்றேன்
உலகின் வேடம் புரியவில்லை
உறவின் ஆழம் தெரியவில்லை - ஓர்
உண்மை மட்டும் புரிகிறது இப்போது

கண்ணுக்குப் பார்வை நிரந்தரம் இல்லை
மண்ணுக்கு மழை நிரந்தரம் இல்லை
விண்ணுக்கு வீதி நிரந்தரமில்லை
மொத்தத்தில் மனிதன் மரமானதால்
மனித உறவு நிரந்தரமில்லை

விண்ணில் வாழும் தந்தையை
மண்ணில் வாழும் மனிதரில் கண்டால்
இந்த உறவே நிரந்தரம்.

போ.குயின்சன் குயின்சலா.

# வரலாற்றில் இந்த வாரம்

**பெப்ரவரி 26**



உலகிலுள்ள பெறுமதியான பணநோட்டுக்களில் ஒன்றான இங்கிலாந்தின் ஸ்ரேலிங் பவுண் நாணயத்தாள் 1797 ஆம் ஆண்டு பெப்ரவரி 26 ஆம் திகதி முதன்முதலாக இங்கிலாந்து வங்கியினால் வெளியிடப்பட்டது.

**பெப்ரவரி 27**

1991ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி குவைத்நாடு ஈராக்கின் பிடியிலிருந்து மீட்கப்பட்டதுடன் முதலாவது வளைகுடாப்போர் முடிவுக்கு வந்தது.



**பெப்ரவரி 28**



விமானங்களில் பயணம் செய்து விண்ணிலிருந்து பாதுகாப்பாகத் தரைக்குக் குதிக்க உதவும் பரசூட் முறையைப் பயன்படுத்தி முதலாவது பரசூட் குதிப்பு 1912 ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதி அமெரிக்காவில் மிசுசூரி என்னுமிடத்தில் நிகழ்த்தப்பட்டது.

**மார்ச் 01**

மார்ஷல் தீவுகளில் மிகினி அடல் என்னுமிடத்தில் முதலாவது ஹைட்ரஜன் குண்டை 1954 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி வெடிக்கவைத்து அமெரிக்கா பரிசோதித்தது.



**மார்ச் 02**



மார்சுக்கும் வீனசுக்குமான காதல் எனும் புகழ்பெற்ற நாடகம் லண்டனிலுள்ள றோயல் மண்டபத்தில் 1717 ஆம் ஆண்டு மார்ச் 02ஆம் திகதி முதலில் அரங்கேறியது.

**மார்ச் 03**

ஒவ்வொரு வருடமும் மார்ச் 03ஆம் திகதி மொராக்கோ நாட்டின் தேசிய தினமாகக் கொண்டாடப் படுகிறது.



**மார்ச் 04**




தொழில் முறைசார் வீரர்களையும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளில் விளையாட அனுமதிக்கலாம். என்ற முடிவு 1968 ஆம் ஆண்டு மார்ச் 04 ஆம் திகதி ஏகமனதாக எடுக்கப்பட்டது.

# இளவல்கள் வட்டம்

YOUTH

## தூரப்பார்வையால் அவதிப்படுபவர்களுக்கு விடிவுகாலம்



தூரப் பார்வையால் அவதிப்படுபவர்களுக்கு இதோ விடிவுகாலம் வந்துவிட்டது. கண்ணாடி 'கான்டாக்ட் லென்ஸ் லேசர்' சிகிச்சை எதுவும் வேண்டாம். புதுமையான முறையில் தீர்வுகாண் வழி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் 'மெல்போர்ன்' கண் ஆராய்ச்சி மையம் இந்த முயற்சியில் வெற்றி கண்டுள்ளது. 551 இளைஞர்களிடம் டி.என்.ஏ.பரிசோதனை செய்யப்பட்டது. இவர்களில் குறிப்பிடத்தக்க அளவில் தூரப்பார்வையால் பாதிக்கப்பட்டவர்களும் அடங்குவர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கும் இயல்பானவர்களுக்கும் இடையே உள்ள டி.என்.ஏ. வேறுபாடுகளை ஆராய்ந்ததில் தூரப்பார்வைக்கான ஜீன்கள் இனம் காணப்பட்டன. இவற்றுக்கு 'ஹெபாடோசைட் ஃரோத் பேக்டர் (எச்.ஜி.எப்.)' என்று பெயரிடப்பட்டு உள்ளது.

இதையடுத்து தூரப் பார்வைக்கு தீர்வுகாண முடியும்என்று டாக்டர்கள் நம்பிக்கை தெரிவித் துள்ளனர். இது புதிய மருந்து தயாரிக்க உதவுவதோடு உலக கண் மருத்துவத்துறையில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்று கூறப்படுகின்றது.

ஆய்வாளர் 'போல் பெய்டு' கூறும்போது பொதுவாகப் பார்வையைப் பாதிப்பதில் ஜீன்களும் சுற்றுச்சூழலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதில் ஜீன்களின் பங்கை அறிந்துவிட்டதால் அவற்றின் போக்கை திசைதிருப்பி விடுவதன் மூலம் பார்வை பாதிப்பில் இருந்து விடுபடமுடியும். இந்த முறையில் தற்போது தூரப்பார்வைக்கு மட்டுமே கண்ணாடி லேசர் சிகிச்சை இல்லாமல் தீர்வு காணமுடியும் - என்றார்.

- மருத்துவ உலகம் -

## கேள்விக்கென்ன பதில்?- 62இன் சரியான விடை

நான்காவது குழந்தையின் பெயர் மேரி.

## கேள்விக்கென்ன பதில்?- 62 இல் பரிசு பெறுவோர்

1. இ.அபிராமன், வேளா தோப்பு, கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.
2. ந. டர்சிகா, பட்டினசபை வீதி, சங்கானை.
3. கு.தட்சாயினி, பூதர்மடம், நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

## கேள்விக்கு என்ன பதில்?-64

இரண்டு நாள்களுக்கு முன்பு எனது வயது 25. ஆனால் அடுத்த வருடம் எனது 28 ஆவது பிறந்தநாள் வருகின்றது. அது எப்படி? நான் பிறந்த திகதி என்ன?

(சரியான விடையை 11.03.2010 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்).

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் **'இளவல்கள் வட்டம்'** என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங் கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................
முகவரி :-..........................................
:-..........................................
.......................... ..........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சிந்தனைத் துளிகள்



★ மனநிறைவே இயற்கையான செல்வம், ஆடம்பரம் செயற்கையான வறுமை.

★ மனிதனின் உண்மையான மதிப்பு அவன் வழங்குவதில் உள்ளது. பெறுவதில் அல்ல.

★ கெட்ட எண்ணத்தோடு உங்களால் சொல்லப்படும் ஓர் உண்மை பல பொய்கள் அனைத்தையும் விட கொடுமையானது.

★ நல்லவை செய் அதை நினைத்துக் கொண்டே இராதே.

★ பதவி உங்களுக்குப் பெருமை தருவதை விட நீங்கள்தான் அதைப் பெருமைப்படுத்த வேண்டும்.

★ எந்த வேலையும் இழிவல்ல. சோம்பல் தான் இழிவு.

★ எடுத்த செயலில் நிலைத்து நிற்பதே வெற்றியின் ரகசியம்.

★ பெண் இல்லாத வீடு வாளி இல்லாக் கிணறு மாதிரி.

★ இலட்சியமல்லாத மனிதன் திசை காட்டும் கருவி இல்லாத கப்பல் போன்றவன்.

★ விவேகம் இல்லாத ஒருவனே எதிரியின் பலத்தைக் குறைவாக மதிப்பான்.

விஜயகுமார் சிந்துஜா,
அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் வாழ்க்கையை பிரதேசரீதியாக உயர்த்த வேண்டும்

## இரத்தினபுரியில் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 4

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகள் ஊடாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இரத்தினபுரி பெல்மதுல்ல ரஜமஹா விகாரையில் நடைபெற்ற சந்திப்பொன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

அரசியல்வாதிகள் எப்போதும் முன்னுதாரணம் மிக்கவர்களாகத் திகழவேண்டும். அவர்கள் மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டுக்காகப்பாடுபடவேண்டும். அந்த வகையில் இரத்தினபுரி மாணிக்கக்கல் நிறைந்த பூமி என்றாலும் இங்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் வாழ்கின்றனர்.

இவ்வாறான மக்கள் வாழும் பிரதேசங்கள் ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இம்மக்களின் வாழ்வாதாரத்தை பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகள் ஊடாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வைபவத்தில் பங்குபற்றுவதையிட்டு நான் பெரிதும் சந்தோஷப்படுகின்றேன். இந்த விகாரைக்கு நான் தொழில் அமைச்சராக இருந்த போது முதலாவதாக வந்தேன். அப்போது இங்கு தொழிற் பயிற்சி நிலையமொன்றையும் திறந்து வைத்தேன். அதன் பிறகு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சமயமும் வந்து சென்றேன். இப்பகுதிக்கும் எனக்கும் நீண்ட காலமாக நல்ல தொடர்பு இருந்து வருகின்றது. அந்த வகையில் எனது வெற்றிக்காக தேரர்கள் பெரும் பங்களிப்பும் செய்திருக்கின்றார்கள்.

இந்த நாடு அச்சுறுத்தல்களுக்குள்ளான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பௌத்த தேரர்கள் முன்வந்து நாட்டை அந்த அச்சுறுத்தல்களிலிருந்து மீட்டெடுத் திருக்கின்றார்கள். இது வரலாறாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வேறுவிதமாக அமைந்திருந்தால் நாட்டின் நிலைமை எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை விவரிக்கவே முடியாது. நாம் ஜனநாய கத்தையும் பாதுகாப்பு நிறைந்த சமூகத்தையும் கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். எம்மிடம் வஞ்சம் தீர்க்கும் அரசியல் கிடையாது.

மதுவுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளோம். இதேநேரம் சுமார் முப்பது வருடங்கள் நாட்டுக்குப் பெரும் தலையிடியாக இருந்த பயங்கரவாதத்தை குறுகிய காலத்தில் ஒழித்துக்கட்டி துண்டாடப் பட்டிருந்த நாட்டை மீளவும் ஒன்றுபடுத்தியுள்ளோம். பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் எமது பதவிக் காலத்தில் இங்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

வீதி அபிவிருத்தி, மின் உற்பத்தித் திட்டங்கள், துறைமுகங்களின் அபிவிருத்தி என பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இருந்தபோதிலும் நாட்டில் என்னதான் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் அவற்றின் மூலம் மக்கள் மேம்பாடு அடையாவிட்டால் அந்த அபிவிருத்திகளால் எந்தப் பயனுமே இல்லை. மக்களின் உள்ளங்கள் மேம்படவேண்டும். அது அவர்களை சிறந்த நற்பண்பாளர்களாக மேம்படச் செய்யும். அத்தோடு மக்களின் வாழ்க்கைத் தரமும் வளர்ச்சி அடையும். இவை எதிர்கால சமுதாயத்திற்குச் சுபீட்சத்தைப் பெற்றுக்கொடுக்கும்.

மக்களின் உள்ளங்களை மேம்படுத்தவென தேரர்கள் பெரும் பங்களிப்பு செய்கிறார்கள். இருப்பினும் இந்நாட்டினருக்கும், வெளிநாட்டவருக்கும் பௌத்தமதம் குறித்த தெளிவை ஏற்படுத்தவேண்டிய தேவை நிலவுகின்றது. இதனை அவரவர் மொழிகளிலேயே செய்யவேண்டும். இதற்கு வெளிநாட்டு மொழிகளின் அறிவு அவசியம். அதனால் வெளிநாட்டு மொழி அறிவை மேம்படுத்திக்கொள்ளவேண்டும். இதற்கு பிரிவெனா கல்வி பெரிதும் உதவும். இதனூடாகப் பௌத்த மதத்தை பரப்ப முடியும். இத்திட்டத்திற்கு நாம் பங் களிப்பு செய்யத் தயாராகவுள்ளோம் - என்றார்.

# நுவரெலியா திருத்துவக் கல்லூரி நேற்று வழமைக்குத் திரும்பியது

கொழும்பு, மார்ச்4

தீ விபத்தில் பாதிக்கப்பட்ட நுவரெலியா திருத்துவக் கல்லூரி நடவடிக்கைகள் நேற்று வழமைக்குத் திரும்பின.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் உட்பட மலையகப் பிரமுகர்கள் பலரும் சென்று கல்லூரி நிலைமையைப் பார்வையிட்டதுடன் புனர்நிர்மாண வேலைகளுக்கு நிதியுதவி வழங்குதற்கும் முன்வந்துள் ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தீவிபத்தில் சேதமடைந்த கட்டடத்தை இன்னும் இரு வாரங்களுக்குள் நிர்மாணித்துக் கொடுப்பதற்கும், எரிந்துபோன தளபாடங்களையும் இருவாரங்களில் பெற்றுத்தருவதற்கும் ஏற்பாடு செய்வார் என மத்திய மாகாண தமிழ்க் கல்வியமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் உறுதியளித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீயினால் சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் மாணவர்கள் தொடர்பான ஆவணங்களும் எரிந்து நாசமாகியிருந்தன. கல்லூரியின் 5 ஆம் ஆண்டு மாணவர்களின் இரண்டு வகுப்பறைகளும், காரியாலயும் ஒன்றுமே இவ்வாறு முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளன.

இச்சம்பவம் இடம்பெற்ற வேளையில் வகுப்பறைகளில் சுமார் 80 மாணவர்கள் இருந்துள்ளனர். எனினும், சம்பவவேளையில் ஆசிரியர்கள் மாணவர்களை கட்டடத்திலிருந்து வெளியேற்றியுள்ளனர்.

நுவரெலியா மாநகரசபை தீயணைப்புப் பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திந்தனர்.

# பதுளை தேர்தல் தொகுதியில் ஐ.தே.க. அலுவலகங்கள் மீது தாக்கு

பதுளை, மார்ச் 4

பதுளை தேர்தல் தொகுதியிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் இரு வெவ்வேறு அலுவலகங்கள் மீது இனந்தெரியாதோரினால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன என்பது ளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளன அந்த முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டள்ளது.

பதுளை தேர்தல் தொகுதியின் சிரிமல் கொட, கொந்தகொல்ல ஆகிய இரு இடங்களிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் இரு அலுவலகங்களே இவ்வாறு இனந்தெரியாதோரினால் தீ வைக்கப்பட்டு சேதமாக்கப் பட்டுள்ளன.

இப்பணியகங்கள், ஐ.தே. கட்சியின் பதுளை தேர்தல் தொகுதி பிரதம அமைப்பாளர் ஹரின் பெர்னாந்துவை ஆதரிக்கும் வகையிலேயே செயல்பட்டனவென்றும் தேர்தல் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்ட அன்றே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றும் அந்த முறைப்பாட்டில் தெவிக்கப்பட்டுள்ளது.

பதுளைப் பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கேகாலை மாவட்டத்தில் அரிசியின் விலை வீழ்ச்சி

மாவனல்லை, மார்ச் 4

கேகாலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இம்முறை பெரும் போக நெல் அறுவடை அமோக விளைச்சலை அளித்துள்ளதால், இப்பகுதிகளில் சம்பா, நாடு, சிவப்பு அரிசி விலைகளின் விலைகள் பெரிதும் குறைந்துள்ளன.

இவ்வரிசி வகைகளின் விலைகள் மேலும் குறையக்கூடும் என இப்பகுதி வர்த்தக வட்டாரங்களில் நம்பப்படுகிறது.

## கடுகண்ணாவை கற்பாறையில் பஸ்மோதி 31 பேர் காயம்

கண்டி, மார்ச்4

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் பாதையோரத்தில் இருந்த கற்பாறையில் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 31 பயணிகள் காயமுற்று மாவனல்லை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என மாவனல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 27 ஆம் திகதி மாலை 6. 40 மணியளவில் இந்த விபத்து நடந்தபோது பஸ்ஸில் மொத்தமாக 55 பயணிகள் இருந்துள்ளனர். பஸ் சாரதி பலத்த காயங்களுக்குள்ளாகி கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மாவனல்லை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முத்து பண்டாவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

# 26அடி ஆழமான கிணற்றில் வீழ்ந்த சிறுமியைக் காப்பாற்றிய சிறுவர்கள்!

கொழும்பு, மார்ச் 4

26 அடி ஆழமான கிணற்றில் தவறி வீழ்ந்த ஆறுவயதுச் சிறுமியை அவரது 10 வயதுச் சகோதரனும், 11 வயது நண்பரும் காப்பாற்றிய வீரச்சம்பவமொன்று தம்புள்ளயில் நடைபெற்றுள்ளது.

கலேவெல, ஏவலமிட்டியாவில் கடந்த 27ஆம்திகதி மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இச்சம்புவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

முதலாம் தரத்தில் கல்விபயிலும் மயூரி நிமேஷா எனும் ஆறுவயதுச் சிறுமி இன்னும் சிலருடன் வீட்டு முற்றத்தில் பந்து விளையாடிக் கொண்டிருந்துள்ளார்.

அடிபட்ட பந்து தவறிப்போய் வீட்டு முற்றத்தில் இருந்த 26அடி ஆழமா பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்துள்ளது. அதனை எடுப்பதற்காக வேகமாக ஓடிய சிறுமி தவறிப்போய் கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளார்.

இதனைக் கண்ட சிறுமியின் தமையனான ஆறாம் வகுப்பு மாணவர், ஏழாம் வகுப்பு மாணவனான நண்பனுடன் விரைவாக செயல்பட்டு வீட்டுக்குமுன் இருந்த நீள மான ஏணியைக் கிணற்றில் இறக்கி அதன் வழியாக கிணற்றுக்குள் இறங்கி மூழ்கிக் கொண்டிருந்த சிறுமியைக் காப்பாற்றியுள்ளனர்.

இச்சிறுமியின் தாய் செங்கல் ஆலையொன்றில் தொழிலாளியாகவும், தந்தை கிளிநொச்சியில் மேசனாகவும் தொழில் புரிகின்றனர். இச்சிறுவர்கள் வீரச்செயலை பிதேசவாசிகள் மிகவும் வியந்து பாராட்டியுள்ளனர்.

# மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மாசி மகோற்சவத் திருவிழா கோலாகலம்

மாத்தளை, மார்ச் 4

மாத்தளை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய மாசி மக மகோற்சவத் தேர்த் திருவிழா ஞாயிறன்று சிறப்பாக இடம் பெற்றது.

காலை 9.45 மணிக்கு அம்பாள் சித்திரத்தேருக்கு எழுந்தருளியதைத் தொடர்ந்து காலை 10.15 இக்கு பஞ்ச ரதங்கள் ஆலயத்திலிருந்து புறப்பட்டன.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ பஞ்ச ரதங்களும் ஆலயத்தை விட்டு எழுந்தருளி மாத்தளை பிரதான வீதி வழியாக பவனிவர பாதை இரு மருங்கிலும் பக்தர்கள் கூடியிருந்து வழிபட்டனர்.

மாத்தளை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த திருவிழாவையொட்டி மாத்தளை நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது.




## பீதுறுதாலகலவில் 3 ஏக்கர் காடு எரிந்து நாசம்

நுவரெலியா, மார்ச் 4

நுவரெலியா பிதுருதாலகல மலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் காட்டுத்தீ பரவியுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

இதனால் சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்பு முற்றாக தீக்கிரையாகியுள்ளது என்று நுவரெலிய வனவள பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார்.

மாநகரசபை தீயணைக்கும் படையினரும், இராணுவத்தினரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி மேலும் தெரிவித்தார்.

# பண்டாரவளைக் கல்லூரியில் 33 ஆசிரிய மாணவர்கள் கைது

## வினாத்தாள்கள் மாயமான சம்பவத்தில்

தியத்தலாவை, மார்ச் 4

பரீட்சை வினாத்தாள்கள் காணாமல் போன சம்பவம் தொடர்பில் பண்டாரவளை கல்வியியற் கல்லூரியில் 2008, 2010 கல்வி ஆண்டில் பயிலும் ஆசிரிய மாணவர்கள் 33 பேரும், காவலாளிகள் இருவரும் பண்டாரவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2008, 2010 கல்வி ஆண்டில் பயிலும் ஆசிரிய மாணவர்கள் இவ்வாரம் இடம் பெறவிருந்த பரீட்சை வினாத்தாள்களை சூட்சுமாக களவாடினர் என கல்வியியற் கல்லூரி நிர்வாகம் செய்த முறைப்பாட்டையடுத்தே இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2008 - 2010 கல்வியாண்டில் 83 பெண் ஆசிரிய மாணவர்களும், 33 ஆண் ஆசிரிய மாணவர்களும் இங்கு கல்வி கற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இவர்களை விசாரணை செய்த பொலிஸாரிடம், இக்கல்லூரியில் விரிவுரையாளர்களாகக் கடமையாற்றிய மூவர் வேறு கல்வியியற் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர் என்றும், இவ் இடமாற்றத்தை ரத்துச்செய்வதற்காகவே தாம் இந்தச் செய்கையில் ஈடுபட்டனர் என்றும் கைது செய்யப்பட்ட மாணவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர் எனக் கூறப்படுகின்றது. இச்சம்பவம் தொடர்பாக பண்டாரவளை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வினாத்தாள் விவகாரத்தில் கைதான மாணவர்களுக்கு விளக்கமறியல்

அப்புத்தளை, மார்ச் 4

கல்வியியற் கல்லூரியிலிருந்து வினாத் தாள்கள் களவாடப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட பண்டாரவளை பிந்துனுவெவ ஊவா கல்வியியற் கல்லூரியைச் சேர்ந்த 33 மாணவர்களும் பண்டாரவளை நீதி மன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

ஆஜர் செய்யப்பட்ட 33 சந்தேகநபர் களையும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட பண்டாரவளை நீதிமன்ற நீதிவான் ஏ.எம். என்.பி. அமரசிங்க, மார்ச் 10 ஆம் திகதி அவர்களை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு

# ஆப்பு வைக்கும் தமிழ்த் தலைவர்கள்

தமிழர்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நடத்தப்பட்ட ஆயுதப்போராட்டம் கடந்த வருடம் மௌனிக்கப்பட்ட நிலையில் சிந்திய இரத்தங்கள், துன்பங்கள், விம்மல்கள் நீங்குவதற்கு முன்னரே தமிழ் மக்கள் முன் சிறிலங்கா நாடாளுமன்றத்திற்கான தேர்தல்த் திருவிழா ஆரம்பமாகியிருக்கிறது.

இலங்கையின் வரலாற்றில் வடக்கு, கிழக்கில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள்



மட்டுமன்றி ஈசல்கள் போல் சுயேச்சை அணிகளும் களமிறக்கப் பட்டிருக்கின்றன. இந் நிலையில் தமிழர்கள் தமது பிரதிநிதித்துவத்தைத் தக்கவைத்துக்கொள்ள முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

2004ஆம் ஆண்டு 22 ஆசனங்களைப் பெற்று சிறிலங்கா நாடாளுமன்றத்தில் மூன்றாவது பலம்பொருந்திய கட்சியாக திகழ்ந்த தமிழரசுக்கட்சி இம்முறை தனது வாக்குவங்கியை தக்கவைத்துக்கொள்ளுமா? கடந்த பொதுத்தேர்தலில் ஒற்றுமையாக இருந்த தமிழ்க் கட்சிகள் இன்று பல துருவங்களாக பிரிந்து நிற்பதன் மூலம் நன்மை அடையப்போவது யார்? குறிப்பாக 2000ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் கிழக்கு மாகாணத் தமிழர்கள் சந்தித்த மிகக்கசப்பான முடிவுகளைத்தான் இம்முறையும் சந்திக்கப்போகிறார்களா என்ற கேள்விகளே இப்பொழுது எழுந்துள்ளன.

வடக்கை விட கிழக்கில் தமிழர்களின் சனத்தொகை வீதத்தில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சி, இடப்பெயர்வு என்பனவற்றால் தமிழ் கட்சிகளின் வாக்குவங்கிகளில் சரிவு ஏற்பட்டு வரும் அதேவேளை தமிழ் கட்சிகள் பிரிந்து நிற்பதால் வாக்குகள் சிதறிப்போவதை கடந்த காலங்களில் தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அனுபவபூர்வமாக உணர்ந்திருந்தனர். அந்த அனுபவத்தின் ஊடாகப் பாடம் கற்க மறுப்பவர்கள் போல இன்றும் தமிழர்களின் பிரதிநிதித்துவம் பறிக்கப்படுவதற்குச் சில தமிழ் தரப்பினர் துணைபோகின்றனர் என்பதே பெரும்பாலான தமிழ் மக்களின் ஏக்கமாகும்.

2000ஆம் ஆண்டில் இருந்த சூழலை ஒத்ததாகவே இன்றைய தேர்தல் அமையப்போகிறது என்றே தேர்தல் களநிலவரங்களை அவதானிக்கின்ற போது உணரமுடிகிறது. 2004ஆம் ஆண்டில் இருந்த சூழல்கள் இப்போது இருக்கப் போவதில்லை

இந்த இரண்டு ஆண்டுகளுக்கும் இடையில் உள்ள சூழலில் அப்படி என்ன மாற்றங்கள் இருந்தன என்ற கேள்வி உங்களில் சிலருக்கு ஏற்படலாம். 2000ஆம் ஆண்டுத் தேர்தல் என்பது கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கு கசப்பான படிப்பினைகளைத் தந்த தேர்தல் என்று கூட சொல்லலாம்.

அந்தக் கசப்பான தேர்தல் முடிவுகளையும் இம்முறை எவ்வாறான முடிவைத் தமிழர்கள் பெறப்போகிறார்கள் என்பதையும் பார்ப்போம்.

வடக்கு, கிழக்குத் தமிழர்களின் தாயகம், தமிழர்களின் தலைநகரம் திருகோணமலை என்று தமிழர்களால் பெருமையாக சொல்லிக்கொள்கின்ற போதிலும் 2000ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இரு ஆசனங்களை பெற வேண்டிய தமிழர்கள் ஒரு ஆசனத்தைக்கூட பெற முடியாமல் அணில் ஏறவிட்ட நாய் போல் பார்த்து நின்றமையை நாம் மறக்க முடியாது.

அந்தத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி 53,860 வாக்குகளைப்பெற்று மூன்று ஆசனங்களையும், ஐக்கிய தேசியக்கட்சி 46,700 வாக்குகளைப்பெற்று ஓர் ஆசனத்தையும் பெற்றிருந்தது.

இந்தத் தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.டி.பி மற்றும் இரு தமிழ் சுயேச்சை அணிகள் என வாக்குகளைச் சிதறடித்ததன் விளைவாகத் தமிழர்களின் தலைநகரம் என்று பெருமை பேசிக்கொள்ளும் திருகோணமலை மாவட்டத்தில் ஒரு தமிழ்ப் பிரதிநிதியைக் கூடப் பெற்றுக்கொள்ளவில்லை. அரசியல் கட்சிகள், சுயேச்சைக்குழுக்கள் என 20 அணிகள் அங்கு போட்டியிட்டிருந்தன.

நான்கு தமிழ்ப் பிரதிநிதிகளையும் ஒரு முஸ்லிம் பிரதிநிதியையும் தெரிவு செய்ய வேண்டிய மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி 54,448 வாக்குகளைப்பெற்று இரு பிரதிநிதிகளையும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 53,646 வாக்குகளைப்பெற்று ஓர் ஆசனத்தையும் ஐக்கிய தேசியக்கட்சி 29,165 வாக்குகளைப்பெற்று ஓர் ஆசனத்தையும், பொதுஜன ஐக்கிய முன்னணி 16,510 வாக்குகளைப்பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுக்கொண்டன.

ஈ.பி.டி.பி, ரெலோ, புளொட், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ் சுயேச்சை அணி என தமிழ்க் கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டு வாக்குகளைப் பிரித்ததன் விளைவாகத் தமிழர்களுக்கு வரவேண்டிய பிரதிநிதித்துவம் முஸ்லிம்களைச் சென்றடைந்தது. அத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் வெற்றி பெற்ற அலி சாஹிர் மௌலானா தமிழர்களின் வாக்குகளினாலேயே வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அம்பாறையில் கூட்டப் பொதுஜன ஐக்கிய முன்னணி நான்கு ஆசனங்களையும் ஐக்கிய தேசியக்கட்சி 2 ஆசனங்களையும் சுயேச்சைக்குழு ஓர் ஆசனத்தையும் பெற்றிருந்தன.

பதிவு செய்யப்பட்ட கட்சிகள், சுயேச்சைக்குழுக்கள் என 23 குழுக்கள் போட்டியிட்ட வன்னி மாவட்டத்தில் ரெலோ 21,765 வாக்குகளைப்பெற்று 3 ஆசனங்களையும். தேசிய ஐக்கிய முன்னணி 15,837 வாக்குகளைப்பெற்று ஒரு ஆசனத்தையும் ஐக்கிய தேசியக்கட்சி 11,545 வாக்குகளைப்பெற்று ஒரு ஆசனத்தையும் பொதுஜன ஐக்கிய முன்னணி 7,837 வாக்குகளைப்பெற்று ஓர் ஆசனத்தையும் பெற்றுக்கொண்டன. இத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ.பி.டி.பி, புளொட், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், மற்றும் நான்கு சுயேச்சைக்குழுக்கள் தனித்தனியாகப் போட்டியிட்டதன் விளைவாகவும், ஐக்கிய தேசியக்கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றிற்கு தமிழர்கள் வாக்களித்ததன் விளைவாகவும் தமிழர்களுக்கான இரு பிரதிநிதித் துவத்தை



சிங்களவர்களும் முஸ்லிம்களும் பங்கு போட்டுக் கொண்டனர்.

20 அணிகள் போட்டியிட்ட யாழ்.மாவட்டத்தில் ஈ.பி.டி.பி 41,671 வாக்குகளைப்பெற்று 4 ஆசனங்களையும் தமிழர் விடுதலைக்கூட்டணி 32,852 வாக்குகளைப்பெற்று 3 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக்கட்சி 11,431 வாக்குகளைப்பெற்று ஓர் ஆசனத்தையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 10,648 வாக்குகளைப்பெற்று ஓர் ஆசனத்தையும் பெற்றுக்கொண்டன.

மிக நீண்டகாலத்திற்கு பின் தென்னிலங்கை கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி ஓர் ஆசனத்தை அங்கு பெற்றுக்கொண்டது. எது எப்படி இருந்த போதிலும் இம்மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பதால் தமிழரின் பிரதிநிதித்துவம் வேறு ஒரு இனத்தவர்களுக்கு செல்லவில்லை.

ஆனால், யாழ். மாவட்டம் தவிர்ந்த வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் அச்சமயம் பறிக்கப்பட்டிருந்தது. தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் மோதிக்கொண்டு தனித்தனியாகப் போட்டி போட்டதன் விளைவாகவும், பேரினவாதக் கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றிற்குத் தமிழர்கள் வாக்களித்தன் விளைவாகவும் இந்த அவலம் ஏற்பட்டிருந்தது.

இதன் விளைவாகவே 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்குப் பின்னர் ஊடகவியலாளர் சிவராம் தலைமையிலான சிலர் இணைந்து எடுத்த முயற்சியின் பலனாகவே தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகள் இணைக்கப்பட்டு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு 2001ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு கணிசமான வெற்றியைப் பெற்ற போதிலும் 2004ஆம் ஆண்டு தேர்தலிலேயே



அதன் முழுமையான அறுவடையைப் பெற முடிந்தது.

ஆனால் இன்று எல்லாமே தலைகீழாகி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகப் போய்விட்டதோ, என்ற ஏக்கம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உருவாக்கத்தை வேண்டி நின்ற அனைவருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலைக்கூட்டணி, புளொட் இணைந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணி, சிவாஜிலிங்கம் தலைமையிலான இடதுசாரி முன்னணி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, ஈழவர் ஜனநாயக முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் , ஜே.வி.பியின் ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் சுயேச்சைக்குழுக்கள் எனப் பல முனைப்போட்டியாக இருக்கப்போகும் வடக்கு, கிழக்குத் தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படுமா?

வெவ்வேறு இனக்குழுக்களைக் கொண்ட கிழக்கு மற்றும் வன்னி மாவட்டங்களில் தமிழர்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தை மற்றவர்களுக்குத் தாரை வார்க்கப்போகிறார்களா? 2004ஆம் ஆண்டுத் தேர்தலைப் போலன்றி இம்முறை இக்கேள்விகளைப் பலமாக கேட்கவேண்டியிருக்கிறது.

யாழ்.மாவட்டத்தைப்பொறுத்தவரை வாக்குகள் பிரிக்கப்பட்டு பல கட்சிகளும் ஆசனங்களை பங்கு போட்டுக்கொண்டாலும் அதில் தெரிவு செய்யப்படப் போகிறவர்கள் தமிழர்களாகத்தான்

**ஊடகவியலாளர்**
**இரா. துரைரெத்தினம்**
**(சுவிஸ்)**

இருக்கப்போகிறார்கள். ஆனால், சிங்களக்கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி போன்ற பேரினவாத கட்சிகளுக்கு வாக்களிப்பதன் மூலம் தமிழர்களின் உரிமை களைப்பறித்தெடுத்த சிங்கள தலைமைகளைத் தமிழர்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்ற வாதமும் முன்வைக்கப்படலாம்.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப் பிலிருந்து பிரிந்து சென்ற கஜேந் திரகுமார் பொன்னம்பலம், கஜேந் திரன், பத்மினி சிதம்பர நாதன், சிறில், சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தோல்வி கண்ட தீர்வுப் பாதைக்குத் திரும்ப முயல்வதாகக் குற்றச்சாட்டு

## தமிழ்த்தேசியத்துக்கான மக்கள் முன்னணி முன்வைக்கிறது

தமிழ்த்தேசியத்துக்கான மக்கள் முன்னணி சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை இங்கே பிரசுரமாகிறது. தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் தலைமை வேட்பாளர் சி.வரதராஜன் இதனை அனுப்பி வைத்திருந்தார்.



தமிழ்மக்கள் எதிர்கொண்ட பெரும் துயரமும் வலியும் வேதனையும் இன்னமும் ஆறவில்லை. இந்நிலையில் தமிழ் மக்கள், அரசியல் தலைமைகள் ஒற்றுமையாக இருந்து தமக்கு பலம் சேர்க்க வேண்டுமென விரும்புகின்றார்கள். இந்த விரும்பத்திற்கு மாறாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினுள் நிலவிவந்த ஒற்றுமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகளான இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா ஆகியோர் திட்டமிட்டு சிதைத்துள்ளனர்.

மே 2009 இல் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பேரழிவுக்குப் பின்னர் மேற்கூறிய மூவரை கொண்ட அணி தமது மறைமுக நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் எதேச்சாதிகாரமாக செயற்படும் போக்கை தீவிரப்படுத்தியது. இதன் உச்சக் கட்டமாக கூட்டமைப்பின் பெரும்பான்மையான உறுப்பினர்களினதும், மக்களினதும், செயற்பாட்டாளர்களினதும் பங்கு பற்றுதல் இல்லாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடிப்படைக் கொள்கைகளைக் கைவிட்டு 'அவசரத் தீர்வுத் திட்டம்' ஒன்றைத் தயாரித்து முடித்தனர். அடிப்படைக் கொள்கைகளிலிருந்து விலகிச் செல்லும் இவர்களின் செயற்பாடுகளே கூட்டமைப்பின் ஒற்றுமைக் குலைவுக்கு வழிவகுத்தது.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது ஏன்?

தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஒன்றுபட்டு வெளிப்படுத்தக்கூடிய ஓர் அரசியல் தலைமை காலத்தின் கட்டாயம் என்ற அடிப்படையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

* தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம்.
* இலங்கைத் தீவின் வடக்கு- கிழக்குப் பிராந்தியம் தமிழர்களின் தாயகம்
* தமிழ்த் தேசத்திற்கு சுயநிர்ணய உரிமை உண்டு.

என்ற கோட்பாடுகள் அங்கீகரிக்கபடல் வேண்டும். இம்மூன்று அடிப்படைகளும் தமிழ்மக்கள் ஒரு தனித்துவமான தேசம் என்பதையும், அதற்குத் தனித்துவமான இறைமை உண்டு என்பதையும் வலியுறுத்துகின்றன. இத்தகைய அங்கீகாரம் தருகின்ற அரசியல் அந்தஸ்தின் நிலைநின்றே தமிழர் தரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முடியும்.

இலங்கைத் தீவில் இரு தேசங்கள் உள்ளன என்பதை ஏற்றுக் கொள்கின்றபோதுதான், இவ்விரு தேசங்களும் இணைந்த ஒரு நாட்டில் நாம் சமாதான சகவாழ்வு வாழமுடியும், இந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலான அரசியற் பேச்சுவார்த்தை மூலம்தான் தமிழர்களின் அரசியற் பிரச்சினைக்கான தீர்வை நாம் எட்ட முடியும், இந்தப் பாதையிலிருந்து தமிழர்களின் அரசியற் தலைமைகள் ஒரு போதும் விலகிப் பயணிக்க முடியாது. இதனையே தமிழ்மக்கள் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர். 2001 ஆம் 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல்களில் த.தே.கூவினால் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு மக்களால் வழங்கப்பட்ட ஆணையும் இதுவே. இந்த நிலைப்பாடு தமிழர்களின் அரசியற் கொள்கைகளிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாதது; சமரசத்திற்கு அப்பாற்பட்டது.

### தந்தை செல்வா காலத்தில் தோல்வியடைந்த தந்திரோபாயங்கள்

இத்தகைய தீர்மானம் ஒன்றிற்கு தமிழ் அரசியல் தலைமைகள் செல்வதற்கு முன்னரான முப்பது ஆண்டுகளில், இலங்கை அரசுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை அங்கீகரிக்கும் வகையில் இலங்கை அரசின் அரசியல் கட்டமைப்புக்களில் திருத்தங்களை கொண்டுவருவதன் மூலம் அதிகாரப் பகிர்வு என்ற பாதை ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பற்கே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய முயற்சிகளாகவே பண்டா - செல்வா உடன்படிக்கை டட்லி - செல்வா உடன்படிக்கை போன்ற அரசியல் தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதே போன்று 1970 ஆம் ஆண்டு தேர்தலில் அமோக வெற்றி பெற்ற தந்தை செல்வா தலைமையிலான இலங்கை தமிழரசுக் கட்சி தேர்தலின் பின்னர் இலங்கைக்கான புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் அதிகாரப் பகிர்வு ஊடாக இலங்கை அரசை மாற்றி அமைத்து ஓர் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்த வேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்தது. அந்தப் பிரேரணை உடனடியாக நிராகரிக்கப்பட்டது மட்டுமல்லாமல் தமிழர் தரப்புக் கோரிக்கைக்கு நேரெதிராக இலங்கை அரசை ஓர் ஒற்றையாட்சி அரசாக உத்தியோகபூர்வமாக அரசியலமைப்பினூடாக நிலை நாட்டப்பட்டது.

அத்துடன் அது வரை காலமும் தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்காக என சோல்பரி அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த 29ஆம் சரத்து நீக்கப்பட்டது. பௌத்த மதம் அரசியல் யாப்பின் ஊடாக முதன்மையான மதம் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டு 'சிங்கள மொழி மட்டுமே' ஆட்சி மொழியாக அரசியல் அமைப்பின் மூலம் அமுல்படுத்தப்பட்டது. தமிழ் தலைமையினால் முன்வைக்கப்பட்ட அதிகாரப்பகிர்வுக்கான தீர்வு யோசனைகள் முழுமையாக நிராகரிக்கப்பட்டது மட்டுமன்றி சிங்கள அரசின் மேற்கூறிய செயற்பாடுகள் அதற்கு நேரெதிரான திசையில் அமைந்தன.

இத்தகைய அனுபவங்கள் காரணமாகவே தந்தை செல்வா அவர்கள் ஒரு தீர்க்கமான மாற்று முடிவுக்கு வரவேண்டியிருந்தது. இதே வகையில் இனப்பிரச்சினைக்கு பல்வேறு வழிமுறைகளூடாக தீர்வு காண முற்பட்ட அனைத்து தமிழ் தலைமைகளும் இலங்கை அரசியலமைப்பின் வரையறைக்கு உட்பட்ட அதிகாரப் பகிர்வுப் பாதையூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்ற நிலைப்பாட்டுக்கு வந்தன.

இதன் விளைவாக தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான தேசம், இறைமை ஆகியவற்றினடிப்படையில் 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு 1977ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மக்களாணை வழங்கப்பட்டது. இந்த அடிப்படையிலேயே கடந்த முப்பது ஆண்டுகள் தமிழ் மக்களது உரிமைகளைப் பெறுவதற்கான பயணம் நடைபெற்றது.

### தோல்வியடைந்த தீர்வுப் பாதைக்கு மீண்டும் திரும்ப முயலும் கூட்டமைப்பின் தலைமைகள்

இந்நிலையில் தந்தை செல்வா தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒருபோதும் உதவாது என்று 35 வருடங்களுக்கு முன்னர் கைவிட்ட வழிமுறைகளை மீண்டும் கையாள கூட்டமைப்பின் தலைமை முயல்கின்றது. 2009 மே மாதத்தின் பின்னர் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மூத்த தலைமைகளினால் இரகசியமான முறையில் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களை ஈடுபடுத்தாமல் தீர்வுத்திட்ட வரைபு ஒன்று தயாரிக்கப்பட்டது. இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள வரைபில் தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படைகோட்பாடுகள் கைவிடப்பட்டுள்ளன. இந்த அடிப்படைப் பிறழ்வு நீண்டகாலமாக உறங்கு நிலையில் இருந்த பொழுதும் வன்னிப் போர் இறுதிக்கட்டத்தை நெருங்கும் பொழுதே வெளிப்படையாக தலைதூக்கியது.

### கொள்கைகளை காப்பதற்காக கூட்டமைப்பினுள் போராட்டம்

தீர்வுத் திட்ட வரைபு தயாரிக்கப்படுவது தொடர்பான தகவல் அறிந்த கூட்டமைப்பு உறுப்பினர்கள் பலர் கூட்டமைப்பின் மூத்த தலைமைகளுடன் தொடர்பு கொண்டு தீர்வுத் திட்ட வரைபானது தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான தேசம், தனித்துவமான இறைமை என்ற அடிப்படைகளிலேயே அமையவேண்டும் என வலியுறுத்தி வந்தனர். குறித்த தீர்வுத் திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டது. அந்தத் தீர்வுத் திட்ட வரைபானது தமிழ்த்தேசியத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கைவிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என உறுப்பினர்களில் பெரும்பாலானோர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அத்துடன் தாயகம்,தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான தேசம், அதன் தனித்துவமான இறைமை ஆகியன அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலேயே தீர்வுத் திட்டம் அமைய வேண்டும் என வலியுறுத்தினர்.

### கூட்டமைப்பு தலைமையின் பிடிவாதம்

மேற்படி உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்க முடியாது என கூட்டமைப்பின் மூத்த தலைமைகள் எதேச்சாதிகாரமாக மறுத்தனர். தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான தேசம், இறைமை என்ற அடிப்படைகளில் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைப்பதனை பிராந்திய சக்திகள் ஒருபோதும் விரும்பாது, ஏற்றுக்கொள்ளாது என்றும் அந்த சக்திகளின் விருப்பப்படியே தாம் செயற்படவேண்டும் என்றும் தாம் அதனையே கீடைப்பிடித்து வருவதாகவும் அடித்துக் கூறிவிட்டனர். அத்துடன் அதிகாரப் பகிர்வு அடிப்படையில் தாம் தயாரித்துள்ள தீர்வுத்திட்டத்தினையே முன்வைப்பது என தாம் தீர்மானித்துவிட்டதாகவும் உறுப்பினர்கள் யாருடைய ஆதரவு இல்லாவிட்டாலும் இந்தத் தீர்வுத்திட்ட வரைபை சமர்ப்பித்தே தீருவோம் என்றும் ஆணித்தரமாகக் கூறிவிட்டனர்.

நாம் பிராந்திய சக்திகளதோ அல்லது வேறு எந்தவொரு நாட்டினதுமோ நலன்களுக்கு எதிராக செயற்படும் நோக்கம் கொண்டவர்கள் அல்லர். எனினும் பிராந்திய சக்திகளினதும், ஏனைய நாடுகளினதும் விருப்பத்திற்கேற்ப வகையில் எமது மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளை கைவிட்டு தீர்வுத்திட்டம்




ஒன்றினை முன்வைக்க வேண்டும் என்ற கூட்டமைப்பு தலைமைகளின் சரணாகதி அரசியல் நிலைப்பாட்டினையே நாம் நிராகரிக்கின்றோம். எமது மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தி அதற்கான அங்கீகாரத்தினை பெறும் வகையில் பிராந்திய வல்லரசுடனும் ஏனைய உலக நாடுகளுடனும் நல்லுறவுகளை வலுப்படுத்த வேண்டும் என்பதே எனது உறுதியான நிலைப்பாடாகும். இதற்கான சாத்தியங்கள் நிறையவே உண்டு.

ஏனெனில் இலங்கை அரசின் வெளிவிவகாரக் கொள்கை செயற்பாடுகள் காரணமாக இலங்கை அரசு மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டிய தேவை சர்வதேச சமூகத்திற்கு அதிகரித்து வருகின்றது. இந்த அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கையை சர்வதேசம் தனது கையில் எடுக்கும் சாத்தியப்பாடுகள் நிறையவே உண்டு. இவ்வாறு உருவாகக் கூடிய சூழலை எமக்கு சாதகமாக பயன்படுத்த வேண்டுமாயின் நாம் எமது கொள்கை நிலைப்பாட்டில் சமரசத்திற்கு அப்பாற்பட்டவர்களாக மிகவும் உறுதியாக நிற்பது அத்தியாவசியம்.

### தமிழ்க் காங்கிரஸ் கூட்டமைப்பில்லிருந்து வெளியேறியது ஏன்?

யதார்த்தம் இவ்வாறு இருக்க தமிழ் மக்களின் அடிப்படை கொள்கைகளுக்கு முரணாக மூத்த தலைமைகள் தீர்மானங்களை மேற்கொண்டன. அந்தத் தீர்மானங்களுடனும் செயபாடுகளுடனும் இணங்க மறுத்து தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளை எடுத்துக் கூறிவந்த கட்சிகளைச் சாராத கூட்டமைப்பு உறுப்பினர்கள் திட்டமிட்டு அகற்றப்பட்டனர்.

கூட்டமைப்பு தமிழ் மக்களின் அடிப்படை கொள்கைகளில் உறுதியாகவும் பிளவின்றி ஒற்றுமையாகவும் இருக்க வேண்டும் என்று தமிழ் காங்கிரஸ் கட்சி ஆழமாக விரும்பி அதை நிறைவேற்ற சாத்தியமான அனைத்து வழிகளிலும் முயற்சி செய்தது.

இதன் கடைசிக் கட்டமாக எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் கோட்பாடுகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் (உதாரணமாக தீர்வுத்திட்டம் பற்றிய முடிவு) முடிவெடுக்கும் பொழுது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் தரப்புக்களினதும் ஏகமனதான ஒப்புதல் பெறப்படும் என்ற எழுத்து மூலமான உத்தரவாத்தை அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி கோரியது. இவற்றைக் கூட்டமைப்பின் தலைமை முற்றாக நிராகரித்த வேளையிலேயே அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி கூட்டமைப்பில் இருந்து வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

எனினும் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியானது கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது கூட்டமைப்பினுள் இருக்குமாறு அதன் மூத்த தலைமைகள் பிடிவாதம் பிடித்தன. ஆனால் கொள்கைகளை நேர்மையாகவும் உறுதியாகவும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கூட்டமைப்பிற்குள் இருந்து வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

### கூட்டமைப்பின் 'ஒற்றுமை' நாடகம்

தமது தவறுகளை மூடி மறைப்பதற்காக 'ஒற்றுமை' என்ற உயரிய விழுமியத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் கூட்டமைப்பின் ஒரு சிலரின் சுயரூபத்தினை தேர்தலுக்கு முன்னர் தமிழ் மக்களுக்கு தோலுரித்துக் காட்டவேண்டிய வரலாற்றுக் கடமை எமக்குள்ளது. இதன் மூலம் தமிழ் மக்கள் தமது தேசிய, அரசியல் அபிலாசைகளுக்காக உண்மையாகவும் உறுதியாகவும் குரல் கொடுக்கக் கூடியவர்களை தமது பிரதிநிதிகளாக தெரிவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதும் எமது முக்கிய பொறுப்பென நாம் உணர்கின்றோம்.

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உதயம்

இந்த நோக்கில் தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான தேசம், இறைமை ஆகிய அடிப்படை கொள்கைகளில் உறுதிப்பாட்டுடன் கூட்டமைப்பின் உள்ளிருந்தும் வெளியிருந்தும் செயற்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொது அமைப்புக்களை சார்ந்த பிரதிநிதிகளும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி என்ற புதிய அமைப்பை உருவாக்கியுள்ளோம்.

கூட்டமைப்பின் ஒற்றுமையைக் குலைப்பது எமது நோக்கமல்ல. தமிழ் மக்களின் வாக்குப் பலத்தை சிதறடிப்பதும் எமது நோக்கமல்ல. அதேபோல தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதும் எமது நோக்கமல்ல. தமிழ் மக்களின் வாக்குப் பலத்தை சிதறடிப்பதும் எமது நோக்கமல்ல. அதேபோல் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை குறைப்பதும் எமது நோக்கமல்ல.

ஆனாலும் கூட்டமைப்பைத் தவறான வழிக்கு இட்டுச் செல்லும் இந்தத் தலைமைகள் அகற்றப்படல் வேண்டும். இந்த தலைமைகள் யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடுகின்றனர். இந்த தவறான தலைமைகள் அகற்றப்பட வேண்டுமென்றால் திருகோணமலை,யாழ்ப்பாணம் ஆகிய தேர்தல் மாவட்டங்களில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்கடிக்கப்படல் வேண்டும்.

### மீண்டும் ஒற்றுமை

இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தூய்மை செய்யப்பட்டு அது ஆரம்பிக்கப்பட்ட உண்மையான அர்த்தத்தில் மீண்டும் வருவதற்கு வாய்ப்பு உண்டு.

அத்தகைய சூழ்நிலையில் அடிப்படை அரசியல் கொள்கைகளில் உறுதியாகவுள்ள அனைத்து தரப்புகளுடனும் ஒன்றிணைந்து செயலாற்ற தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி தயாராக உள்ளது.

தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் தாயகத்திலுள்ள தமிழ் மக்களுடனும்,புலம்பெயர் தமிழ் மக்களுடனும் இணைந்து சர்வதேச சமூகத்துடன் செயலாற்றி தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான தேசம், இறைமை ஆகிய தனித்துவமான கொள்கைகளுக்கான அங்கீகாரத்தை பெற்று அதனடிப்படையில் கௌரவமான, பாதுகாப்பான அரசியல் தீர்வு அடைவதற்காக அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் உழைக்கும் என சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி உறுதியளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தை எம்மை நோக்கி அணிதிரளச் செய்யும் இலக்குடனேயே புதிய வரைவு உருவாக்கப்பட்டது

## எனினும் தேர்தலின் பின்னர் எல்லோரும் இணைந்து புதியதை உருவாக்க முடிவாகியது

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை இங்கே பிரசுரமாகிறது. அதன் வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனை அனுப்பி வைத்தார்.



தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகி தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணியை உருவாக்கியமை தொடர்பாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வெளியிட்டதாக ஒரு கட்டுரை பத்திரிகைகளுக்கு வெளியிடப்பட்டுள்ளது. அது தொடர்பான உண்மை விடயங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிக்கொணர விரும்புகின்றது.

மே மாதம் 2009 ஆம் ஆண்டில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பேரழிவிற்குப் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் நிலவி வந்த ஒற்றுமையை அதன் தலைமையான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் திட்டமிட்டு சிதைத்துவிட்டனர் எனவும், கூட்டமைப்பின் பெரும்பான்மையான உறுப்பினர்களதும், மக்களினதும் செயற்பாட்டாளர்களினதும் பங்களிப்பு இல்லாது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அடிப்படைக் கொள்கைகளை கைவிட்டு அவசரத் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்ததாகவும் தமிழ் காங்கிரஸால் குற்றம் சாட்டப்படுகின்றது.

தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி என்ற அமைப்பு எங்கு நடந்த கூட்டத்தில் எப்படி உருவாக்கப்பட்டது. அதில் யார் யார் எல்லாம் பங்குபற்றினார்கள்? அதன் தலைவர் யார்? அதன் செயலாளர் யார்? இவை எதுவும் தமிழ் காங்கிரஸ் வெளியிட்ட அறிக்கையில் இல்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பான்மையான அங்கத்தவர்களின் ஒத்துழைப்பின்றித்தான் ஓர் அரசியல் தீர்வுத்திட்டம் தயாரித்ததாகக் கூறுகின்றவர்கள் குறைந்தபட்சம் அப்படி எதிர்க்கருத்துள்ளவர்களுக்காவது தமது தேசியத்திற்கான மக்கள் முன்னணி உருவாக்குவதற்கு அழைப்பு விடுத்தார்களா?

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சிதைவிற்குக் காரணம் சம்பந்தன், சுரேஷ், மாவை எனக் கூறுபவர்கள், அவர்கள் தவிர்ந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் எத்தனை பேருக்கு புதிய முன்னணி அமைக்க அழைப்பு விட்டனர். திருமலையில் தமிழ் காங்கிரஸ் சார்பாக போட்டியிடுபவர்களுக்கு இப்படி ஒரு முன்னணி உருவானதைப் பற்றியாவது தெரியுமா?

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் என்பது அது ஏற்படுத்தப்பட்ட நாளில் இருந்து சம்பந்தன், மாவை, சுரேஷ், செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகிய ஐவரைக் கொண்ட தலைமைத்துவமாகவே இருந்து வந்திருக்கின்றது. கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தலைவராக சம்பந்தன் இருந்ததுடன் தமிழரசுக்கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தலைமைத்துவத்தை சார்ந்தவர்களே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்திலும் இருந்தார்கள்.

இவர்கள் தவிர மேற்கண்ட கட்சிகள் சார்பாக தேர்தலில் வெற்றியடைந்துவந்த பிரதிநிதிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வன்னியிலும், யாழிலும், கிழக்கிலும் நியமிக்கப்பட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களையும் உள்ளடக்கியதாகவே இக்கூட்டமைப்பு இருந்தது. இதில் மூவரை மட்டும் பெயர் குறிப்பிட்டு சிதைவிற்கு காரணகர்த்தாக்கள் எனக் குற்றம் சாட்டும் கஜேந்திரகுமார். ஏன் செல்வம் அடைக்கலநாதன் உட்பட ஏனையோருக்கு அழைப்பு விடுக்கவில்லை. இது ஒன்றே இவர்களின் பொய்யான முகமூடிகளைக் காட்டவில்லையா?

மே மாதம் 2009 ஆம் ஆண்டிற்குப் பின் நாம் எமது கொள்கையில் இருந்து தடம் புரண்டோம் புதிய தீர்வுத் திட்டம் என்ற ஒன்றைத் தயாரித்தோம் என்று கூறும் பத்மினி, கஜேந்திரன் ஆகியோரிடம் ஒன்றைக் கேட்க விரும்புகின்றோம். மே 2009 இற்கு முன்னரும் பின்னரும் நீங்கள் எங்கிருந்தீர்கள்? உங்களுடன் கலந்துரையாடவில்லை எனக் கூறும் நீங்கள் நோர்வேயிலும், இங்கிலாந்திலும் என்ன செய்து கொண்டிருந்தீர்கள். வருடக் கணக்காக வெளியில் இருந்த நீங்கள் இதற்கு மேலும் நாடாளுமன்றத்தில் லீவு எடுக்க முடியாது. பதவிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற பொழுது பாய்ந்தடித்து கொழும்பிற்கு வந்த நீங்கள் ஏன் ஒரு வருடம் முன்னரே வந்திருக்கக்கூடாது?

இவர்கள் கூறும் குற்றச்சாட்டுக்களில் ஒன்று தம்முடன் கலந்து பேசாமல் ஓர் தீர்வுத்திட்டத்தை உருவாக்கியிருக்கின்றோம் என்பது. அத்தீர்வுத் திட்டமானது கூட்டமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரணாக இருக்கின்றது என்பதும் அவர்களது வாதம்.

தீர்வுத் திட்டத் தயாரிப்பொன்றை மேற்கொள்வதற்காக இலங்கையில் இருந்த சம்பந்தன், கஜேந்திரகுமார், மாவை, சுரேஷ் ஆகியோர் அடங்கிய குழு (அப்பொழுது செல்வம் அடைக்கலநாதன் இங்கிருக்கவில்லை) கூட்டமைப்பின் ஆதரவு சக்தியான ஓர் சட்டத்தரணிகள் குழுவுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி ஓர் வரைவை உருவாக்கும்படி அவர்களைக் கேட்டிருந்தோம். இக்கூட்டத்திற்கு கஜேந்திரகுமாரும் வந்திருந்தார். நாங்கள் கலந்துரையாடியது போக மேலதிகமான ஆலோசனைகள் இருப்பின் மின் அஞ்சல் ஊடாக அனுப்பும் படியும் சட்டத்தரணிகள் கேட்டிருந்தனர். இக்கூட்டம் முடிந்ததும் இங்கிலாந்து சென்ற கஜேந்திரகுமார் அவர்கள் இறுதி வரை தனது ஆலோசனைகள் என்னவென தெரிவிக்கவில்லை.

இரண்டாவதாக பலமாதங்களாக நாம் கேட்டுக்கொண்ட வரைபு (Draft) பூர்த்தி அடையாமல் இருந்தது. இதற்கு சட்டத்தரணிகளுக்கு நெருக்கடியாக இருந்த வேலைகளும் ஒரு காரணம். எனவே இவற்றை முடிப்பதற்கு இலண்டனில் இருந்த கஜேந்திரகுமாரையும் அழைத்தோம். அவருக்கு மேலும் இரண்டு வாரம் கால அவகாசம் தேவையாக இருந்தது. இங்கு சட்டத்தரணிகளுக்கு அவர் வரும் நாள்களில் நேரப்பிரச்சினை இருந்தது. இந்த சமயத்தில் தான் சில நாள்கள் இரவும் பகலும் உட்கார்ந்து ஓர் வரைபை செய்து முடித்தோம்.

பின்னர் இவ்வரைபு நாடாளுமன்றக் குழுவின் கருத்தை அறிவதற்காக அவர்கள் முன் வைக்கப்பட்டது. வரிக்கு வரி விவாதிக்கப்பட்டது. இதில் திருத்தங்கள் தேவையா என ஆலோசனை கேட்கப்பட்டது. சிலரால் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. இதில் மிகப் பெரும்பாலான நாடளுமன்ற உறுப்பினர்கள் வரைபை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் கஜேந்திரகுமார், கஜேந்திரன், பத்மினி போன்றோருக்கு முரண்பாடுகள் இருந்ததாகக் கூறப்பட்டது. பின்னர் கஜேந்திரகுமார், பத்மினி போன்றோர் சட்டத்தரணிகள் உடனான கலந்துரையாடல்களுக்கு அழைக்கப்பட்டனர். அங்கும் பல மணிநேரம் விவாதித்து தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டனர்.

இதிலுள்ளவற்றை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்க முன் வருமானால் அது பெரிய விடயம் என்ற பதிலைத்தான் அன்று கஜேந்திரகுமார் சட்டத்தரணிகளிடம் கூறினுர். இவர் தான் இன்று கூறுகின்றார் மூன்று பேர்களால் இரகசியமாக உருவாக்கப்பட்ட ஓர் தீர்வுத் திட்டம் என்று. ஓர் வரைபு உருவாக்கப்பட்டால் தான் அதில் உள்ள சரி பிழைகள், என்ன மாற்றம் செய்ய வேண்டும் போன்ற விடயங்களைப் பற்றிப் பேசலாம். அதனைத் தான் நாங்கள் செய்தோம். அதன் பன்னர் விவாதித்தோம், திருத்தினோம் என்பது தான் உண்மை. எந்த ஒரு வரைபும் இல்லாமல் ஒரு விடயத்தைப் பேசுவோமாக இருந்தால். அது பேசிய இடத்துடன் முடிந்துவிடும். அந்த அடிப்படையில் தான் எம்மால் ஒரு வரைபு உருவாக்கப்பட்டது. கஜேந்திரகுமாருக்கு மாற்றுச் சிந்தனை இருக்குமானால் வேறு ஒரு வரைபை முன்வைத்து விவாதித்திருக்கலாம். ஆனுல் தத்துவங்களைப் பேசுவோர் அது எதனையும் முன்வைக்கவில்லை. எனவே தமக்குத் தெரியாமல் தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டது என்பது முழுமையான பொய்யாகும்.

இப்பொழுது இன்னுமொரு விடயத்தை முன்வைக்கின்ருர். அதாவது தமிழ் மக்கள் ஓர் தனித்துவமான தேசிய இனம் இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு பிராந்தியம் தமிழர்களின் தாயகம், தமிழ் தேசத்திற்கு சுயநிர்ணய உரிமை [illegible] இவை 2001, 2004ஆம் ஆண்டுகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சுட்டிக்காட்டப்பட்டன. இதிலிருந்து யாரும் விலகமுடியாது என காங்கிரஸ் கஜேந்திரகுமார் கூறுகின்றார். இதை கஜேந்திரகுமார் சொல்லித்தான் யாரும் அறியவேண்டியதல்ல. 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானத்திலும், 1985 திம்புப் பிரகடனமாகவும் அதனை வெளியிட்டவர்கள் கூட்டணியும், ரெலோவும், ஈபிஆர்எல்எப், எல்ரீரீ போன்ற அமைப்புக்கள். கூட்டமைப்பில் இருக்கும் TELOவும், EPRLFஉம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக ஆயுதம் எடுத்துப் போராடியவர்கள். அதேபோன்று வடக்கு கிழக்கு இணைப்பதற்கு இறுதி வரை போராடியது கூட்டணி, அதிலும் பிரத்தியேகமாக சம்பந்தனின் தனிப்பட்ட முயற்சி இதில் மிகவும் கனதியானது.

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த இடத்திலும் விட்டுக்கொடுத்தது கிடையாது

வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் ஓர் தேசிய இனம், அவர்கள் தொடர்ச்சியான நிலப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கென தனித்துவமான மொழி, கலை, கலாசாரம், பண்பாடுகள் உள்ளன. அவர்களது பிரதேசத்திற்கான பொருளாதார வளங்கள் உண்டு. இந்த அடிப்படையில் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. இவற்றை தமிழ் தேசியக் கூட்டமைப்பில் யாரும் மறுதலித்தது கிடையாது. இந்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் காணி, பொலிஸ், நிதி உட்பட முழுமையான அதிகாரப் பகிர்வொன்று சமஷ்டி அரசியல் அமைப்பு முறையின் ஊடாக உருவாக்கப்பட வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோருகின்றது. இதனை எந்த ஓர் இடத்திலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு விட்டுக் கொடுத்தது கிடையாது.

சிறீலங்காவின் இறையாண்மையை ஏற்றுக்கொள்ள முடியாது தாயகம், தேசி




யம், சுயநிர்ணய உரிமை தனித்துவமான தேசம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் வட்டுக்கோட்டைப் பிரகடனம் செய்யப்பட்டது. அதிலிருந்து கூட்டமைப்பு விலகி விட்டது என்றும் தாம் மாத்திரம் தான் மேற்கண்ட கொள்கைகளில் உறுதியாக இருப்பது போன்ற புலுடாவை விட சிலர் ஆரம்பித்துள்ளனர். சிறீலங்காவின் இறையாண்மையை ஏற்றுக்கொள்ளவில்லை எனக் கூறிக்கொள்பவர்கள் என்ன அடிப்படையில் ஆறாவது திருத்தச் சட்டத்தின் கீழ் இலங்கை அரசிற்கும் அதன் அரசியல் சாசனத்திற்கும் விசுவாசமாக இருப்பேன் என சத்தியப் பிரமாணம் செய்கின்றார்கள்.

வேட்பு மனுத் தாக்கல் செய்யும் பொழுதும், வெற்றி அடைந்து நாடாளுமன்றத்திற்குப் போகும் பொழுதும், இந்த சத்தியப் பிரமாணத்தைச் செய்து தானே போகின்ருர்கள். அப்பொழுது சிறீலங்காவின் இறையாண்மையை ஏற்றுக் கொண்டார்களா? இல்லையா? தமிழ் மக்களுக்கு அரசியலைப் பற்றி ஒன்றும் தெரியாது, ஏமாற்றி விடலாம் என்று சிந்திக்கின்றார்களா? உண்மையாகவே சிறீலங்காவின் இறையாண்மையை இவர்கள் ஏற்றுக் கொள்ளாவிடின் நாடாளுமன்ற அரசியல் முறையைக் கைவிட்டு அவர்கள் சொல்கின்ற தனித்துவத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக போராட வேண்டும். அப்படிச் செய்தால் அதில் ஓர் அர்த்தம் இருக்கும். அதனை விடுத்து சொல் வேறாகவும், செயல் வேறாகவும் இருப்பது சுத்த ஏமாற்றுவித்தையே தவிர வேறல்ல.

இவை ஒருபுறம் இருக்க இலங்கையின் இறையாண்மையை ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கை இரு தேசங்களின் கூட்டு எனக் கூறும் இவர்கள் இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் இனப்பரச்சினைக்கான தீர்வாக இத்தத்துவத்தையே கூறிக்கொண்டிருக்கப் போகின்றார்களா? இல்லையேல் இதன் அடிப்படையில் ஏதாவது தீர்வுத் திட்டம் இவர்களிடம் உண்டா? இனப் பிரச்சினைத்தீர்வின் அடுத்த கட்டம் நோக்கி எவ்வாறு [illegible] போகின்றோம். சுல [illegible] பேசலாம். அதற்கான காரண காரியங்களையும் விளக்கலாம்.

ஆனால் அவையெல்லாம் தமிழ் மக்களுக்கு தீர்வை ஏற்படுத்தித் தருமா?

முப்பது வருட அகிம்சைப் போராட்டம் 30 வருட ஆயுதப் போராட்டத்தின் பின் தோல்வியுற்ற தீர்வுப் பாதைக்கு, மீண்டும் திரும்புகின்றோம் என குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்கள். 60 வருடப் போராட்டத்தின் பின் எதுவும் இல்லை என ஒதுங்கப் போகின்றோமா? அல்லது காங்கிரஸ் கஜேந்திரகுமார் போல் தத்துவம் பேசுவோம் ஆனால் தீர்வைப் பற்றி அக்கறை இல்லை என இருக்கப் போகின்றோமா? அல்லது தமிழ் மக்களின் தேசம், தேசியம், இறைமை இவற்றைக் காப்பாற்றக் கூடிய ஒரு தீர்வை நோக்கிப் போகப் போகின்றோமா? தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரட்டுத்தனமாக தத்துவம் பேசிக் கொண்டிருக்க விரும்பவில்லை.

அதேசமயம் எமது அடிப்படைக் கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் தமிழ் மக்களுக்கு நீதியான ஒரு தீர்வை நோக்கி நாம் போகவேண்டுமென விரும்புகின்றோம். விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக பலம் பொருந்திய அமைப்பாக இருந்த பொழுது அவர்களுக்கு பேரம் பேசும் ஆற்றல் இருந்தது. அதன் ஊடாக தமிழ் மக்களுக்கு உச்சபட்ச அதிகாரங்களை அவர்கள் பெற்றுக் கொடுப்பார்கள் என நாங்கள் எல்லோரும் எதிர்பார்த்தோம். மாறாக இராணுவப்பலம் சிறீலங்கா இராணுவத்தால் நிர்மூலம் செய்யப்பட்டது. யுத்தத்தில் வென்ற அரசு தமிழர்களுக்கு எதுவுமே கொடுக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றது. புலிகளும் இல்லை. எமக்கு பேரம் பேசும் வலுவும் இல்லை. இந்த நிலையில் அடுத்த கட்டத்தை எவ்வாறு நகர்த்துவது என்பதைச் சிந்திக்கவேண்டும்.

### கூட்டமைப்பின் தீர்வுத் திட்டம் எத்தகையது

இன்று எமக்கு இருக்கக் கூடிய ஒரே ஒரு சாதகமான நிலைமை சர்வதேச சமூகம் காட்டக் கூடிய குறைந்தபட்ச அக்கறை. ஐக்கிய நாடுகள் சபையும் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் பிரித்தானியாவும் இன்னும் பல நாடுகளும் எமது இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கூறுகின்றார்கள். எனவே இவர்களின் ஆதரவுடன் தீர்வொன்றை எட்டுவதற்கு முயற்சிப்பதே புத்திசாலித்தனமான சிந்தனையாக இருக்க முடியும். சர்வதேச சமூகத்தின் ஆதரவை நாம் பெற்றுக்கொள்ளவேண்டுமாயின், எமது அடிப்படைக் கோட்பாடுகளை விட்டுக் கொடுக்காமல் அதேசமயம் கடும் போக்காளர்கள் என்னும் தன்மையைக் காட்டிக் கொள்ளாமல் தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் அதிகாரங்களுடன் தம்மைத் தாமே ஆளக்கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். அப்படியான ஓர் திட்டத்தைத்தான் கூட்டமைப்பு உருவாக்கியது.

எமது தீர்வுத்திட்டத்தை சர்வதேச சமூகம் நிராகரிப்பது கடினமானது ஏனெனில் உலகின் பல பாகங்களில் இவ்வாறான சமஷ்டி அரசியல் அமைப்பு முறையிலான தீர்வுத்திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் 13வது திருத்தத்தையே கொடுக்க விரும்பாத இலங்கை அரசு அவ்வாறான தீர்வுத் திட்டத்தையே ஏற்றுக் கொள்ளமாட்டாது என்பதையும் நாங்கள் அறிவோம். இந்த நிலையில் சர்வதேசம் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை இலங்கை நிராகரிக்கும் பொழுது இலங்கை மீது அழுத்தம் செலுத்தவோ, அல்லது தமிழ் மக்களின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு வேறு வழிமுறைகளை கையாளவேண்டிய தேவையோ சர்வதேசத்திற்கு ஏற்படலாம். எனவே கூட்டமைப்பின் தீர்வுத்திட்டம் என்பது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுக்காத அதிகபட்ச அதிகாரங்களைக் கொண்ட அதேசமயம் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத் திட்டமாகவே இதனை நாம் தயாரித்தோம்.

இதன் மூலம் சர்வதேச சமூகத்தை எமது ஆதரவு சக்தியாக மாற்றமுடியும் என்பதுடன், அரசாங்கத்தின் தமிழ் மக்களுக்கு எதிரான நியாயமான தீர்வுக்கெதிரான போக்குகளையும் சர்வதேச அரசுகள் புரிந்துகொள்ளச் செய்யலாம். ஆனால் இதனை விடுத்து இலங்கையின் இறையாண்மையை ஏற்றுக் கொள்ளமுடியாது. இலங்கை இரு தேசங்களின் கூட்டு எனக் கூறும்பொழுது வெளி உலகமோ, சர்வதேச சமூகமோ சரி

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிழக்கில் தமிழ் பிரதிநிதித்துவ.....

(13 பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் யாழ். மாவட்டத்தில் தாங்கள் தனியாகப் போட்டியிடுவதற்கு அ[illegible]ளுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் தங்களின் வேட்பாளர்களை நிறுத்தி வாக்குகளைப்பிரித்துத் தமிழ்ப் பிரநிதித்துவத்தை இல்லாமல் செய்து அதை சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் வழங்குவதற்கு துணைபோவதென்பது கிழக்குத் தமிழ் மக்களுக்கு செய்யும் வரலாற்றுத் துரோகமாகும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் வடக்கு, கிழக்கில் இடது சாரி முன்னணிக்குத் தலைமை தாங்கும் சிவாஜிலிங்கத்திற்கும் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் கிழக்கு மாகாணத்தில் தாங்கள் ஓர் ஆசனத்தைக் கூட பெறமாட்டோம் என நன்றாகத்தெரியும்.

இதேபோன்று பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்கும் யாழ்ப்பாணம் மற்றும் வன்னியில் தமக்கு ஒரு ஆசனம் கூடக் கிடைக்காது என தெரிந்தும் தமிழ் வாக்குகளைப் பிரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அக்கட்சி வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருக்கிறது.

இம்முறை சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிக்க வேண்டும் என கங்கணம் கட்டியிருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவாஜிலிங்கம் போன்றவர்கள் உண்மையில் வடக்கு, கிழக்கு இணைப்பையும் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் வேறு இனத்தவர்களுக்கு செல்லாது தமிழர்களுக்கே கிடைக்க வேண்டும் என்ற இனப் பற்றும் இருக்குமாக இருந்தால் நிச்சயமாகக் கிழக்கு மாகாணத்தில் தமிழர் பிரதிநி[illegible]த்துவத்திற்கு வேட்டு வைக்கும் வேலையில் ஈடுப[illegible]டிருக்க மாட்டார்கள்.

கிழக்கு மாகாண மக்களின் பிரதிநிதித்துவத்தைப் பறித்து சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கொடுப்பதற்குத் துணைபோயிருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவாஜிலிங்கம் வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் எனப் பேசுவதற்கான அருகதையை இழந்து விட்டனர். இது கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு செய்யும் வரலாற்றுத்துரோகமாகும்.

ஜி.ஜி பொன்னம்பலம் மலையகத்தமிழர்களின் வாக்குரிமையை பறிப்பதற்குத் துணைபோன துரோகத்தை வரலாறு இன்றும் சுட்டி நிற்பது போல அவரின் பேரனான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைப் பறிப்பதற்கு இன்று முற்பட்டிருக்கின்றமையை கிழக்கு மாகாண மக்கள் வரலாற்றில் மன்னிக்க மாட்டார்கள். இந்த வேளையில் ஜி.ஜி.பொன்னம்பலம் கிழக்கு மாகாண தமிழ் மக்களுக்குச் செய்த ஒரு நன்மையையும் சுட்டிக்காட்ட வேண்டியது எமது கடமையாகும். 1970 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வடபகுதியில் தமிழரசுக்கட்சியுடன் போட்டியிட்டு வந்த போதிலும் ஜி.ஜி.பொன்னம்பலம் தனது கட்சி சார்பில் கிழக்கில் வேட்பாளர்களை நிறுத்தவில்லை.கிழக்கில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியும் தமிழரசுக் கட்சியும் ஒரேதொகுதியில் போட்டியிட்டால் தமிழ்ப் பிரதி நிதித்துவம் பறிக்கப்பட்டு வேறு ஒரு இனத்திற்குச் சென்று விடும் என்ற காரணத்தினாலேயே அந்த வேளையில் அவர் அரசியல் விவேகத்துடன் நடந்து கொண்டார்.

அவரின் விவேகம் அவரின் பேரனான கஜேந்திரகுமாருக்கு வரவில்லையா அல்லது அது தெரிந்திருந்தும் கிழக்கு மக்களின் பிரதிநிதித்துவத்திற்கு ஆப்பு வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செய்கிறாரா? என்பதற்கு அவர்தான் பதில் தர வேண்டும்.

### திருகோணமலை

திருகோணமலையில் தமிழர்களின் வாக்காளர் வீதம் வீழ்ச்சியடைந்து வருகிறது. 1963ஆம் ஆண்டில் தமிழர்கள் 36 வீதமாகவும், முஸ்லிம்கள் 29.4 வீதமாகவும், சிங்களவர்கள் 28.8 வீதமாகவும் காணப்பட்டனர். ஆனால் 2007ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் 45.4 வீதமாகவும், தமிழர்கள் 28.6 வீதமாகவும் சிங்களவர்கள் 25.4 வீதமாகவும் காணப்படுகின்றனர். தற்போது மூதூர் இடப்பெயர்வு, ஈச்சிலம்பற்று இடப்பெயர்வு, சிங்களவர்களின் குடியேற்ற அதிகரிப்பு ஆகியன காரணமாகவும், முஸ்லிம்களின் சனப்பெருக்கம் காரணமாகவும் தமிழர்களின் வீதம் மேலும் வீழ்ச்சியடைந் துள்ளது. இந்நிலையில் தமிழ்க் கட்சிகள் ஒவ்வொன்றும் தனித் தனியாகப் போட்டியிடுவதும் சிங்களக் கட்சிகளுக்குத் தமிழர்கள் வாக்களிப்பதும் கடந்த தேர்தலைப் போல இரு ஆசனங்களைப் பெறுவது என்பது முடியாத காரியமாகும்.

### அம்பாறை

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையோடு தமிழ்க் கட்சி ஒன்றுக்கு வாக்களிக்கும் பட்சத்திலேயே ஓர் ஆசனத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். 2001, 2004 ஆம் ஆண்டுகளில் இந்த ஒற்றுமை பேணப்பட்ட காரணத்தாலேயே தமிழர் ஒருவர் இம்மாவட்டத்தில் தெரிவாகும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மேலதிகமாக சிவாஜிலிங்கத்தின் இடதுசாரி முன்னணி, ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலைக்கூட்டணி எனப் பல கட்சிகள் போட்டியிடுகின்றமை தமிழர் பிரதிநிதித்துவத்தை கேள்விக் குறியாக்கியிருக்கிறது.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, இடதுசாரி முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்படப் பல கட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன.

2000ஆம் ஆண்டில் தமிழ் கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டு வாக்குகளைப் பிரித்த தாலும், ஐக்கிய தேசியக்கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகளுக்கு தமிழ் மக்கள் வாக்களித்ததன் காரணமாகவும் தமிழருக்குக் கிடைக்க வேண்டிய இரு ஆசனங்களை அவர்கள் இழக்க நேரிட்டது. அத்தேர்தல் முடிவை ஒத்த அபாயம் ஒன்றே சிவாஜிலிங்கம் மற்றும் சிங்கள கட்சிகளில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களின் செயல்களால் தோன்றியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் தமிழர்கள் போட்டியிடுகின்ற போதிலும் அக்கட்சியில் போட்டியிடும் ஹிஸ்புல்லா மற்றும் அமீர்அலி போன்றவர்களே அதிக விருப்பு வாக்குகளைப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அக்கட்சியில் போட்டியிடும் தங்கேஸ்வரி, கணேசமூர்த்தி போன்றவர்களால் முஸ்லிம் வேட்பாளர்களை விட அதிக விருப்பு வாக்குகளைப் பெறுவதென்பது இயலாத காரியம். தமிழ் வேட்பாளர்களால் வாக்குகளை எடுத்து முஸ்லிம் வேட்பாளர்களை வெல்ல வைக்க முடியுமே அன்றி வெற்றிபெறுவது என்பது நடக்காத காரியம். காத்தான்குடியில் ஹிஸ்புல்லாவுக்கு 25ஆயிரம் வாக்குகளும், ஓட்டமாவடியில் அமீர் அலிக்கு 20 ஆயிரம் வாக்குகளும் கிடைக்க கூடிய நிலையே காணப்படுகிறது. அவர்களைவிட அதிக வாக்கை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களால் பெறமுடியாது.

எனவே நடைபெறப்போகும் தேர்தல் என்பது கிழக்கு மாகாண மக்களுக்குப் பல படிப்பினைகளைத் தரப்போகின்றது என்பது மட்டும் உண்மை. வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் எனப் பெரிதாகப் பேசி வரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவாஜிலிங் கம் ஆகியோர் கிழக்கு மாகாண மக்களின் பிரதிநிதித்து வத்தைப் பறித்து சிங்களவர்களுக்கோ அல்லது முஸ் லிம்களுக்கோ கொடுப்பதற்குத் துணைபோகின்றமை கிழக்குத் தமிழ் மக்களுக்குச் செய்யும் வரலாற்றுத் துரோகமாகும்.

கடந்த கால வரலாற்றை உணர்ந்து கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் ஒற்றுமையோடு செயற்பட்டுத் தங்களின் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

★ நன்றி: 'தமிழ்வின்' இணையம்

Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

- தபால் மூலம் -
தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Feb.2010 To July 2010

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவலை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.alcomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி :10.03.2010

வேலையாள்கள் தேவை

01. விற்பனைப் பிரதிநிதிகள்.
02. கூலியாள்கள்.
03. சாரதி.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
368, முஸ்லிம் கல்லூரி வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
(95363)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

அன்னை மடியில் 05 ★ 11 ★ 1948



ஆண்டவன் அடியில் 03 ★ 02 ★ 2010

அமரர் கார்த்திகேசு சிவபாலன்

வார்த்தைகளால் சொல்ல முடியாத சிவபாலனாக
கோப்பாய் ஈன்ற அன்பனாக
அன்பிற்கோர் அணிகலனாக
பண்பிற்கோர் பகலவனாக
பேர் புகழ் விரும்பாத பேராளனாக
ஊருக்கு உழைத்த உத்தமனாக
வாழ்ந்து ஒளியூட்டிய சுடரே
தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
நீர்வேலிக் கந்தன் அருள் பாலிக்க பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல: 87, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(95360)
யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும் சமாசமும்.

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

ஈழ மண்ணில் 10 ★ 01 ★ 1950



பாரத விண்ணில் 04 ★ 03 ★ 2005

S.Kசிவபாலன்
(இசைப்பேராசிரியர், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம்)
திதி: 04.03.2010

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கதிரவேலு- கமலாம்பிகையின் சிரேஷ்ட புத்திரனும், சிதம்பரம் "அண்ணாமலைப் பல்கலைக் கழக" இசைப்பேராசானாகவும் விளங்கியவர். சங்கீத வித்வான், பண்ணிசைக் கலாநிதி, திருமுறைத் திலகம் ஆகிய 3விருதுகளும் பெற்றுள்ளார்.

7ஆய்வு நூல்களும், 2ஒலி நாடாக்களும் வெளியீடு செய்தும் தமிழ் நாடு அரசினால் சாகித்திய மண்டலப் பரிசும் பெற்று (முதலமைச்சர் கருணாநிதியிடம்) 2தங்கப்பதக்கங்களும்,3வெள்ளிப்பதக்கங்களும் பெற்றுப் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டவராவார்.

1975இல் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் முதலாவது குருமகா சந்நிதானத்தினால் அவரது 9ஆவது பீடாரோகண விழாவின் போது "பண்ணிசைக் கலாநிதி" என்னும் பட்டமும் பெற்று கௌரவிக்கப் பட்டுமுள்ளார் நான்கு ஆண்டுகள் ஆதீன ஓதுவார் மூர்த்தியுமாவார்.

நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் என்றென்றும் எம்முடன் வாழும்.

ஓம் ஸ்ரீ நாகபூசஷணி அம்மன் ஆலயம்,
கந்தசாமி ஆசிரியர் வீதி,
கந்தரோடை,சுன்னாகம்.
(95360)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியான ஜனநாயகத் தேர்தலுக்கு சர்வமதத் தலைவர்களும் அழைப்பு

கொழும்பு, மார்ச் 04

ஜனநாயக நாட்டில் அனைவரும் அச்சமின்றி, பயமின்றித் தேர்தலில் வாக்களிக்கும் பின்னணியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசின் பெரும் பொறுப்பாகும்



என சர்வமதப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

அரசும் எதிர்க்கட்சிகளும் தேர்தல் விஞ்ஞாபனத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். தேர்தல் மேடைகளைச் சேறு பூசும் இடமாகப் பயன்படுத்தக் கூடாது என்றும் தாங்கள் கோரிக்கை விடுக்கிறார்கள் என வண.மாதுலுவாவே சோபித்த தேரர் குறிப்பிடுகின்றார்.

கொழும்பு நாரஹேன்பிட்டி அபேராம புராண விகாரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சர்வமதப் பேரவையின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

வண.மாதுலுவாவே சோபித்த தேரர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் ஆகிய நான்கு சமயங்களையும் உள்ளடக்கிய நாடு. இங்கு அமைதியான தேர்தல் - ஜனநாயக நடவடிக்கை - இடம்பெறவேண்டும் என்பதே அனைத்து சமயத் தலைவர்கள் என்ற ரீதியில் எமது எதிர்பார்ப்பாக உள்ளது. ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் அச்சமின்றி, பயமின்றித் தேர்தலில் வாக்களிக்கும் பின்னணியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது அரசின் பொறுப்பாகும்.

தேர்தல் நடைபெறும் காலகட்டத்தில் தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியா போன்ற நாட்டில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. அத்துடன் அவர் தனது அதிகாரங்களை உரிய முறையில் பயன்படுத்துவார். இலங்கையில் நிலைமை வேறு விதமாக உள்ளது.

அதேபோல், இவ்விடயத்தில் பொலிஸாருக்கும் அதிக பொறுப்புகள் உள்ளன. சட்டத்தையும், ஒழுங்கையும், அமைதியையும் நாட்டில் ஏற்படுத்த வேண்டியதே பொலிஸாரின் முக்கிய கடமையாகும். பொலிஸார் ஒரு கட்சிக்கோ, ஓர் இனத்துக்கோ, ஒரு மதத்துக்கோ உரியவர்கள் அல்லர். அவர்கள் நாட்டுக்குச் சொந்தமானவர்கள். பொலிஸார் பக்கச்சார்பற்ற விதத்தில் நடக்கவேண்டும். நாட்டில் சமாதானம், ஒழுங்கு, சட்டம் ஆகியவற்றை நிலைநாட்டுவதற்காகப் பொலிஸாருக்கும் மக்களே சம்பளம் வழங்குகின்றனர் - என்றார்.

கத்தோலிக்க திருச்சபையின் இரத்தினபுரி மாவட்ட ஆயரும் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டார். (சி)

# இந்தோனேசிய அகதிகள் மேற்கொண்ட உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

கொழும்பு, மார்ச் 4

இந்தோனேசிய கடற்பரப்பில் கப்பலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் மேற்கொண்டு வந்த உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டுள்ளதாக உண்ணாவிரதம் இருந்த ஒருவர் பி.பி.ஸிக்கு தகவல் அறிவித்துள்ளார்.

கப்பலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமக்கு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் தந்த அகதி அந்தஸ்துக்கடிதங்களை கொண்டு சுதந்திரமாக நடமாட அனுமதி தரவேண்டும் எனக்கூறியே இவர்கள் கடந்த சில நாள்களாக உண்ணா விரதம் இருந்து வந்தனர்.

தம்மை உண்ணாவிரதத்தை கைவிடுமாறு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனமும் இந்தோனேசிய உயரதிகாரிகளும் வற்புறுத்தியதாகவும் மேலும் இந்தோனேசிய உயரதிகாரிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி வழங்காமல் தடுத்ததாகவும் அற்புதன் எனப்படும் தமது நண்பரை தாக்கியதாகவும் அவர் மேலும் சொன்னார்.

இதேவேளை உண்ணாவிரதத்தை கைவிட்டாலேயே யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினர் உண்ணாவிரதம் கைவிடப்பட்ட 3 நாள்களுக்குள் தம்மை சந்திப்பர் எனக் கூறப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

தமது நண்பர்கள் 10 பேருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டது போன்று தம் அனைவருக்கும் வழங்கவேண்டும் எனக்கோரியதுடன் யு.என்.எச்.சி.ஆர். வழங்கிய அகதி அந்தஸ்துக் கடிதத்துடன் நடமாடும் சுதந்திரத்தைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள்விடுத்தார். (6)

# மனித உரிமைப் பேரவையின் மாநாட்டில் பங்கேற்க சட்ட மா அதிபர் ஜெனீவாவுக்கு

கொழும்பு, மார்ச் 04

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளில் கலந்து கொள்வதற்காக சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் ஜெனீவாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

சட்ட மா அதிபர் தலைமையிலான குழுவினர் ஜெனீவா சென்றுள்ளனர் என மனித உரிமைகள் அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகளின். மனித உரிமைப் பேரவையின் 13 ஆவது அமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் 26ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

தேர்தல்களில் போட்டியிடுகின்ற காரணத்தால் அமைச்சர் மஹிந்த சமரசிங்க பேரவையின் அமர்வுகளில் கலந்து கொள்ளவில்லை. இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் மொஹான் பீரிஸ் விளக்கமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் சில வேளைகளில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படக் கூடும் எனவும், அவற்றை சட்ட மா அதிபர் தலைமையிலான குழுவினர் எதிர்நோக்க உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்தனர் 58 பேர் கொண்ட மற்றொரு தொகுதி இலங்கையர்

கொழும்பு, மார்ச் 04

மற்றுமொரு தொகுதி இலங்கைச் சட்ட விரோதக் குடியேற்றக்காரர்கள் படகு மூலம் ஆஸ்திரேலியாவில் சரண் புகுந்துள்ளனர் என ஆஸ்திரேலியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 58 பயணிகளை படகுடன் ஆஸ்திரேலிய அதிகாரிகள் மீட்டுள்ளனர். குறித்த படகுப் பயணிகள் தற்போது கிறிஸ்மஸ் தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாம்களில் போதிய இடவசதி இல்லாத காரணத்தால் சட்டவிரோத குடியேற்றக் காரர்களை தங்க வைப்பதற்கு புதிய முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என அந்நாட்டு குடிவரவு அமைச்சர் கிறிஸ் ஏவன்ஸ் அண்மையில் அறிவித்திருந்தார்.

இதேவேளை, ஆஸ்திரேலிய அதிகாரிகளின் நடவடிக்கைகள் குறித்து இலங்கைத் தமிழர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர் என இலங்கைத் தமிழர்களுக்கான நீதி மற்றும் சுதந்திரம் அமைப்பின் செயலாளர் சிவா தயாபரன் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து அடைக்கலம் கோருவோர் நான்கு அல்லது ஐந்து வாரங்களில் விடுவிக்கப்படுகின்றனர் எனவும், இலங்கையர்கள் மாதக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த ஆண்டில் புகலிடம் கோரிய ஆப்கானிஸ்தானியர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோருக்கு அடைக்கலம் வழங்கப்பட்டுள்ளது எனவும், சொற்ப எண்ணிக்கையிலான இலங்கையர்களுக்கே அடைக்கலம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-சி)

# சனத்தொகை மதிப்பீட்டை வடக்குக் கிழக்கில் நடத்துக!

## தன்னார்வத் தொண்டு நிறுவனம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 04

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூடிய விரைவில் சனத்தொகை மதிப்பீடு செய்யப்பட வேண்டும் - என்று ஆஸ்திரேலியாவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் சமாதானம், ஐக்கியம் மற்றும் மனித உரிமைகளுக்கான இலங்கை அமைப்பு என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாடு தழுவிய ரீதியில் சனத்தொகை மதிப்பீடு நடத்தப்படுவதன் மூலம் தேர்தல்களின் போது ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரிவினைவாத தமிழ் அரசியல் கட்சிகளால் நாட்டுக்கு ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களைத் தவிர்ப்பதற்கு நாடு தழுவிய ரீதியலான சனத்தொகை மதிப்பீடு மிகவும் இன்றியமையாததெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1981ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கில் நடத்தப்பட்ட சனத்தொகை மதிப்பீட்டுப் புள்ளிவிவரங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட சனத்தொகைப் பரம்பல் ஒன்றே குறித்த மாகாணங்களில் தற்போது காணப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் அரச சாசனத்திற்கு அமைவாக சனத்தொகையின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தற்போது குறைந்தளவு வாக்காளர்களே இருகிறனர் எனவும், இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை ஒதுக்கத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் அந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற பிரிவினைவாத கட்சிகள் இதன் மூலம் தங்களது பிரிவினைவாதக் கொள்கைகளை முன்னெடுக்க வழிகோலியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர்கள் தொடர்ந்து போராட வேண்டும் அமெரிக்க மனித உரிமை ஆர்வலர் பேச்சு

கொழும்பு, மார்ச் 04

நீதிக்கும், சுதந்திரத்திற்காகவும் போராடும் தமிழ் மக்கள் அனைவரும் தமது கனவை நிறைவேற்ற இணைந்து - நிமிர்ந்து நின்று - துணிந்து போராட வேண்டும். எந்தக் காரணத்திற்காகவும் விடுதலைக்கான பயணத்தை நிறுத்தக் கூடாது.

- இவ்வாறு அமெரிக்கக் கறுப்பின மக்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவரும், அந்த மக்களின் விடுதலைக்காக ஜோர்ஜ் புஸ்ஸிற்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவரும், பிரபல மனித உரிமை ஆர்வலருமான வணக்கத்திற்குரிய அடிகளார் ஜெசி ஜக்சன் தெரிவித்தார்.

பிரித்தானியாவில் கடந்த 24ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட உலகத் தமிழர் பேரவை அமைப்பின் மாநாட்டின் இறுதிநாள் கலந்து கொண்டு தமிழ் மக்களின் விடுதலை பற்றி உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த முக்கியமான கால கட்டத்தில், நீதிக்கும், சுதந்திரத்திற்காகவும் போராடும் தமிழ் மக்கள் அனைவரும் தமது கனவை நிறைவேற்ற இணைந்து நிமிர்ந்து நின்று, துணிந்து போராட வேண்டும் எனவும், எந்தக் காரணத்திற்காகவும் விடுதலைக்கான பயணத்தை நிறுத்தக்கூடாது எனவும் அவர் தனதுரையில் கூறினார்.

தென் அமெரிக்க மக்களும், தென்னாபிரிக்க மக்களும் போராடி தமது சுதந்திரத்தைப் பெற முடியுமாக இருந்தால், ஏன் தமிழ் மக்களால் அது முடியாது எனவும் கேள்வி எழுப்பிய அவர், தொடர்ந்து போராடினால் தமிழ் மக்கள் தமது இலக்கை அடையலாம் எனவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், அமெரிக்காவில் வாழும் ஆபிரிக்கக் கறுப்பின மக்களின் விடுதலைக்காக தாம் மேற்கொண்ட போராட்டங்களை எடுத்து விளக்கிய அவர், விடுதலைப் பாதை கடினமானது எனினும், கடந்த வரலாறுகளைக் கொண்டு தமிழ் மக்கள் தொடர்ந்து போராட வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் மிகவும் நெருங்கிப் பணியாற்றக்கூடிய இவர், ஒபாமாவின் வெற்றிக்கு அரும்பாடுபட்டவர் என்பதுடன், அமெரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியான பராக் ஒபாமா அவர்களின் பதவியேற்பு நிகழ்வின்போது கண்ணீர்மல்க நின்றதை சி.என்.என். மற்றும் பி.பி.சி போன்ற தொலைக்காட்சிகள் மீண்டும் மீண்டும் ஒளிபரப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-சி)

# தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் பார்வைக்காக இரண்டு வெண்புலிகள்!

கொழும்பு, மார்ச் 04

தெஹிவளை மிருகக்காட்சிக்குச் செல்பவர்கள் நேற்றிலிருந்து இரு வெண்புலிகளைப் பார்வையிடலாம்.

மிருகங்களைப் பரிமாறிக்கொள்ளும் நடவடிக்கையின்கீழ் இலங்கைக்கு இரண்டு வெள்ளைப் புலிகளை சீனா வழங்கியுள்ளது. இதற்குப் பதிலாக சீனாவுக்கு ஐந்து வகையான குரங்குகளை இலங்கை அனுப்பிவைத்துள்ளது.

இந்த இரு வெண்புலிகளும் கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது எனவும் நேற்றிலிருந்து இப்புலிகளை பொது மக்கள் பார்வையிடலாமென்றும் மிருகக் காட்சிசாலை உதவி இயக்குநர் ரேணுகா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

இரண்டு வயதுக்கும் குறைந்த இப்புலிகள் மிகவும் சாதுவானவை என்றும் எவரும் பயமின்றி மிக அருகில் செல்ல முடியும் என்றும் அவர் கூறினார். தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் வெண்புலிகளைப் பார்வையிடுவது இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



பெண்கள் மூலம் சில காரியங்கள் முடியலாம். புதிய தொழில் தொடங்க மேற்கொண்ட முயற்சிகளில் பலன் உண்டு. உங்களின் வேலை ஒன்றை மற்றவர்களை நம்பி ஒப்படைப்பீர்கள். தந்தை வழியில் உருவான செலவுகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். விருந்து, விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வெளியூர் செல்லலாம்.

### இடபம்




உறவினர்கள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. நண்பர் ஒருவர் மூலம் முக்கிய தகவல் ஒன்றை கேட்கலாம். சோர்வு, சோம்பல் இருந்தாலும் அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அவதிப்படலாம். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும்.

### மிதுனம்



சிலருக்கு உதவி செய்ய முற்பட்டு அதனால் உபத்திரவங்களைச் சந்திக்கலாம். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகலாம். முன்யோசனையுடன் செயல்படாததால், சில காரியங்களில் வீண் அலைச்சல் ஏற்படும். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். கடன் வசூலாகும்.

### கடகம்



தடைகள் விலகி தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள். தூரத்து உறவினர் ஒருவரை பார்க்கலாம். செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகமாகச் செயற்பட வைக்கும். சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். நண்பர்களுடன் சேர்ந்து சில காரியங்களைச் செய்வீர்கள்.

### சிங்கம்



உழைப்புக்கேற்ற மரியாதை கிடைக்கும் நாள். வியாபாரிகள் தொழிலில் ஏற்படும் சுறுசுறுப்பால் உற்சாகமாகக் காணப்படுவர். வீடு, கட்டடம் போன்றவற்றை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறுவது தள்ளிப் போகலாம்.

### கன்னி



எதிர்கால முன்னேற்றத்திற்கான திட்டங்கள் போடும் நாள். தொழில் கூட்டாளிகள் அனுசரணையாக நடந்து கொள்வர். எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம். கல்மனம் படைத்த சிலரிடமும் கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

### துலாம்



பூர்வீக சொத்து விவகாரங்களுக்காக, பிள்ளைகள் கல்விக்காகச் செலவுகள் செய்யலாம். சக ஊழியர்கள் உங்களின் கருத்துக்கு மாற்றுக் கருத்துக் கூறி எரிச்சல் உண்டாக்கலாம். வழக்கத்திற்கு மாறான பணிச்சுமையால் அவதிப்படலாம். தொழில் புரிவோர் தேவையான பணத்தை புரட்டிக் கொள்ளலாம். கனவுத் தொல்லையுண்டு.

### விருச்சிகம்



அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். தம்பதியர் இடையே அன்பு அதிகரிக்கும். மறைமுக போட்டிகள், எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். பெண்கள் சிறப்பாக செயற்பட்டு குடும்பத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர். நண்பர்களுக்காக சில செலவுகளைச் செய்வீர்கள். பாராட்டுப் பெறலாம்.

### தனுசு



மங்கையர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். நீண்ட நாள்களாக பார்க்காத பால்ய நண்பர் ஒருவரை பார்க்கலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகள் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும். சிறு தடை, தாமதங்களைச் சந்திக்கலாம்.

### மகரம்



எதிரிகளின் தொல்லைகளில் இருந்து விடுபடுவீர்கள். வெளியூர் பயணங்கள் மூலம் நினைத்த காரியம் ஒன்று முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கலாம். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் தரும் செய்தியை கேட்கலாம். ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்ட சக ஊழியர்கள் அன்பாக நடந்து கொள்வர்.

### கும்பம்



தொழிலில் கவனம், எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய நாள். அதிகரிக்கும் செலவுகளால் பணப்பற்றாக் குறையைச் சந்திக்கலாம். கணவன் மனைவியர் வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். உறவினர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலையலாம். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றங்களைச் சந்திக்கலாம்.

### மீனம்



கையில் யாருடைய பணமாவது புழங்கலாம். உறவினர்கள் வருகையால் வீட்டில் சந்தோஷம், மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்களுக்காகவோ, பிள்ளைகளுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்கு செல்லலாம். நட்பு வட்டம் விரிவடையும்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 23 ☆ 06 ☆ 1934

விண்ணில் 02 ☆ 02 ☆ 2010



### திருமதி நடராசா தர்மேஸ்வரி

கடந்த 02.02.2010 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் சாத்தியோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் பற்பல உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம் இன்று (04.03.2010) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

30/5, முத்துவிநாயகர் லேன்,
2ஆம் ஒழுங்கை,
கச்சேரி-நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
தொ.பே.இல: [illegible]
0215006286

(95366)


## கற்கை நெறிக்கான விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்.மார்ச் 4

வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவன கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான திகதி எதிர்வரும் 12 ஆம் திகதிவரை நீடிக்கப் பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதியுடன் விண்ணப்பங்கள் ஏற்பது நிறுத்தப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது என்று மாகாண சபைகள் பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார். (1)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்.மார்ச் 4

பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அதிபர் செ.புண்ணியமூர்த்தி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சங்கானைக் கல்விக்கோட்ட அதிபர் சங்கத்தலைவரும் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலையின் அதிபருமான [illegible] விருந்தினராகக் கலந்து கொள்வார். (6)

## மனை முகாமைத்துவப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்.மார்ச் 4

பாடசாலைக் கல்வியை முடித்து வேலையற்றிருக்கும் மாணவர்களுக்கான மனைமுகாமைத்துவப் பயிற்சிநெறி யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் யாழ். கல்விவலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

அப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்கள் பெயர்களை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன் அலுவலக நேரத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுக்கொள்கின்றார்.


## கொழும்பு தேசிய வைத்தியசாலை பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர் யாழ்.வருகிறார்

இலங்கை பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையாளர் சங்கத்தின் சார்பாக இலங்கை சத்திர சிகிச்சையாளர் கல்லூரியின் ஆதரவுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலை பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி தம்மிக்க திஸாநாயக்க இன்று (04.03.2010) வியாழக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகைதரவுள்ளார்.

அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கியுள்ள காலப்பகுதியில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை தொடர்பாக வைத்தியர்ளுக்கு விரிவுரைகளை ஆற்றவுள்ளார்.

அத்துடன் 05.03.2010, 06.03.2010 ஆகிய தினங்களில் மு.ப 10 மணிக்கு பொதுமக்களுக்கான பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை தொடர்பான சிகிச்சை நிலையத்தையும் நடத்தவுள்ளார். இது தொடர்பாக பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணரிடம் ஆலோசனைகள் பெறவிரும்புவோர் யாழ்.போதனா வைத்தியசாலை என்பு முறிவு, நெரிவு சிகிச்சை நிலையத்தில் பதிவுகளை மேற்கொண்டு பயன் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி/565350)

இதோ!

சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/ NO 228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு: சந்திரச் சந்திக்கு அண்மையில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலியில் உள்ள செபமாலை தாசர் கன்னியர்மடம் நெல்லிரசத்திற்கு நாடளாவிய ரீதியில் தனியிடம்



தொகுப்பு: ஞானஆதவன்

அச்சுவேலி மேற்கில் சங்கானை - அச்சுவேலி வீதியோரத்தில் 'அமலவனம்'. அங்கு செபமாலைத்தாசர் கன்னியர்மடம் அமைந்துள்ளது. வெளியார் யாரும் உள்ளே அனுமதிக்கப்படாத அமைதியான சூழல் அங்கு மேற்கொள்ளப்படும் முக்கியமான பணி. செபித்தல், நவசன்னியாசத்தின் இறுதி இரண்டு வருடத்தை நிறைவு செய்வதற்கான பயிற்சிகள், இயற்கையில் கிடைக்கும் பழங்களைக் கொண்டு நெல்லிரசம், திராட்சைரசம், மாதுளம்பழ ரசம் மற்றும் திராட்சைவைன் என்பனவற்றை தயாரித்தல்.

பழ ரசத்துக்கான பழங்களை உற்பத்தி செய்யும் பழத் தோட்டங்களை பராமரித்தல், உணவுக்கான விவசாய முயற்சியில் ஈடுபடுதல், அமைதியான இயற்கைச் சூழலில் அமைந்துள்ள செபமாலைத்தாசர் கன்னியர்மடத்தில் வெளியார் சந்திப்புக்கு உரிய இடத்தில் கட்டப்பட்டுள்ள மணியை ஒலிக்கச் செய்ததும் வெளியே வந்த கன்னியாஸ்திரி மடத்தலைவிக்கு எம்மை அறிமுகம் செய்ததை அடுத்து பழரச உற்பத்தியிடத்தை மட்டும் பார்ப்பதற்கு அனுமதி அளித்து காண்பித்தார்கள். பத்திரிகைக் கண்ணோட்டத்தில் உமா போட்டோ எடுக்க முயன்ற போதிலும் முயற்சி முழுமையாகக் கைகூடவில்லை.

மடத்தின் தலைவி பழரசத் தயாரிப்புத் தொடர்பாக உரிய இடங்களை காண்பித்து விளக்கமளித்தபோது அவர்களின் விசுவாசமான உழைப்பின் மேன்மையை உணரமுடிந்தது.

மனித வலுவையே முழுமையாகப் பயன்படுத்தி நெல்லிக்காயை உரலில் இட்டுத் துவைத்து அதை உரிய முறையில் காய்ச்சி, பதப்படுத்தி எடுத்த சாற்றை உரிய தினங்களுக்கு பாதுகாத்து நெல்லிரசம் தயாரிப்பதை மடத்தலைவி விளக்கினார். அந்த நேரம் உரலில் நெல்லிக்காய் துவைக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

கணிசமான அளவு இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துவதால் உற்பத்தி அளவை அதிகரிக்கச் செய்யலாமே? எனக் கேட்டபோது,

இதற்கான வாய்ப்பு, வசதிகள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை மிகவும் தூய்மையான முறையில் நெல்லிரசம், மாதுளம்பழரசம், திராட்சைரசம், திராட்சை வைன் என்பனவற்றைத் தயாரித்து நியாய விலைக்கு விற்பனை செய்கின்றோம். எமது தயாரிப்புகளுக்கு நாடளாவிய ரீதியிலும் தனியாரிடமும் நல்ல வரவேற்பும் கிடைக்கின்றது. எதுவிதமான இரசாயனக்கலவையும் இன்றி முழுமையாக இயற்கையான பழங்களைப் பயன்படுத்தியே எமது தயாரிப்புகளை மேற்கொள்கின்றோம். விற்பனை விலையும் பெருமளவில் லாபம் இல்லாமல் உற்பத்திச் செலவுடன் நியாய விலையில் தான் விற்பனை செய்யப்படுகின்றது எனத் தெரிவித்த மடத்தின் தலைவி, மட்டுப்படுத்த அளவில் உற்பத்தி செய்யப்படுவதனால் பாவனையாளர்களின் தேவையை நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விடுகின்றது.

எமது உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு இதுவரையாரும் முன்வரவில்லை. எதிர்காலத்தில் ஏதாவது அமைப்பு எமக்கு உதவ முன்வருமானால் எமது உற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

# யாழ். மாவட்டத்தில் முதலாவது இருவழிப்பாதை அமைப்பு வலி.கிழக்கில்



படங்கள்: உமா

வலி.கிழக்குப் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதி யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நெடுஞ்சாலை ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் வலிகாமம் பெருநிலப்பரப்புடன் வடமராட்சிப் பகுதியை இணைப்பதற்காக நிர்மாணிக்கப்பட்டது. வலி.கிழக்கில் இருந்து வடமராட்சியை சென்றடைவதற்கான நுழைவாயிலாக அமைவது வல்லைப்பாலம்.

வல்லைப்பாலம் முழுமையாக முதிரைக்கல்லால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் பாவனைக்காலம் மேலும் பல ஆண்டுகளுக்கு உரியதாக இருந்த போதிலும் காலத்தின் தேவை கருவி அகலமாக்கப்பட்டு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நிலையில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் மறுசீரமைக்கப்பட்டது.

இருவழிப் பாதைக்கு ஏற்புடையதாக அகலமாக்கப்பட்டுள்ள வல்லைப்பாலத்தில் இருந்து புத்தூர் சந்தி வரையும் உள்ள 5.8 கிலோ மீற்றர் தூரம் இருவழிப்பாதைக்கு ஏற்ற வகையில் அகலமாக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

வீதியின் நடுப்பகுதியிலிருந்து தலா 7 மீற்றர் தூரம் (22அடி) வீதியின் இரண்டு பக்கங்களும் அகலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 44 அடி அகலமான வீதியின் பயன்பாடு இருவழிப்பதைக்கு ஏற்புடையதாக மறுசீரமைக்கப்படுகின்றது. வீதி அகலமாக்கும் பணியின்போது நூற்றுக்கணக்கான பயன்தரும் தென்னை மரங்கள் மற்றும் மதில்கள் உடைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் வீதி அகலமாக்குவதற்கு தங்களது காணியில் எவ்வளவு தேவையாயினும் விட்டுக் கொடுப்பதற்குத் தாராள சிந்தையுடன் ஒத்துழைக்கின்றனர். பல மதிற் சுவர்கள், வீடுகளின் முன்பக்கம், கிணறு, வியாபாரநிலையங்கள் என பல்வேறு வகையான அமைப்புக்களும் உடைக்கப்பட்டு வீதி அகலமாக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டு வருகின்றது. 'எல்லைக்கதியால் ஒரு சில அங்குலம் அரக்குப் பட்டாலும் அடிபிடி சண்டை, நீதிமன்றம் என அலைந்து தனது நிலத்தை விட்டுக் கொடுக்காமல் பாதுகாக்கும்' யாழ்ப்பாண மரபில் பெரிய அளவில் நிலத்தை, வீதி அபிவிருத்திக் காக விட்டுக் கொடுக்கும் வலி.கிழக்கு மக்களின் பெரும் தன்மை பாராட்டுக்குரியதுதான்.

இது தொடர்பாக வீதி அகலமாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் தொழில்நுட்ப அதிகாரி ஒருவர் தனது உள்ளத்தில் இருந்து வெளியிட்ட கருத்து எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டியதாகும்.

கொழும்பில் கடமையாற்றிய எனக்கு யாழ்.-பருத்தித்துறை வீதி அகலமாக்கும் பணிக்கு நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தல் கிடைத்தபோது எனக்கு எதிர்பாராத மனக்குழப்பம் ஏற்பட்டது. வீதி அகலமாக்குவதற்கு எந்தவிதமான நஷ்ட ஈடும் வழங்காத நிலையில் கணிசமான அளவு நிலத்தை விடும்படி கேட்கும் போது பொதுமக்களோடு முரண்பட வேண்டி வருமே. எனது சேவைக்காலத்தின் இறுதிப் பகுதியில் ஏன் இந்தச் சிக்கல் வேலையை பொறுப்பேற்போமா?விடுவோமா? எனக் குழம்பிய நிலையில் எது எப்படி என்றாலும் எனது ஊருக்குச் செல்லும் வீதியை அபிவிருத்தி செய்வோம் என்ற நிறைவுடன் இருக்கலாம் என்ற சுயநலத்தோடு கூடிய நம்பிக்கையுடன் பொறுப்பேற்றேன்.

எனது பணியை ஆரம்பித்த போது தான் தெரிந்தது நான் நினைத்தது தவறானது என்று. இந்த வீதியோரக் காணிக்காரர் எல்லோரும் மனம் கோணாமல் மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில் காணிகளை விட்டுத்தருவதற்காக வேலிகளை வெட்டி, மதில்களை இடித்து பூரணமான ஒத்துழைப்பை வழங்கினர். இவர்கள் வழங்கிய ஒத்துழைப்பு ஏனைய பகுதி மக்களுக்கு முன்னுதாரணமாகும். தாராள சிந்தையுடன் தமது காணிகளை விட்டுத்தந்த மக்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்களது உதவியும், ஒத்துழைப்பும் என்றும் நினைவு கூரத்தக்கது எனக் கூறினார்.




வீதியை அகலமாக்கும் பணியின் போது அகலமாக்கும் வீதியிலுள்ள 18இற்கு மேற்பட்ட மதகுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் வெள்ளம்பாயாமல் மூடப்பட்டிருந்த மதகுகள் முழுமையாகத் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

மதகுகள் ஊடாக நீர் பாய்ந்தோடுவதற்கான வெள்ள வாய்க்கால் அமைப்பை பிரதேசசபை உரியமுறையில் பேண முன்வருமானால் எதிர்காலத்தில் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்படமாட்டாது. இந்த விடயத்தில் வலி.கிழக்குப் பிரதேசசபை தனது பங்களிப்பை வழங்குவது கடந்த காலங்களில் அச்சுவேலி, புத்தூர் பகுதியில் ஏற்பட்டு வந்த வெள்ள அபாயம் அதனுடன் கூடிய பயிர் அழிவுகளை இல்லாமல் செய்ய முடியும். இது தொடர்பாக வலி.கிழக்குப் பிரதேசசபை மேற்கொள்ளும் நடவடிக்கையில்தான் எதிர்காலம் தங்கியுள்ளது.

வீதி மறுசீரமைப்பு பணிமூலம் அகலமாக்கப்படும் யாழ்ப்பாணம்- பருத்தித்துறை வீதி, யாழ்.மாவட்டத்தில் முதலாவது இருவழிப்பாதைப் போக்குவரத்துக்குரிய வீதியாகப் பயன்படுத்தப்படவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் யாழ்.மாவட்டதில் ஐந்து பிரதான வீதிகளை அகலமாக்குவதற்கு கடந்த சில வருடங்களுக்கு முன்னர் திட்டமிடப்பட்ட போதிலும் அந்த முயற்சி கைகூடவில்லை. அதில் ஒரு வீதியான யாழ்.- பருத்தித்துறை வீதி வலி.கிழக்குப் பிரதேசத்தில் அகலமாக்கப்படுவது பொது மக்களின் ஒத்துழைப்பினால் ஆகும். அந்தவகையில் வலி.கிழக்குப் பிரதேசம் பெருமை பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹேமாஸ் நிறுவனத்தின் 'அருணோதயம்' செயற்றிட்டத்தின் வெற்றிக்குக் காரணமான வர்த்தகர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் நிறுவனத்தின் விற்பனை முகாமையாளர் மௌல்யுத், பிராந்திய விற்பனை முகாமையாளர் சி.சிவசோதி, யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் ஜனக்குமார், பிராந்திய விநியோகஸ்தர் ஜெயராஜ் ஆகியோர் வர்த்தகர்களுக்கு வெகுமதிகளை வழங்குவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:சோபனா)

## கலை இலக்கியப் போட்டிக்கு விண்ணப்பம்கோரல்

நவாலி,மார்ச் 4

தேசிய கலை இலக்கியப் போட்டி தொடர்பாக சண்டிலிப்பாய் பிரதேச மட்டத்திற்கான போட்டிக்குரிய விண்ணப்ப முடிவு திகதி இந்த மாதம் 15ஆம் திகதியென அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கு தமது ஆக்கங்களை பிரதேச செயலக கலாசார அலுவல்கள் பிரிவில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (50-100)

## வாகனம் தேவை

முகவர் நிறுவனம் ஒன்றின் யாழ்.மாவட்ட விநியோகத் தேவைக்கு அலுமினியம் பொடி அடிக்கப்பட்ட சிறிய வாகனம் அல்லது ஹைஏஸ் வான் சாரதியுடன் தேவை.

எரிபொருள் (டீசல்)உட்பட எரிபொருளின்றி நாள், மாத வாடகையைக் குறிப்பிட்டு 15.03.2010 இற்கு முன்பதாக முழுவிவரத்துடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. - 3993
மே/பா, உதயன்.
(95359)

## இசைக்கருவிகள் வழங்கும் நிகழ்வு

நவாலி,மார்ச்4

வடமாகாண கல்வி அமைச்சினால் மன்றங்களுக்கான இசைக்கருவி வழங்கும் நிகழ்வு வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் இளவாலை திருமறைக் கலாமன்றத்திற்கு ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (204-100)

## மெய்வன்மைப் போட்டி

கரம்பொன் சிறிய புஸ்பமகளிர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு இப் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி வஸ்தியாம்பிள்ளை சகாயநாயகி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவகவலய கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரனிஸ்லஸ் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் நடனக் காட்சிகளும் இடம்பெறவுள்ளன. இப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (325)

## பெப்ரவரி மாதத்தில் பண வீக்கம் 6.9 வீதமாக அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 4

இலங்கையில் பண வீக்கம் தொடர்ந்து அதகரித்து வருவதாக மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்திற்கான பணவீக்கம் சென்றமாதத்தை விட 0.2 சதவீதம் அதிகரித்து 6.9 சதவீதமாகக் காணப்பட்டது.

உணவு வகைகள், மென்மையான குடிவகைகள் போன்றவற்றின் விலைகளில் மாற்றமின்றியும் தளபாடம், வீட்டுப் பாவனைப் பொருள்களின் விலைகள் அதிகரித்தும் ஆடை, பாதணிகள், போக்குவரத்து, வீடமைப்பு, நீர், மின்வாயு, வாயு எரிபொருள்களின் விலைகள் குறைந்தும் இந்த மாதத்தில் காணப்பட்டதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (50-ரி)

## மாதாந்த ஒன்றுகூடல்

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் சமூகசேவை அலுவலர் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான மாதாந்த ஒன்றுகூடல் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளதாக சமூக சேவைத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலர் அ.ஞானவேல் அறிவித்துள்ளார். (50-288)

## ஸ்ரீ மஹோத்ஸவ பத்ததி

ஊரெழு அமரர் சிவஸ்ரீ
பால.வைத்தியநாத சிவாச்சாரியார்
அவர்களின் ஞாபகார்த்தமாக
வெளியிடப்பட்ட ஸ்ரீ மஹோத்ஸவ பத்ததி
கிடைக்கும் இடங்கள்:

சிவாச்சாரியார் பீடம்
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

சோதிடவிலாச
புத்தகசாலை
46, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

ப.சிவானந்தசர்மா
(கோப்பாய் சிவம்).
ஸ்ரீ வித்தியா கணனி அச்சகம்
கந்தசாமி கோயிலடி,
இணுவில்.

நல்லூரான்
நகைப்பூங்கா
இல.3, 32ஆவது லேன்,
வெள்ளவத்தை.
(பொலிஸ் ஸ்ரேஷன் முன்பாக)

ப.சோமகலாதரக் குருக்கள்
(முத்துமாரியம்மன் தேவஸ்தானம்),
கொட்டாஞ்சேனை.
(95387)

## கண்ணீர்க் காணிக்கைகள்



முதலி உதயகுமார்
(லண்டன்)

எமது இதயத்தில் உதிர்த்தவரே என்றும் எம்
இதயத்தில் உறைந்தவரே!
என்றும் எங்கும் ஒளி வீசியவரே
எப்போ காண்போம் இனி உன் புன்சிரிப்பை
எமைவிட்டுச் சட்டென மறைந்ததேனோ?
எப்போ காண்போம் இனி உமை நாம்

இராசையா குடும்பம், ஜெயம் குடும்பம், குருந்து குடும்பம், துரைராசா குடும்பம், சண்முகம் குடும்பம், மதுரை குடும்பம், மாணிக்கம் குடும்பம், அழகர் குடும்பம்.

நாவற்காடு, வரணி. (95384)

## மரண அறிவித்தல்

### திருமதி பவனேஸ்வரி மார்க்கண்டு



சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பவனேஸ்வரி மார்க்கண்டு நேற்று (03.03.2010) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான கார்த்திகேசு - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், அமரர்களான சின்னத்தம்பி - எள்ளுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், அமரர் மார்க்கண்டுவின் (முன்னாள் மின் அத்தியட்சகர், இ.மி. சபை) பாசமிகு மனைவியும், பாலகுமார், பாலரஞ்சனி, ஜீவகுமார் (இ.மி.சபை), ஜீவஹம்சனி ஆகியோரின் அன்புத் தாயாரும், இரஞ்சிதமலர் காலஞ்சென்ற வெற்றிவேல் மற்றும் கனகேஸ்வரி, சறோஜினிதேவி, பிறேமாதேவி, கௌரிதேவி பாலச்சந்திரன், ராஜதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரியின் பெறாமகளும், சாந்தினிதேவி, பிரிய சங்கர், மங்களேஸ்வரி ஆகியோரின் மாமியும் டக்ஷன், ரூபினி, கபில், ரோஜிதா, டினோதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.03.2010) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


சூராவத்தை,
சுன்னாகம் (95386)

தகவல்: மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

தாவடிக் கிராமத்திற்குப் பெருமை தேடித்தந்த
அமரர் சுவாமிரத்தின சர்மா சுந்தரேசக் குருக்களின்
திடீர் மறைவுக்கு

## அஞ்சலி செய்கின்றோம்

பெயருக்கேற்ற சுந்தர அழகும் கம்பீரத் தோற்றமும்
பக்தி பூர்வமாகக் கிரியைகள் செய்யும் பாவனையும்
எம் மனக்கண்விட்டகலுமோ!
உலக நாடுகளில் பரந்து அமைந்துள்ள எமது இந்துக் கோயில்களில்
கிரியைகள் செய்து புகழ்பெற்ற சுந்தரனே!
தேவலோகக் கிரியைகள் செய்ய இறைவன்
இவ்வளவு விரைவாக அழைத்தானோ?
தாவடி அம்பலவாண வேதவிநாயகரின் மகாகும்பாபிஷேகம் செய்து வைக்க
வருவாயெனப் பார்த்திருந்தோம்! ஏமாந்தோம்!!
மகோற்சவத்திற்காவது வருவேன் என்ற உனது மொழிகேட்டு



ஆறுதல் அடைந்தோம்.
அதுவும் கனவாகிவிட்டதே!
ஏகாதசித் திதியிலே ஏகாதசி
விரதமிருந்து
மூலஸ்தானத்திலேயே மரண
உபாதைகள் எதுவுமின்றி
இறைவனுடன் நேரடியாகக்
கலந்துவிட்டாயே!
நீ பாக்கியம் செய்துவிட்டாய்!
நாமோ கலங்கி நிற்கின்றோம்.

அன்பு மனைவிக்கும்
பிள்ளைகளுக்கும்
தாய் சகோதரர்களுக்கும்
எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவிக்கின்றோம்.
மனம் சாந்தியடைய
தாவடி விநாயகரைப்
பிரார்த்திக்கின்றோம்.

அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர்
ஆலய பரிபாலனசபை, தாவடி.
(95383)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.04.1989

* இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்த தாம் தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகள் இயக்கம் அறிவித்துள்ளதாக அரசு தெரிவிப்பு.
* தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து முறையான பதில் கிடைத்தவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ளுமென வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.
* தமிழ் பேசும் மக்களின் தாயகக் கோட்பாட்டுக்கு இலங்கை இந்திய ஒப்பந்தம் எந்த வகையிலும் பயன்படமாட்டாதென ஈழவர் ஜனநாயக முன்னணி தெரிவிப்பு.

17.04.1989

* நேரடிப் பேச்சுக்களை நடத்துவதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்வது பற்றிக் கலந்தாலோசிக்க உங்கள் பிரதிநிதி ஒருவரை நியமனம் செய்யுங்கள் என விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு தாம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் ஜனாதிபதி பிரேமதாச தெரிவிப்பு.
* இலங்கையில் வன்முறையை முடிவுக்கு கொண்டுவரும் எல்லாவிதமான பேச்சுக்களையும் தாம் வரவேற்பதாக இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவிப்பு.

18.04.1989

* தமிழீழ விடுதலைப்புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ள ஜனாதிபதி பிரேமதாசா, பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு வசதியாக ஏழுநாள்யுத்த நிறுத்தமொன்றை அறிவிக்கவும் தயாராகவுள்ளதாக பி.பி.ஸி.வானொலி தெரிவிப்பு.
* இஸ்ரேல் அரசுடனான இராஜதந்திரத் தொடர்புகளை அரசு இடைநிறுத்தம் செய்ய வேண்டும் எனக்கோரும் பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப் போவதாக எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ முன்னறிவிப்பு.

19.04.1989

* அரசு ஒருதலைப்பட்சமாக அறிவித்த ஒருவாரகால யுத்தநிறுத்தம் முடிவடைந்த போதிலும், ஜே.வி.பிக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை அரசு உடனடியாக முடுக்கிவிடாது என அரசுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிப்பு.
* வடக்கு,கிழக்கு மாகாணத்தில் மக்களின் உயிர், உடமைகளை பாதுகாப்பதற்கு ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படும் வரை இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறக்கூடாது என ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைமைச் செயலாளர் பத்மநாபா தெரிவிப்பு.

20.04.1989

* அரசுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்துவதற்கு முன்னோடியாக பூர்வாங்க கலந்துரையாடல் ஒன்றுக்கு பிரதிநிதியொருவரை நியமிக்குமாறு ஜனாதிபதி பிரேமதாச ஜே.வி.பியினருக்கு அழைப்பு.
* வடக்கு, கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மாவட்ட வளர்ச்சிப் பணிகுறித்து கலந்துரையாடலொன்றுக்கு ஜனாதிபதி பிரேமதாச அழைப்பு.
* இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவர் லவன் மெஹ்ரோத்தா எதிர் வரும் 24 ஆம் திகதியன்று கொழும்பில் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் நியமனப் பத்திரத்தை கையளிப்பார்.

21.04.1989

* இனப்பிரச்சினைகளுக்கான காரணங்களைத் தெரிந்து கொண்டு பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க சகல முயற்சிகளும் மேற்கொள்வேன் என ஜனாதிபதி பிரேமதாச நயினாதீவில் வைத்து தெரிவிப்பு.
* இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் அடுத்தவாரம் ஆரம்பமாகும் என வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

22.04.1989

* யாழ்.மாவட்டத்தில் கால்நடைத் தொற்று நோயொன்று பரவ ஆரம்பித்துள்ளதால் சகல இறைச்சிக் கடைகளையும் மறு அறிவித்தல்வரை மூடுமாறு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உத்தரவு.
* காலி மாவட்டத்தில் பிட்டிகல பொலிஸ் நிலையம் மீது தென்பகுதித் தீவிரவாதிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.
* இலங்கை நாடற்றவர் பிரச்சினை தீர்ந்து விட்டதாக அமைச்சர் தொண்டமான் இந்தியாவில் வைத்து தெரிவிப்பு.

23.04.1989

* தமிழ்இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டதைக் தொடர்ந்து கல்முனையில் ஏற்பட்ட பதற்றத்தைத் தணிக்க அமைச்சர்களான ரஞ்சன்விஜேரத்னவும், ஏ.ஆர்.மன்சூரும் கல்முனைக்கு விரைவு. காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பு.
* எரிகல் ஒன்றின் தாக்கத்திலிருந்து பூமி மயிரிழையில் தப்பித்துக் கொண்டதாக அமெரிக்க நாஸா ஸ்தாபனம் தெரிவிப்பு.

24.04.1989

* நாட்டில் அமைதியை ஏற்படுத்த எத்தகைய அபாயத்தைச் சந்திக்கவும், எத்தகைய தியாகத்தைச் செய்வதற்கும் தாம் தயார் எனவும் தேவைப்பட்டால் ஜே.வி.பியினரை அவர்களது மறைவிடங்களுக்குச் சென்று சந்திக்கவும் தாம்தயார் என ஜனாதிபதி பிரேமதாசா அறிவிப்பு.
* பட்டினியை எதிர்நோக்கும் பதினைந்து வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் இலங்கையும் ஒன்று என உலக உணவு விவசாய ஸ்தாபனம் தெரிவிப்பு.

25.04.1989

* மீண்டும் ஒரு தடவை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு இலங்கை ஜனாதிபதி பிரேமதாச அழைப்பு விடுப்பு.
* முன் நிபந்தனை எதுவும் விதிக்காமலேயே அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விடுதலைப்புலிகள் முன் வந்திருப்பதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

26.04.1989

* இலங்கையிலிருந்து இந்திய இராணுவத் துருப்புக்களைத் திரும்பத் திரும்ப அழைப்பது இப்போது அவசியமாகி விட்டது. அது குறித்து சிந்திக்கும் காலம் வந்துவிட்டது என இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவிப்பு.
* திருமலை பிரெட்றிக் கோட்டையில் இயங்கிவந்த கச்சேரியை நகருக்குள் இடம் மாற்றுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிப்பு.

27.04.1989

* இலங்கை அரசுடன் பேச்சவார்த்தை நடத்துவதற்க்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதி அன்ரன் பாலசிங்கம் கொழும்பு வருகை.
* கலவரங்களினாலும், வன்செயல்களினாலும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கும் புதிய திட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளதாக அரசு தெரிவிப்பு.

28.04.1989

* அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான மாகாணசபை (விசேட) சட்டமூலம் அரசமைப்புக்கு அமைவாக உள்ளதாக உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளதென சபாநாயகர் எம்.எச்.முஹம்மது நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.
* தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்திவரும் அரச தூதுக்குழுவிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஜனாதிபதி மேலும் அதிகரித்தார்.

29.04.1989

* பூர்வாங்கப் பேச்சுக்களின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் குறித்து அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சுக்கள் நடத்துவதென அரசு முடிவு.
* இலங்கைக்கான புதிய இந்தியத்தூதுவர் வடபகுதிக்கு விஜயம் செய்து வட பகுதியிலுள்ள அமைதிப்படை உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

30.04.1989

* வடக்கு-கிழக்கு மாகாணங்களைச்சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி பிரேமதாச அழைத்து மாநாடொன்றை நடத்தினார்.
* சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்காக இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையேயான புதிய பேச்சு வார்த்தைகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படலாமெனவும் தெரிவிப்பு.

# மானிப்பாயில் பொது நிறுவனங்களுக்கு விரைவில் மலசல கூடங்கள், கிணறுகள்

## சமுர்த்தி வங்கி அமைத்துக் கொடுக்கிறது

சண்டிலிப்பாய், மார்ச் 4

கிராம எழுச்சி வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் மானிப்பாய் சமுர்த்தி வங்கிச் சங்கம் ஆலயங்கள்,அறநெறிப்பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் போன்றவற்றிற்கு மலசல கூடங்களையும் கிணறுகளையும் அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த வேலைத்திட்டம் மக்களின் 25 வீத பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ள சுதுமலை தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்திருக்கும் சுதுமலை மத்தி சனசமூக நிலையம், யுவசக்தி சனசமூக நிலையம் ஆகியவற்றில் மலசலகூடங்கள் அமைக்கும் வேலைகளும், மாதா ஆலயம், வேலுச்சாமி வைரவர் ஆலயம் ஆகியவற்றில் கிணறுகள் புனரமைக்கும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டு துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இதே போல் சாவல்கட்டு, உயரப்புலம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப்பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றில் மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்களின் 25 வீத பங்களிப்புடன் இந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. (50-115)

# யாழ்.நகரப்பகுதி வியாபார நிலையங்களில் பாவனைக்குதவாத பொருள்கள் பறிமுதல்

## சுகாதாரப்பகுதியினர் திடீர் நடவடிக்கை





யாழ்ப்பாணம்,மார்ச் 04

யாழ். நகரப் பகுதியில் உள்ள பழக்கடைகள், மென்பான விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் நேற்று யாழ்.நகர பொது சுகாதார பரிசோதகர்கள் நடத்திய திடீர் பரிசோதனையின்போது பாவனைக் குதவாத மென்பானங்கள், அப்பிள், அன்னாசி, சோளம், பனங்கிழங்கு, ஒறேஞ் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பாவனைக்கு உதவாத காலம் கடந்த இந்தப் பொருள்கள் வியாபாரிகளால் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருந்த போதே சுகாதாரப் பரிசோதகர்கள் சம்பந்தப்பட்ட விற்பனை நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை மேற் கொண்டனர். இதன்போது கைப்பற்றப்பட்ட பொருள்கள் அழிக்கப்பட்டதோடு வியாபாரிகளும் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

(50-ரி-111)

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள்

## கியூடெக் நிறுவனம் வழங்கியுள்ளது

யாழ்ப்பாணம், மார்ச் 04

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் 5 லட்சத்து 35ஆயிரம் ரூபா செலவில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 27 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் வழங்கப்பட்டுள்ளன.

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் வாழ்வாதார செயற்றிட்டத்தின் ஊடாக நல்லூர்ப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் மத்தி, திருநெல்வேலி, அரியாலை ஆகிய விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த 27 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, அதில் 15 பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும், 12 பயனாளிகளுக்கு மின்சக்தி நீர் இறைக்கும் இயந்திரங்களும் கையளிக்கும் நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி திருநெல்வேலி விவசாய திணைக்கள பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் அருட்பணி கி.ஜோ. ஜெயக்குமார் அடிகள், பிரதேச செயலர் பா.செந்தில்நந்தன் மற்றும் பெரும்பாக உத்தயோகத்தர் திருமதி ஆ.பாமா ஆகியோரும் கலந்துகொண்டனர். (50)

# சாவகச்சேரி வணிகர் மன்றத்தால் ஊனமுற்றோருக்கு நிதியுதவி

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் ஊடாக ஊனமுற்றோர் நிதி அடுத்த வருடம் தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

இந்த நிதியத்தினை வழங்கவென சாவகச்சேரி சன்றைஸ் நிறுவன உரிமையாளர் தம்பிராசா குகனேசன் என்பவர் 50 ஆயிரம் ரூபாவை சங்கத்திடம் கையளித்துள்ளார்.

சாவகச்சேரி நகர், கோயில் குடியிருப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள ஊனமுற்றோர் பிள்ளைகளுக்கு வருடாந்தம் இந்த நிதி வழங்கப்படுமென சங்கத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார்.

ஏற்கனவே சங்கத்தினால் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மற்றும் விதவை உதவு தொகை ஆகியவை வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (50-207)

# மரவள்ளித் தடிகளுக்கும் இப்போது அதிக கிராக்கி

யாழ்ப்பாணம், மார்ச் 04

யாழ்ப்பாணம் வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் மரவள்ளித் தடிகளையும் விட்டு வைக்கவில்லை. இதனால் அவற்றுக்கும் தற்போது கிராக்கி ஏற்பட்டுள்ளது.

அண்மையில் கோப்பாய் இராசவீதியில் உள்ள தோட்டம் ஒன்றில் விவசாயிகள் தாம் நடுகை செய்த மரவள்ளிக் கிழங்கை அறுவடை செய்து கொண்டிருந்தனர்,

அப்போது அந்த வீதியால் வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் இந்த மரவள்ளிக் கிழங்கில் கண் வைத்தனர்.

அந்தத் தோட்டத்திற்குள் சென்ற சுற்றுலாப் பயணிகள் மரவள்ளிக் கிழங்கையும், அதன் தடிகளையும் வாங்கி அவற்றைத் தமது வாகனங்களில் எடுத்துச் சென்றனர்.

(50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தை எம்மை நோக்கி....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமக்குக் கிட்டவும் நெருங் கியும் வராது. இதனை ஏற்றுக்கொள்ளவும் மாட்டாது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

வன்னியில் மூன்று இலட்சம் இடம் பெயர்ந்த மக்கள், யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சம் இடம்பெயர்ந்த மக்கள் இவர்களது வாழ்விடங்கள் வாழ்வாதாரங்கள் எல்லாமே அழிக்கப்பட்டு விட்டது. 30வருட யுத்தத்தில் இழக்கக்கூடாத சகலவற்றையும் தமிழ் மக்கள் இழந்துவிட்டார்கள். யாழ்ப்பாணம், வன்னி மற்றும் கிழக்கு ஆகிய பகுதிகள் இராணுவ ஆக்கிரமிப்பால் நிரம்பிவழிகின்றன. இராணுவக் குடியேற்றமும் அதனைத் தொடர்ந்து சிங்களக் குடியேற்றத்திற்கான ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. ஈழத்தின் தலைநகரம் திருகோணமலை எமது கையை விட்டுப் போகும் சூழல். இந்த நிலையில் மிக விரைவில் வடகிழக்கின் அதிகாரத்தை எமது கையில் எடுக்கப் போகின்றோமா? அல்லது தத்துவம் பேசி விட்டு உட்காரப் போகின்றோமா?

எனவே தமிழ் தேசியக் கூட்டமைப் பாகிய நாம் தேசம், தேசியம், இறையாண்மை, சுயநிர்ணய உரிமை எதனையும் விட வில்லை. ஆனால் தந்திரோபாயமாக இன்றிருக்கும் எமக்கு சாதகமாக சர்வதேச சூழலைப்பயன்படுத்தி தீர்வைக்காண முயற்சிக்கின்றோம். ஆனால் இலங்கையின் இறையாண்மையை ஏற்றுக் கொள்ளாதவர்கள் எந்தத் தீர்வுத்திட்டமும் இல்லாமல் கூட்டமைப்பை விமர்சிப்பதும் குற்றம் சுமத்துவதும் அர்த்தம் அற்றதும் ஏற்றுக் கொள்ள முடியாததும் ஆகும்.

## இந்தியா அறிவுறுத்தியது கிடையாது

தேசம், தேசியம், இறையாண்மை எல்லாவற்றையும் விடுத்து இந்தியா கூறியது போன்று நாம் தீர்வுத் திட்டம் தயாரித்ததாகவும் இவர்கள் கூறுகின்றார்கள். இது சுத்த அபத்தமானதும் பைத்தியக்காரத்தனமானதுமாகும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தீர்வு இவ்வாறு தான் இருக்க வேண்டும் என இந்தியா அறிவுறுத்தியது கிடையாது. அது தொடர்பாக நாம் கலந்துரையாடியதும் கிடையாது. மாறாக புலிகள் அழிக்கப்பட்ட சூழ்நிலையிலும் இலங்கை அரசாங்கம் ஒரு தீர்வை முன்வைக்காத சூழ் நிலையிலும் நாம் ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதன் மூலமே சர்வதேசத்தை எம்மைநோக்கி அணி திரளச் செய்ய முடியும் என யோசித்தோம். அந்த அடிப்படையில் மிகநீண்ட கலந்துரை யாடல்களின் பின்பே ஒரு வரைபு உருவாக்கப் பட்டது. (அதன் விபரம் மேலே தரப்பட்டது)

கடந்த ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என அறிக்கை விடுத்த கஜேந்திரகுமார் அடுத்த கணமே லண்டன் சென்றுவிட்டார். நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப் பட்டசிலநாள்களின் பின்னர் வந்தார். கூட்டமைப்பின் கட்சிகளில் ஒன்றென்ற வகையில் வேட்புமனுக்களைப் பரிசீலிக்கும் குழுவில் அவரும் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் அவரும் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் தனக்கு அடிப்படையில் முரண்பாடுகள் உள்ளதாக கூறியதன் அடிப்படையில் அது தொடர்பாக இரண்டு மணி நேரம் கலந்துரையாடப்பட்டது. தனது கட்சிக் குழுவில் பேசி முடிவெடுத்துவிட்டு மாலை எமக்கு அறிவிப்பதாக கூறியவர் இரண்டு நாள்களாக எம்முடன் தொடர்பு கொள்ளவில்லை. எமது தொலைபேசித் தொடர்புகளையும் அவர் பேசாமலேயே நிராகரித்தார். இதன் பின்பு காங்கிரஸின் தலைவர் விநாயகமூர்த்தியின் முயற்சியால் ஒரு சில சட்டத்தரணிகள் சமரசம் பேச முற்பட்டனர். இவருக்காகவே ஏற்கனவே வரையப்பட்ட தீர்வுத்திட்டத்தை விடுத்து தேர்தலின் பின்னர் எல்லோரும் இணைந்து ஒரு புதிய தீர்வுத்திட்டத்தை உருவாக்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது. அது எழுத்திலும் உள்ளது. கஜேந்திரகுமார் ஏகமனதான முறையில் இத்தீர்வுத் திட்டம் அமைய வேண்டும் எனக் கூறினார்.

பெரும்பான்மை முடிவுகளின் அடிப்படையில் தீர்வுகள் எடுக்க முடியுமே தவிர ஏகமனதானதென்று எதற்கும் ஒத்துவராது, எல்லாவற்றையும் மறுதலிக்கும் வீற்றோ அதிகாரத்தை யாருக்கும் கொடுக்க முடியாது என்பதை அவர்களுக்குத் தெரிவித்தோம். இறுதியாக இதனை ஏற்றுக்கொண்டு அடுத்த நாள் வேட்புமனுக்களைப் பரிசீலனை செய்ய சம்மதித்தார். ஆனால் கூட்டத்திற்கு வந்தவர் தனது செயலாளரையும் இன்னும் இருவரையும் எம்முடன் பேசும்படி கூறிவிட்டு அவர் போய்விட்டார். அவர்கள் கேட்ட எல்லாவற்றுக்கும் சம்மதம் அளிக்கப்பட்டது. ஆனுல் போனவர் கள் மீண்டு(ம்) வரவில்லை. சம்பந்தன் கஜேந்திரகுமாருடன் பேச எடுத்த முயற்சியும் சில சட்டத்தரணிகள் (ஏற்கனவே சமரசம் பேசியவர்கள்) அவருடன் பேச எடுத்த முயற்சியும் நிறைவேறவில்லை. அடுத்த நாள் தமிழ் தேசியக் கூட்டமைப்பல் இருந்து வெளியேறுவதாக கஜேந்திரகுமார் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்தார்.

இதில் ஒரு விடயம் மிகத் தெளிவாகத் தெரிகின்றது. அதாவது இலண்டனில் இருந்து வரும் பொழுதே அவர் கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவது என்ற முடிவுடனேயே வந்தார். ஆனால் கூட்டமைப்பை சிதறடிக்கக் கூடாது என்பதற்காக நாம் இறுதி வரை முயற்சி செய்தோம். ஆனால் அவர் அதற்குசெவிசாய்க்கவில்லை. இதனை காங்கிரஸ் தலைவர் விநாயகமூர்த்தியிடமும் அவரது நட்பு சட்டத்தரணிகளிடமும் கேட்டும் தெரிந்துகொள்ளலாம். நிலைமை இவ்வாறு இருக்க எல்லாவற்றையும் திரித்தும் பொய்யாகவும் கூறமுற்படுவது அரசியல் வங்குரோத்துத் தனமே அல்லாமல் வேறல்ல. வெளிநாட்டில் இருக்கக் கூடிய ஒரிரு குழுக்களின் வழிகாட்டுதலில் தான் இது நடைபெறு கின்றது. எமது தமிழினத்தை இன்னும் பாரிய அழிவிற்கு இட்டுச் செல்லும் என்பதை கடும் போக்காளர்கள் எனத் தம்மைக் கருதுவோர் புரிந்துகொள்ள வேண்டும்.

இறுதியாக தமிழ் தேசியம் பற்றிப் பேசுபவர்கள் யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையில் மாத்திரம் தான் போட்டியிடுகின்றார்கள். இவர்களின் தேசம் என்பது இவ் விரு மாவட்டங்கள் மட்டுமாக இருக்கலாம்.

அதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப் பிடம் ஓர் ஆசனம் கேட்டு நிராகரிக்கப்பட்ட கௌரி முகுந்தன் என்பவர் தான் தேசியம் பேசுபவர்களின் திருகோணமலையின் முதன்மை வேட்பாளர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் அலரி மாளிகையில் அங்கத்துவம் பெற்று ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்சவை ஆதரித்தவர் தான் இவரின் முதன்மை வேட்பாளர்.

திருகோணமலையில் சம்பந்தனைத் தோற்றகடிக்க வேண்டும் என்பது இலங்கை அரசின் திட்டம். அதற்காகவே பல சுயேச்சைக் குழுக்களுடன் பள்ளையான் போன்றவர்களும் களமிறக்கப்பட்டனர். அவரைத் தோற்கடிக்கத்தான் திருகோணமலையில் காங்கிரசும் போட்டிபோடுவதாக கஜேந்திரகுமாரும் கூறுகின்ருர். உங்களுக்கும் ராஜபக்சவிற்கும் என்ன வித்தியாசம்? திருகோணமலையில் தமிழருக்குக் கிடைக்க கூடிய ஓர் ஆசனத்தையும் இல்லாமல் செய்வதுதான் உங்களது தேசியமா? என்பதை தயவு செய்து சொல்லுங்கள்?

## ஆன்மீக நிகழ்வு

வடமராட்சி, மார்ச் 4

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலிலுள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்று வரும் வாராந்த ஆன் மீக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 7ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.30மணிக்கு மகாபாரதம் தொடர்சொற்பொழிவு இடம் பெறும். பண்டிதர், சைவப்புலவர் பொன். சுகந்தன் இச் சொற் பொழிவை நிகழ்த்துவார். (50-25)


## அபூர்வ மருத்துவம்

முழங்காலில் அதிக வேதனை தரும் வாதம், முட்டு, Progesterone ஓமோன் குறைபாட்டினால் ஏற்படும் தீராத கெற்பரோகங்களை குணமாக்கும் விசேட மருந்தியல். கிழமைநாள் - 3pm -6pm., சனி, ஞாயிறு 8am - 2pm. உயரப்புலம் பிள்ளையார் கோயிலடி, தபால்பெட்டி லேன், ஆனைக்கோட்டை. (95396)

## வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்

திருநெல்வேலியில் அமைதியான சுற்றாடலில், அடிப் படை வசதிகள் கொண்ட (இரண்டு படுக்கையறைகள்) வீடு நன்கு பராமரிக்கக் கூடிய ஐந்து பேருக்குட்பட்ட குடும்பத்துக்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு: நுன்ரன் ஆனந்தநாதன், கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். தொ.பே: 0770296538

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
## கணனியும் அதனோடு இணைந்த உதிரிகளும் பழுதுபார்த்தல், சேவிஸ் செய்தலுக்குமான கூறுவிலை கோரல் 2010

யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள கணனிகளும் அதனோடிணைந்த உதிரிகளும் திருத்தலுக்குமான கேள்விகள் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றது. கூறுவிலைகள் 19.03.2010 அன்று முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது அரக்கு முத்திரையிடப்பட்ட கடிதம் மூலம் வைத்தியசாலையின் பணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில்இடப்படல் வேண்டும். கூறுவிலையின் இடது பக்க மேல் மூலையில் 'கணனி சேர்விஸ், பழுதுபார்த்தல் செய்வதற்கான கூறுவிலை 2010 என எழுதப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்

1. கணனியும் அதனோடிணைந்த உதிரிகளுக்குமுடைய பழுதுபார்த்தல், சேவிஸ் என்பன வைத்தியசாலையிலேயே வைத்து செய்யப்படல் வேண்டும். திருத்தம் செய்வதற்குரிய இட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.
2. நிறுவன உரிமையாளர்/ முகாமையாளர் கணனி சம்பந் தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டம் பெற்றவராக/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் 5 வருடங்கள் கணனி வன்பொருள் பயிற்சி பெற்றவராக இருத்தல் வேண்டும் (சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்)
3. சேவிஸ், பழுதுபார்த்தல் என்பன 01.04.2010 தொடக்கம் 31.12.2010 வரைக்குமானதாக இருக்கும்.
4. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் அவர்களுடன் மேற்படி ஒரு வருட காலப்பகுதிக்கு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளுமாறு கேட்கப்படுவார்.
5. கூறுவிலைகளை ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை கேள்விச்சபை கொண்டிருக்கும்.
6. சேவிஸ், பழுதுபார்த்தல் செய்யப்பட்ட மாதத்துக்கான கொடுப்பனவு அடுத்துவரும் மாத தொடக்க 2 வாரங்களுக்குள் வழங்கப்படும்.
7. கீழ்வரும் விடயங்களைப் பூர்த்தி செய்து கணனியும் அதனோடிணைந்த உதிரிப்பாகங்களுக்குமான கூறுவிலைகளும், கூறுவிலை சமர்ப்பிப்பவரினால் தயாரிக்கப்பட்ட கூறுவிலைப் படிவத்தில் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   a. ஒரு கணனி சேவிஸ் செய்வதற்கான கூறுவிலை: ......... (கணனி, மொனிட்டர்)
   b. ஒரு பிறின்டர் சேவிஸ் செய்வதற்கான கூறு விலை: .......
   c. ஒரு கணனிக்கு (O/S and other necessary software installation) செய்வதற்கு: .....
   d. Mother board, hard disk, DVD writer, RAM, UPS battery, Processor, printer tonerஎன்பவற்றுக்குமுரிய கூறுவிலைகளும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பணிப்பாளர்
போ.வை.யாழ்ப்பாணம். (சி/565363)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

ஜக்பொட் பரிசு ரூபா. 2,959,700/- வெல்லப்படவில்லை

02-03-2010

1170 நீலம்

விருச்சிகம் 20 32 39 44

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 218,308 | 20/- | 4,366,160/- |
| 2 இலக்கங்கள் | 19,930 | 40/- | 797,200/- |
| 1 இல. + லக்கினம் | 19,624 | 60/- | 1,177,440/- |
| 2 இல. + லக்கினம் | 1,877 | 200/- | 375,400/- |
| 3 இலக்கங்கள் | 539 | 1000/- | 539,000/- |
| 3 இல. + லக்கினம் | 43 | 10,000/- | 430,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,959,700/- | - |
| மொத்தம் | | | 8,285,200/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 260,329 | | 8,785,200/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,933,450/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| காலி | 401042096-4-44 |
| கண்டி | 401033713-2-46 |
| கொழும்பு | 401035876-6-48 |
| மட்டக்களப்பு | 401032343-3-12 |
| இரத்தினபுரி | 401036028-5-38 |

அபிவிருத்தி லொத்தர் சபை

## மஹஜன சம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha
02.03.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2211

வெற்றி எழுத்து S வெற்றி எண்கள் 8 1 3 0 4 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | S 8 1 3 0 4 7 | ரூபா. 20,783,440/= | - |
| 1 பரிசுகள் | 8 1 3 0 4 7 | ரூபா. 2,000,000/= | 02 |
| 2 பரிசுகள் | 1 3 0 4 7 | ரூபா. 100,000/= | 12 |
| 3 பரிசுகள் | 3 0 4 7 | ரூபா. 10,000/= | 146 |
| 4 பரிசுகள் | 0 4 7 | ரூபா. 1,000/= | 1385 |
| 5 பரிசுகள் | 4 7 | ரூபா. 100/= | 13944 |
| 6 பரிசுகள் | 7 | ரூபா. 20/= | 138205 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 8 1 3 0 4 | ரூபா. 10,000/= | 12 |
| 8 பரிசுகள் | 8 1 3 0 | ரூபா. 1,000/= | 145 |
| 9 பரிசுகள் | 8 1 3 | ரூபா. 100/= | 1400 |
| 10 பரிசுகள் | 8 1 | ரூபா. 50/= | 13764 |
| 11 பரிசுகள் | S | ரூபா. 20/= | 55288 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 14,402,460.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 21,182,698.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03, தொலைபேசி 2470662, 4607000, Hotline: 2433631


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி



# வட்டூர் வீயோடை இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

## ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன

# மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**விழா ஆரம்பம்**
**02.03.2010 செவ்வாய்க்கிழமை**

**மஹாகும்பாபிஷேகம்**
**04.03.2010 வியாழக்கிழமை**

தனந்தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

எண்ணெய்க் காப்பு: 03.03.2010 புதன் கிழமை முற்பகல் 10 மணி முதல் மாலை 5மணிவரை.

அம்பாள் அடியார்களே!

சிவபூமி, சுவர்ணபூமி எனப்போற்றப்படுவதும், இந்து மகா சமுத்திரத்தின் வைரமென ஒளிர்வதாகிய, நீர்வளமும், நிலவளமும், நிறைபட்டுயரும் இயற்கை எழில்மிகு ஈழநாட்டில், அன்புக்கும், பண்புக்கும், தனக்கே உரித்தான கலாசார விழுமியங்கள் சேரப்பெற்ற யாழ்ப்பாண மாவட்டத்தில், ஆடல், பாடல் அருங்கலைகள் மாண்புகளோடு, ஆன்மீக வளமும் ஒருங்கே அமையப்பெற்ற திருவிடமான வட்டூர் எனப்படும் வட்டுக்கோட்டையம்பதியில், அடியார்களின் வினைகளை வேரறக்களைந்து அருள் வழங்கும் பொருட்டு கருணையோடு தாயாக விளங்கும் அருள்மிகு வீயோடை இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கும், விநாயகர், சுப்பிரமணியர், தம்பவிநாயகர், நந்தி, பலிபீடம், வைரவர், காத்தவராயர், நாகதம்பிரான், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகட்கும், இராசகோபுரத்திற்கும், மங்களம் நிறைந்த விரோதி வருஷம் மாசி மாதம் 20ஆம் நாள் வியாழக்கிழமை (04.03.2010) சதுர்த்தி திதியும், சித்திரை நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய முற்பகல் 10.30மணி முதல் மதியம் 12 மணிவரை வரும் ரிஷப லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்திப் பெருவிழா செய்ய இறையருள் கூடியவண்ணம் நடைபெறவுள்ளதால் அனைத்து அடியார்களும் கலந்து கொண்டு இறையருள் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## கும்பாபிஷேக கிரியாகால நிகழ்வுகள்

மாசி 18ஆம் நாள் (02.03.2010) செவ்வாய்க்கிழமை

*காலை 8மணி:* விநாயகர் வழிபாடு, அனுக்ஞை, மகாகணபதி ஹோமம், நவக்கிரகஹோமம், மகாலஷ்மிஹோமம், கோபுரபூசை, தனபூசை, யந்திரபூசை, பூர்ணாஹுதி, தீபாராதனை, சாந்தி ஹோமம், திசாஹோமம், மூர்த்தி ஹோமம், அக்னி சங்கிரஹணம், தீர்த்த சங்கிரஹணம், பிரசாதம் வழங்கல்.

*மாலை 5மணி:* வாஸ்துசாந்தி பிரவேசபலி, கிராமசாந்தி, ரக்ஷாக்ண ஹோமம், ம்ருத்சங்ரஹணஹோமம், அங்குரார்ப்பணம், ப்ரசன்ன அபிஷேகம், கும்பாலங் காரம், ஹலாகர்ஷணம், முதற்கால யாகபூசை ஹோமம், திரவிய ஹோமம், பூர்ணா ஹுதி, பிரசாதம் வழங்கல், யந்திரஸ்தாபனம், விம்பப்பிரதிஷ்டை, விஷேச திரவிய ஹோமம்.

மாசி 19 ஆம் நாள் (03.03.2010) புதன்கிழமை

*காலை 8மணி:* விசேஷ சாந்தி, இரண்டாம் கால யாகபூசை, பூர்ணாஹூதி, திரவிய கோமம், தீபாராதனை, பிரசாதம் வழங்கல், சூர்யக்னி, சப்தமுத்ர, யாகசாலை நிர்மாணம்.

*மாலை 5மணி:* யாகசாலைப்பிரவேசம், பிரசாதம் வழங்கல், பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல்- மு.ப. 10 முதல் 5மணி வரை.

*மாலை 5மணி:* விசேஷ சாந்தி, மூன்றாம் கால யாகபூசை, நாடி சந்தானம், தத்துவார்சனை ப்ரசாஹுதி, விசேஷ திரவிய ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை, சேஷாடச உபசாரம், பிரசாதம் வழங்கல்.

மாசி 20ஆம் நாள் (04.03.2010) வியாழக்கிழமை

*காலை 8மணி:* 4ஆம் கால யாபூசை ஹோமம், அவப்ருதயாகம், விசேஷ திரவிய ஹோமம்.

*மு.ப. 10மணி:* மகாபூர்ணாஹுதி மு.ப. 10.15 யாத்திரா தானம், மு.ப.10.40கலசப்புறப்பாடு மு.ப. 11: இராஜ கோபுரம் மற்றும் அனைத்து கோபுரங் கள் மகாகும்பாபிஷேகம். மு.ப. 11.15: மூலஸ்தானம் அம்மன் கும்பாபிஷேகம் மற்றும் அனைத்து பரிவாங்கட்கும் மகாகும்பாபிஷேகம் தீர்த்த பிரசாம் வழங்கல்.

மதியம் 12மணி: மகா அபிஷேகம், மு.ப. 1மணி: மகேஷ்வரபூசை (அன்ன தானம்), மாலை 6மணிக்கு: முத்துமாரியம்பாள் வீதியுலா.

*மாசி 21ஆம் நாள் (05.03.2010) முதல் பங்குனி 2ஆம் நாள் (16.03.2010) வரை மண்டலாபிஷேகம் நடைபெறும். பங்குனி 3ஆம் நாள் (17.03.2010) புதன் கிழமை அஷ்டோத்தர சங்காபிஷேகத்துடன் மண்டலாபிஷேகம் நிறைவடையும்.*

## மஹாகும்பாபிஷேக முதன்மைச் சிவாச்சாரியார்கள்.

1. சிவாகம சொல்வேந்தர் சிவஸ்ரீ ரமேஸ் குருக்கள், திருப்பாச்சூர்.
2. சிவாகம பிரவீணா சிவஸ்ரீ பரணிதரக்குருக்கள், கூடம்பத்தூர்.
3. சிவாகம ரத்தினம் சிவஸ்ரீ நடராசிவக்குருக்கள், வேலூர்.
4. சிவாகம திலகம் சிவஸ்ரீ ரமேஸ் சிவாச்சாரியார், செய்யூர்.
5. சர்வபோதகர், முத்தமிழ் குருமணி, சகலாகம சங்கிருகர் சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள் (கதிரமலை சிவன் தேவஸ்தனம், சுன்னாகம்)
6. சிவாஹம கிரியா திலகம், சிவாகம கிரியா தத்துவநிதி சிவஸ்ரீ ச.மு.பாஸ்கர(ரவி) குருக்கள். (விசுவந்தனை முருக மூர்த்தி தேவஸ்தானம், பண்ணாகம்)
7. பிரம்மஸ்ரீ சோ.இலட்சுமி நாராயணக்குருக்கள் (சிவன்கோவிலடி, சித்தன்கேணி)
8. பிரம்மஸ்ரீ தி.சர்வேஸ்வரக்குருக்கள் (அராலி)
9. பிரம்மஸ்ரீ சே.சுகுமாரக்குருக்கள் (மயிலணி)
10. பிரம்மஸ்ரீ ச.பரமானந்தக்குருக்கள் (யாழ்ப்பாணம்)
11. பிரம்மஸ்ரீ குகனேசக்குருக்கள் (சுன்னாகம்)
12. பிரம்மஸ்ரீ ச.ஸ்ரீகாந்தக்குருக்கள் (சுன்னாகம்)

கும்பாபிஷேகம் சிறக்க ஆசிவழங்குபவர்கள்

1. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனகர்த்தா)
2. கௌரவ இ.த.விக்னராஜா, மேல் நீதிமன்ற நீதிபதி.
3. சித்தாந்த ரத்தினம், கலாநிதி மா.வேதநாதன் (யாழ்.பல்கலைக்கழகம்)
4. சாகித்திய ரத்னா, பேராசிரியர் அ.சண்முகதாஸ் (யாழ்.பல்கலைக்கழகம்)

ஆலய பண்டிகை அமைப்பு மற்றும் சிற்பங்கள்
சிற்பச்சிலை மையம், கலாபூஷணம் சீ.செந்தூர்ராஜா குழுவினர் - கலைநகர், சித்தன்கேணி.

- ஆலய வர்ண அலங்காரம்: வர்ணவித்தகர் அழகு சர்வேஸ்வரன் குழுவினர்.

ஆலய காரைத பளிங்குக்காரை வேலை
றே.தவப்பெருமான் குழுவினர் (மூளாய்)

இரும்பு கிறில் வேலைகள்: க.இராசையா குழுவினர்

மங்கள வாத்தியம்: கண்ணன் குழுவினர் (சித்தன்கேணி)

கோபுரம் வைரக்கல் வேலை (முதலிரு)
நடேசு பரராசசிங்கம், மயிலங்காடு

ஒலி அமைப்பு: நித்தியஜோதி சவுண்ஸ்

கும்பாபிஷேக நிறைவில் சிறப்புரை ஆற்றுவோர்

1. கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் (யாழ்.பல்கலைக் கழகம்)
2. திரு.த.மு.கதிர்காமநாதன் (சட்டத்தரணி)
3. திரு. அ.கந்தசாமி (கலைஞர்)
4. கவிஞர் வ.யோகானந்தசிவம்
5. பண்டிதர் ந.கடம்பேஸ்வரன்
6. சைவப்புலவர் அ.து.சடாட்சரசிங்கம்

கருங்கல் வேலைகள்
வைரக்கல் வேலைகள்,
செப்பனிடல் - சு.மாணிக்கவாசகர் குழுவினர் (அராலி)

மண்டப நிர்மாணம் பளிங்குத்தட்டு வேலைகள்
பொன்.ஜெயரத்தினம் குழுவினர்

மின்சார வேலைகள்
மு.வாமதேவன்-தெ.ரவீந்திரன் குழுவினர்

கோபுரவாசல் கதவு அமைப்பு
ஸ்தபதி ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஸ்

தச்சுப்பணி: வே.கயிலாயநாதன் குழுவினர்

தகட்டுவேலைகள், கலசங்கள், உற்சவமூர்த்தங்கள்
ஸ்தபதி பாஸ்கரன் குழுவினர்

யாகசமரஷ்சர்கள்

1. சோ.சண்முகராசா சர்மா (அரியாலை)
2. ச.சேகரசர்மா (கொழும்புத்துறை)
3. சோ.லோகர்சர்மா (கொழும்புத்துறை)

இராசகோபுரம்: கட்டக்கலை, சிற்பக்கலை, சித்திரக்கலை விற்பன்னர் வ.சோமஸ்கந்தன் (திருவெண்காடு), கி.மணிகண்டன் (திருச்சி), கி.சுந்தரேசன் (திருச்சி) குழுவினர்.

மஹாகும்பாபிஷே, மண்டலாபிஷேக உபயகாரர்கள்

மஹா கணபதி ஹோமம் 02.03.2010
பூர்வாங்கக் கிரியை நிறைவு 03.03.2010 - பரிபாலனசபை
மஹா கும்பாபிஷேகம் 04.03.2010 - அறங்காவலர்கள்
1ஆம் திருவிழா திரு.திருமதி பூபாலசுந்தரம் குடும்பம்
2ஆம் திருவிழா திரு.திருமதி மயில்வாகனம் குடும்பம்
3ஆம் திருவிழா திரு.திருமதி வீ.சோமலிங்கம் குடும்பம்
4ஆம் திருவிழா திரு.திருமதி திருமுத்துராசா குடும்பம்,
5ஆம் திருவிழா திரு.திருமதி த.செல்வநாதன்
திரு.திருமதி த.அருமைநாதன் குடும்பம்
6ஆம் திருவிழா திரு.திருமதி த.தீபரூபநாதபிள்ளை குடும்பம்
7ஆம் திருவிழா திரு.திருமதி செ.குணரத்தினம் குடும்பம்
8ஆம் திருவிழா திரு.திருமதி சிவப்பிள்ளை, திரு.திருமதி சந்திரகுமார், திரு.திருமதி தயாகரன், திரு.திருமதி சிறிமுரளிதரன் குடும்பம்
9 ஆம் திருவிழா திரு.திருமதி தங்கேஸ்வன் குடும்பமும் மருமக்களும்
10 ஆம் திருவிழா திரு.திருமதி தங்கராசா குடும்பம்
11 ஆம் திருவிழா திரு.திருமதி இராசதுரை குடும்பம்
12 ஆம் திருவிழா திரு.திருமதி வாமதேவன் குடும்பம்
சங்காபிஷேகம் திரு.திருமதி சி.சிவகுகன் குடும்பம்
விசேட பூசை 18.03.2010

இங்ஙனம்
**மூத்த அறங்காவலர்**
**திருமதி சி.இராசலட்சுமியம்மாவும்**
**[illegible] அறங்காவலர்களும் பிரான்ஸ், வட்டூர் தேவஸ்தான பரிபாலன சபையினர் மற்றும் பொதுமக்கள்.**

**அனைவரும் வருக அம்பாள் அருளைப் பெறுக**

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



நேற்று (03.03.2010) புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது ஸ்தாபன, கட்டுப்பாட்டறை இயக்குநர் ம.ஜீவகுமார் அவர்களின் அன்புத் தாய்

**மார்க்கண்டு பவனேஸ்வரி**

அவர்களின் மறைவினால் துயருறும் அவர்களது குடும்பத்தினரின் துயருடன் நாமும் பங்கு கொள்வதுடன், அவரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(95394) **மத்திய மின் நிலைய சமூகம், சுன்னாகம்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 05 | | 03 |
| ★ | | ★ |
| 11 | | 02 |
| ★ | | ★ |
| 1948 | | 2010 |



நீர்வேலி தெற்கு **கார்த்திகேசு சிவபாலன்**

(சமாதான நீதிவான்)

நீர்வேலிக் கிராமத்துக்கு பெருமை சேர்த்திட்ட உயரியோர் வரிசையில் தமது தன்னலமற்ற சமூக சேவையினால் தனக்கென ஓர் இடம்பிடித்து ஓய்வு உறக்கமின்றி இறுதிமூச்சுவரை அல்லும் பகலும் அயராதுழைத்த நற்பண்பாளர், உத்தமர், எம் குடும்பத்தின் பாசமிகு தலைவன் அமரர் கார்த்திகேசு சிவபாலன் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்து இன்று 31 தினங்கள் கடந்துள்ளன. இந்நாளில் நாம் எல்லோரும் அமரரின் பசுமையான நினைவுகளோடு அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டி நீர்வேலி கந்தசுவாமிப்பெருமானை அனுதினமும் துதிக்கிறோம். மேலும் இன்று (04.03.2010) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் கிரியைகள் நடைபெறவுள்ளன.

இந்த பிரார்த்தனை நிகழ்வில் நண்பர்கள், அன்பர்கள், உற்றார், உறவினர் யாவரும் கலந்து அமரரின் ஆத்மா சாந்திய டைய இறையருளை வேண்டிநிற்பதுடன் தொடர்ந்து மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு அன்புடன் வேண்டிநிற்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*கரந்தன் வீதி,* **குடும்பத்தினர்**
*நீர்வேலி தெற்கு, நீர்வேலி.* (95403) **யாவரும்.**






## மரண அறிவித்தல்

### *சபாரத்தினம் சுரேந்திரன்*

வட்டுக்கோட்டை கற்பகப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சுரேந்திரன் திங்கட்கிழமை இரவு (01.03.10) பிரான்ஸில் காலமானார்.

அன்னார் சபாரத்தினம் மற்றும் காலஞ்சென்ற சின்னமணி தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் மகிழ்மணி (அவுஸ்ரேலியா) தம்பதிகளின் அன்பு மருமகனும் தேவமனோகரியின் (முன்னாள் கொக்குவில் ஞானபண்டிதாக் கல்லூரியின் சங்கீத ஆசிரியை) ஆருயிர்க் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**கொழும்பு**
**தொ.பே : 2335784 ,2422305**

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்4

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ந.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும், சிறப்பு விருந்தினராக கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் தி.சோமசேகரமும் கலந்து கொள்வர்.

(50-201)

## ஓராண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 29 | | 13 |
| ★ | | ★ |
| 06 | | 02 |
| ★ | | ★ |
| 1952 | | 2009 |



**இராசையா பத்மநாதன்**

திதி: சதுர்த்தி

அன்போடு எம்மை அழைத்து
உணவூட்டிய அன்புத் தந்தையே!
இன்முகமாய் இன்பம் காட்டி - எல்லோர்
இதயத்திலும் இடம் பிடித்தவரே!
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து
ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது எம் துயரம்.

*இல. 211, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (95406) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### *திருமதி சுந்தரலிங்கம் இராசமணி*

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் இராசமணி நேற்று (03.03.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி மேற்கு, சிறுப்பிட்டி. தகவல்: குடும்பத்தினர்.

### *சுப்பையா நடராசன்*

(இளைப்பாறிய ஆசிரியர், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)



பெரிய அரசடி, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா நடராசன் 02.03.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பொன்னம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகம்மா தம்பதியினரின் மருமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் நத்தகுமார் (U.K), திரிவேணி (Canada), ரூபகுமார் (U.K), இதயவேணி (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் யசோதரனின் (Canada) அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான முருகேசு (ஆசிரியர்), காமாட்சி, கௌரிப்பிள்ளை தங்கமுத்து (Canada) மற்றும் விசாலாட்சி (Germany) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுவாமிநாதன் மற்றும் துரைராசன் (C.E.B. ஓய்வூதியர்), காலஞ்சென்வர்களான இராமநாதன்,லீலாவதி சிதம்பரநாதன் மற்றும் திருமதி கமலவதி குலசேகரம், திருமதி சரஸ்வதி சிதம்பரநாதன் (தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணம்), மனோகரன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி, உமாமகேஸ்வரன் (ஆசிரியர்), சின்னத்துரை, சிற்றம்பலம் (Doctor) மற்றும் சௌந்தரம்மா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஓவிகா, ஜீவிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 11 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரிய அரசடி,* தகவல்:
*சங்கத்தானை.* (95404) குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பு

31 ஆம் நாள் நினைவஞ்சலி எட்டாம் மாத நினைவஞ்சலி





தோற்றம் 28.10.1927 — மறைவு 02.02.2010

தோற்றம் 18.02.1932 — மறைவு 28.06.2009

**தம்பையா சின்னத்துரை சின்னத்துரை தங்கமுத்து**

எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (04.03.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது ஞாபகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் யாரையும் அழைக்கத் தவறியிருப்பின் அதனைப் பெருமனதுடன் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

*பெரியமாவடி,*
*சாவகச்சேரி.* (சி/565367) குடும்பத்தினர்


TRAVEL CARE

**MALAYSIA VACANCIES** DEPARTURE IN 3 WEEKS

A leading Computer accessories Factory in Malaysia requires

**Factory Assistants (50)**

RM 572.00 + OT

Age preferably should be 21 – 35 years.

Interviews conducted by foreign Principals on 4th, 5th & 6th March

Medical, Accommodation and Transportation free.
08 Hours per day in addition 3 hours OT, All rules and conditions as per Malaysian Labour Law. Period of contract 03 Years.
Call over immediately with passport, 04 PP size photographs.

**TRAVEL CARE INTERNATIONAL (PVT) LTD**
F71 – F72, 1st FLOOR, PEOPLE'S PARK COMPLEX, COLOMBO 11. TEL : 011-243 2981, 011-434 2077, 011-486 6494/5 Fax 011-243 0151
E-mail: manpowersrilan@sltnet.lk Web: www.travelcare.lk

Licence # 793

Residents in Jaffna could contact Tel Nos. 0775850967 - 0776692520

AL/793/ADVT/01/2010


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் இலக்கங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.27

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 15 அரசியல் கட்சிகளும் 12 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட களம் இறங்கியுள்ளன.

15 அரசியல் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் இலக்கங்களும் சுயேச்சைக் குழு சார்பில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர்களின் இலக்கங்களும் விவரமும் வருமாறு:-

**தமிழரசுக்கட்சி**
**(சின்னம் - வீடு)**

அப்பாத்துரை விநாயகமூர்த்தி - 01, ஐங்கரநேசன் பொன்னுத்துரை - 02, சுரேஷ்பிரேமச்சந்திரன் - 03, நடேசு இராசேந்திரன் - 04, இராசரத்தினம் சிவசந்திரன் - 05, ஈஸ்வரபாதம் சரவணபவன் - 06, கந்தையா அருந்தவபாலன் - 07, மாவை சேனாதிராஜா - 08, முடியப்பு றெமிடியஸ் - 09, சிவஞானம் சிறிதரன் - 10, சீ.வீ.கே.சிவஞானம் - 11, சேவியர் குலநாயகம் - 12.

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு**
**(சின்னம் - வெற்றிலை)**

அங்கசன் இராமநாதன் - 01, அப்துல் ஹறீம் மொஹமட் அமீன் - 02, ஐயாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன் - 03, அலெக்ஸ் சாண்டர் சூசைமுத்து - 04, நவரத்தினம் யோகராசா -05, கந்தசாமி கமலேந்திரன் - 06, கிருஷ்ணபிள்ளை சிறிசரவணபவன் - 07, சந்திரகுமார் முருகேசு 08, டக்ளஸ் தேவானந்தா - 09, பசுபதி சீவரத்தினம் - 10, முருகுப்பிள்ளை ஸ்ரீபதி -11 , செல்வஸ்திரி அலன்றின் - 12.

**அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்**
**(சின்னம் - மிதிவண்டி)**

கந்தசாமி திருலோகமூர்த்தி - 01,கஜேந்திரகுமார் பொன்னம்பலம் - 02, நடேசு துரைராசா - 03, நாகலிங்கம் குழந்தைவேலு - 04, பத்மினி சிதம்பரநாதன் - 05, பிரான்ஸிஸ் வின்சென்ட் போல் - 06, ஜோன் மனோகரன் கெனடி - 07, விஸ்வலிங்கம் மணிவண்ணன் - 08, சந்தனம் ஸ்ரீபன் - 09, சின்னத்துரை வரதராஜா - 10, செல்லத்துரை சுப்பிரமணியம் - 11, செல்வராஜா கஜேந் திரன் - 12, .

**தமிழர்விடுதலைக் கூட்டணி**
**(சின்னம் - சூரியன்)**

ஆனந்தசங்கரி வீரசிங்கம் - 01, கோபிதாசன் சீவரத்தினம்-02, திருஞானசம்பந்தர் தம்பையா - 03, பத்மநாதன் சுப்பையா - 04, மகாலிங்கம் செல்லப்பா - 05, முத்துலிங்கம் செல்லப்பா - 06, முருகேசு அரியகுட்டி -07, இரத்தினமணி இராமையா - 08, இராஜஇராஜேஸ்வரி சுப்பையாபிள்ளை - 09, சதாசிவமூர்த்தி குமாரசாமி - 10, சாந்தசொரூபன் இளையதம்பி - 11, சண்முகராசா வல்லிபுரம் -12.

**பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**
**(சின்னம் - மெழுகுதிரி)**

அரியகுட்டி ஜோன் - 01, கந்தையா சிவராசா - 02, கயிலாபதி பகீரதன் - 03, காளிக்குட்டி ஜெயகுமாரன் - 04, துரைஐயா மகாலிங்கம் - 05, திருநாவுக்கரசு ஸ்ரீதரன் - 06, தில்லைநாதன் தங்கவேலு - 07, நீக்கிலஸ் அரியரட்ணம் - 08, இராஜரட்ணம் கோணேஸ்வரன் - 09, இராஜேந்திரம் செல்வராசா - 10, வசந்தநாதன் சிவநாதன் - 11, சின்னத்தம்பி தங்கராசா - 12.

**தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள்**
**(சின்னம் - வள்ளம்)**

கந்தையா அருமைலிங்கம்- 01, திகரன் பிள்ளை பிரஜித் - 02, நல்லசேகரம் சரோஜா ஜோதி - 03, பூபாலபிள்ளை ஹரதாஸ் - 04, மனோகரன் ஹரிகரன் - 05, முத்து கோணலிங்கம் - 06, ரமணி தங்கராசா - 07, வடிவேல் றமேஸ்குமார் - 08, சித்திர வேல் சிவானந்தி - 09, சுந்தரராஜா சௌந்திரராஜா - 10, சுப்பிரமணியம் பவானி - 11, சுப்பிரமணியம் யோகநாதன் - 12.

**ஈழவர் ஜனநாயக முன்னணி**
**(சின்னம் - கலப்பை)**

ரிச்சட் அருட்பிரகாசம் 01,எம். றெஸ்மின் - 02, இம்மானுவேல் கைமர் - 03, கார்த்திகேசு யோகரட்ணம் - 04, தெய்வேந்திரம் சிறிதரநாதன் - 05, நாக லிங்கம் திருநாவுக்கரசு - 06, பரம்ஜோதி விேனாத்குமார் - 07, மார்க்கண்டு துரைராஜா - 08, முத் துக்குமாரு சிவநாதன் - 09, சிங்கராசா ஞானேஸ்வரி - 10, சின்னையா செல்வநாயகம் - 11, சண்முகம் இராஜலிங்கம் - 12.

**இடதுசாரி விடுதலை முன்னணி**
**(சின்னம் - குடை)**

அருமைநாதன் தவநாதன் - 01, நல்லதம்பி ஸ்ரீகாந்தா -.02, கனகலிங்கம் சிவாஜிலிங்கம் - 03, கனகசபாபதி நமநாதன் - 04, தமியான் யூலிதயான் - 05, தியாகராசா இராசரத்தினம் - 06, பொன்ராசா பூலோகசிங்கம் - 07, மொஹமது இஸ்மாயில் உம்மு சகீலா - 08, விஜய தர்மா கேதீஸ்வரதாசன் - 09, இரத்தினம் ஜெகராசா - 10, சண்முகலிங்கம் சஜீவன் - 11, சுப்பிரமணியம் செல்வநேசன் 12.

**ஜனநாயக தேசிய கூட்டணி**
**(சின்னம் - வெற்றிக்கிண்ணம்)**

அம்பிகைகுமார் லலிதா - 01, கோபாலன் அருளப்பன் - 02, தங்கரத் தினம் சசிகலா - 03, பத்மநாதன் கருணாவதி - 04, டிசிமுத்து நடராசா - 05, பாலசிங்கம் கமலகுமார் - 06, முது மொஹமட் நிவாஸ் - 07, முத்துத்தம்பி பாலசுந்தரம் - 08, நாகரத்தினம் நளாயினி - 09, வீராயு லலித்குமார் - 10, சக்திவேல் தங்கேஸ்வரன் - 11, சிவகுருநாதன் மேனன் - 12.

**சோஷலிச சமத்துவக் கட்சி**
**(சின்னம் - கத்தரிக்கோல்)**

ஐயம்பிள்ளை லக்ஷ்மன் - 01, கிருஷ்ணன் சித்திரகுமார் - 02, திருச்செல்வம் சுப்பிரமணியம் - 03, நந்தா விக்கிரமசிங்க - 04, நாகராசா கோடீஸ் வரன் - 05, பிரிய தர்ஷ மதியவதா - 06, மகா லிங்கம் திருமாறன் - 07, முத்துலிங்கம் முருகானந்தன் - 08, நாகரத் தினம் பாலகௌரி - 09, ராஜரத்தினம் ராஜவேல் - 10,இராசேந்திரம் சுதர்சன் - 11, சிவலிங்கம் சிவசீலன் - 12.

**ஜனநாயக ஐக்கிய முன்னணி**
**(சின்னம் - இரட்டை இலை)**

புஸ்பராசா புவிலன் - 01, பாலசிங்கம் அனிஷன் - 02, மாயழகர் உதயகுமார் - 03, யோகராசா முகுந்தன் - 04, விஜயரத்தினம் பிரதீப் - 05, சண்முகநாதன் ஜெகன் - 06, சண்முகலிங்கக் குருக்கள் ராஜீவ்பாபு - 07, சிதம்பரப்பிள்ளை இராசேந்திரம் - 08, சின்னத்துரை அகிலேஸ்வரன் - 09, சிஹாப்தீன் கிர்ஷாத் - 10, சீவரத்தினம் மானன் விக்டர் லோநாதன் - 11, செல்வரத்தினம் சாந்தகுமார் - 12.

**ஐக்கிய தேசியக் கட்சி**
**(சின்னம் -யானை)**

தியாகராஜா துவாரகேஸ்வரன் - 01, நடராசா சண்முகவேல் - 02 , அந்தோனி யூட்ராஜசிங்கம் - 03, மமுனா லீபய் செயிட் அமீர் - 04, மொஹ மட் அப்துல்காதர் மொஹமட் மூபின் - 05, ராஜரத்தினம் சிறிதாமோதரராஜா - 06, வல்லி மகேந்திரம் - 07, திருமதி மகேஸ்வரன் விஜயகலா- 08, சண்முகசுந் தரம் லவகுமார் - 09, சுந்தரலிங்கம் ஸ்ரீகஜன் - 10, சாம்பசிவம் சத்தியேந்திரா - 11, சின்னத்துரை குலேந்திரராஜா - 12.

**ஐக்கிய சோஷலிச கட்சி**
**(சின்னம் - முச்சக்கரவண்டி)**

ஏ.பசித் - 01, பாலித கீர்த்திசிறி - 02, எம்.மஹகிப் - 03, எஸ்.சசிகுமார் - 04,ஏ. யோகநாதன் - 05, கே.ஜெயன்சி - 06, கே.சிவராசா - 07, ரி.சுவேந்திரகுமார் - 08, பி.ராஜகுமார் - 09, ஜீ.சிவரஞ்சன் - 10, வீ.சின்னையா - 11, சுப்பிரமணியம் நகுலராசா - 12.

**ஜனசத பெரமுன**
**(சின்னம் உழவு இயந்திரம்)**

அலன் ஆனந்தம் - 01, எம்.அன்ஸார் - 02, எஸ்.அருள் அமுதன் - 03, எல்.சிந்தசகபந்து - 04, ஏ.கே.ஹெட்டிகொட - 05, சமிந்த ரணசிங்க - 06, யூட்சண்முகன் - 07, டீ.கே. ஷாஹர திஸநாயக்க - 08, பி.பி. ஜி.திகான் ஸ்ரீமல் பிரசன்ன - 09, வி.எம். பண்டுகே வீரசேகரன் - 10, ராஜலிங்கம் விக்னேஸ்வரலிங்கம் - 11, மஞ்சுளா சொக்கலிங்கம் - 12.

**ஒக்கம வசிய ஒக்கோம ராஜவரு சன்விட**
**(சின்னம் உண்டியல்)**

தங்கராசா தர்மசீலன் - 01, தம்பிராஜா நவஜீதராஜா - 02, பரசுராமன் புஸ்பராஜா - 03, பிரான்சிஸ் றொபின்சன் - 04, மயில்வாகனம் ஜெயந்தன் - 05, முருகேசு நவரட்ணராஜா-06, மோகன்ராஜ் சுகந்தன் - 07, விஸ்வநாதன் சங்கரலிங்கம் - 08, சந்தானம் விஸ்வநாதன் - 09, சிதம்பரப் பிள்ளை டிலக்சன் - 10, சிவகுமாரன் அயன் - 11, சிவானந்தன் சிவரூபன் - 12

**சுயேச்சை 01**
**(சின்னம் - இரட்டைக்கொடி)**
சங்கரலிங்கம் சத்தியசீலன் - 10

**சுயேச்சை 02**
**(சின்னம் - மூக்குக் கண்ணாடி)**
சண்முகநாதன் மனோகரன் - 10

**சுயேச்சை 03**
**(சின்னம் - ஹெலி)**
பர்ணாந்து யோசப் அன்ரனி - 07

**சுயேச்சை -04**
**(சின்னம் - ஆமைப்பூட்டு)**
கதிரவேல் செவ்வேள் - 01

**சுயேச்சை 5**
**(சின்னம் வானொலி)**
அன்ரனி ரங்கதுஷாரா - 01

**சுயேச்சை 06**
**(சின்னம் - கேற்றில்)**
காசிப்பிள்ளை செந்திவேல் - 06

**சுயேச்சை 07**
**(சின்னம் - கணனி)**
பொன்னுத்துரை சிவபாலன் - 07

**சுயேச்சை - 08**
**(சின்னம் - அணில்)**
அருணாச்சலம் சொக்கநாதன் சந்திரன் - 01

**சுயேச்சை 09**
**(சின்னம் - பந்து)**
வல்லி நடராசா - 09

**சுயேச்சை 10**
**(சின்னம் - பட்டம்)**
நாகமுத்து தணிகாசலம்பிள்ளை - 05

**சுயேச்சை 11**
**(சின்னம் - மாம்பழம்)**
திலக் உடுகம - 01

**சுயேச்சை 12**
**(சின்னம் - அன்னாசிப்பழம்)**
முஹமது அவுதாஹீர் மஹீர் - 06.

# மீளக்குடியமர்ந்த 17,732 குடும்பங்களுக்கு 25ஆயிரம் ரூபா உதவிக் கொடுப்பனவு

## அனுமதிக் கடிதம் சனிக்கிழமை முதல் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 04

கடந்த வருடம் ஏப்ரல் 30ஆம் திகதி தொடக்கம் (30.04.2009) ஒக்ரோபர் 31ஆம் திகதிவரை (31.10.2009) வரையான காலப் பகுதியில் மீளக்குடியமர்ந்த தகுதியுடைய அரச உத்தியோகத்தர்கள் தவிர்ந்த 16,831 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவு தொகையாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இந்தக் குடும்பங்களுடன் யாழ். மாவட்டத்திற்குள்ளேயே இடம்பெயர்ந்து மீண்டும் மீளக்குடியமர்ந்த வேலணை யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுகளையும் நெடுந்தீவு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் சேர்ந்த 901 குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியுடன் நிக்கொட் ஊடாக இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். இந்த கொடுப்பனவு குறித்த விவரங்களை யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரச அதிபர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இக் கொடுப்பனவுகள் யாவும் எதிர்வரும் 27ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருப்பதால் இக் கொடுப்பன விற்கு தகுதி உடைய மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் இன்றுவரை விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தவறி இருந்தால் உடனடியாகக் கொடுப்பனவு தொடர்பான விண்ணப்பத்தை கிராம சேவையாளரிடம் பெற்று பூர்த்தி செய்து கிராமசேவையாளரது சிபார்சுடன் தங்கள் பிரதேச செயலாளரிடம்/உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

கொடுப்பனவு வழங்கவுள்ள குடும்பங்களுக்கான அனுமதிக் கடிதம் நாளை மறுதினம் 6ஆம் திகதியிலிருந்து பிரதேச செயலாளர்/உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகவும் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாகவும் வழங்கப்படவுள்ளன.

சகல தகுதியுடைய மீளக்குடியமர்ந்த குடும்பங்களும் தவறாது தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரச் சான்றிதழுடன் எங்களால் பின்னர் அறிவிக்கப்படும் பிரதேச செயலகத்திலோ/உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கோ அல்லது வேறு இடத்திற்கோ சென்று உறுதிச் சீட்டில் கையொப்பத்தை இட்டு அனுமதிக் கடிதத்தைப் பெற்று வங்கியில் பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பிரதேச செயலர்/உதவி அரச அதிபர் பிரிவு ரீதியில் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளவுள்ள (31.10.2009) முன் மீளக்குடியேறியோர் குடும்பங்களின் விவரம் வருமாறு:

வேலணை-1,765, யாழ்ப்பாணம் - 1,788, நல்லூர்-1,524, உடுவில்-705, சண்டிலிப்பாய்-959, சங்கானை - 1,087 தெல்லிப்பழை 511, கோப்பாய்- 2,342, கரவெட்டி-1,149, நெடுந்தீவு - 246, பருத்தித்துறை-2,137, சாவகச்சேரி-1,730, ஊர்காவற்றுறை 644, காரைநகர் -707, மருதங்கேணி 438, (மொத்தம் 17,732 குடும்பம்)

31.10.2009ஆம் திகதிக்கு பின்னர் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்க ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதையும் அறியத்தருகின்றோம்-என்றுள்ளது. (ஒ)

# சிறுவர்களுக்கான கருணை இல்லம் தென்மராட்சியில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 04

தென்மராட்சிப்பிரதேசத்தைச் சேர்ந்த கல்வியில் ஊக்கமுள்ள- வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 40மாணவர்களுக்கு மாதாந்தம் உதவி வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை சுவிற்சர்லாந்து நாட்டு மக்களும் அங்குள்ள புலம்பெயர்ந்த தமிழ் மக்களும் இணைந்து ஆரம்பித்துள்ள 'ஆலமரம்' என்னும் அமைப்பு வழங்கவுள்ளது.

இந்த அமைப்பின் ஏற்பாட்டில் ''சிறுவர்களுக்கான கருணை இல்லம்'' என்னும் தன்னார்வத் தொண்டு நிறுவனம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

முதற்கட்டமாக தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 10 பாடசாலைகளிலிருந்து தலா 4 மாணவர்கள் வீதம் 40 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஞானகாந்தன் கலந்துகொள்வார்.

(ஒ-207)

# சுகி சிவத்திற்கு இன்று வரவேற்பு

யாழ்ப்பாணம் மார்ச் 04

இந்திய ஆன்மீகப் பேச்சாளர் சுகி சிவத்திற்கு வரவேற்பு அளிக்கும் நிகழ்வு இன்று மு.ப. 11.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஒ-6)

# தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 04

தென்மராட்சி பிரதேச யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பு கடந்த முதலாம் திகதி சாவகச்சேரி புகையிரத நிலைய ஒழுங் கையில் உள்ள கட்டடத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

பிரதேச கிராம அபிவிருத்திப் பிரிவினரால் நடத்தப்படும் தையல் பயிற்சி வகுப்பை உதவிப் பிரதே செயலர் செல்வி ர.நவரத் தினம் வைபவரீதியாக ஆரம்பித்துவைத்தார்.

(ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறை ... ச்சிநகர சபை, யாழ்ப்பாணம்

# தமிழ் நடிகையுடன் சுவாமி நித்தியானந்தர்; உல்லாசக் காட்சிகளால் மக்கள் கொதிப்பு

## படங்களுக்குத் தீ வைப்பு! ஆச்சிரமங்கள் சூறையாடப்பட்டன!!



திருவண்ணாமலை, மார்ச் 04

சுவாமி நித்தியானந்தர், தமிழ் நடிகை ஒருவருடன் உல்லாசமாக இருக்கும் காட்சிகள் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் வெளியாகி, இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

நித்தியானந்தாவின் முகத்திரையை கிழித்திருக்கும் இந்த வீடியோவில் அவருடன் உல்லாசமாக இருக்கும் நடிகை ரஞ்சிதா. இவர் பாரதிராஜாவின் படத்தில் அறி-



முகமானவர்; பாரதிராஜாவின் சின்னத்திரை தொடரிலும் நடித்தவர்.

இந்தப் படக்காட்சிகள் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பானதையடுத்து திருவண்ணாமலை மாவட்ட இந்து மக்கள் கட்சித் தலைவர் சிவபாபு தலைமையில் அக்கட்சியினர் திடீரென ஆசிரமத்தை முற்றுகையிட்டு நித்தியானந்தாவின் படங்களை தீ வைத்து கொளுத்தினர். இதனால் அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

திருவண்ணாமலையில் பிறந்தவரான சுவாமி நித்தியானந்தர் தனது சொற்பொழிவுகளால் உலகம் முழுவதும் புகழ் பெற்றவர். அவருக்கு ஏராளமான பக்தர்கள் உள்ளனர். திருவண்ணாமலையிலும், கர்நாடக மாநிலம் பெங்களூரிலும் அவருக்கு ஆசிரமங்கள் உள்ளன.

சம்பவம் நடந்த இடம் வீடா அல்லது ஆசிரமத்தின் ஓர் அறையா என்பது தெரியவில்லை. நடிகையும் சாமியாரும் படுசகஜமாக பேசிக் கொண்டு உல்லாசத்தில் ஈடுபடுவதைப் பார்க்கும்போது இது நீண்டகால பழக்கம் என்று தெரிகிறது.

புனிதமான காவி உடை தரித்து நாட்டு மக்களுக்கு அருளாசி வழங்கியும் பத்திரிகைகளில் தொடர் எழுதியும் நல்வழி போதிக்கும் சாமியாரின் சல்லாப லீலைகள், இத்தனை காலமாக அவரை நம்பிய பொது மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

சுவாமி நித்தியானந்தா நடிகையுடன் உல்லாசமாக இருக்கும் வீடியோ வெளியானதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் அவரது ஆசிரமங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன.

புதுவையிலும் ஏராளமான பொதுமக்கள் நித்தியானந்தாவின் ஆசிரமத்தை சூறையாடினார்கள். மேலும் கடலூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருக்கும் ஆசிரமங்களை சூறையாடி வரும் இந்து அமைப்பினர் மற்றும் பொதுமக்கள், சுவாமி நித்தியானந்தாவை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்றும், அவரது சொத்துக்களை அரசு பறிமுதல் செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-சி)

# தமிழ் சினிமாவில் புலிகளின் பணம் ஆண்டுக்கு ரூ.350 கோடி புழக்கத்தில்

## சீமானையும் சாடுகிறார் காங்கிரஸ் பிரமுகர்

சென்னை, பெப்.6

தமிழ் சினிமாவில் விடுதலைப்புலிகளின் பணம் ஆண்டுக்கு 350 கோடி ரூபா வரை பழக்கத்தில் விடப்படுகிறது. அதேசமயம் சட்டம் - ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் கூட்டங்களில் பேசி வரும் திரைப்பட இயக்குநர் சீமான் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கூறுகிறார் முன்னாள் மத்திய அமைச்சரும் தமிழகத்தின் மூத்த காங்கிரஸ் தலைவர்களில் ஒருவருமான எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்.

சென்னையில் அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்ச் சினிமாவில் ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாவரை முத லீடு செய்யப்பட்டு வருகிறது. இதில் வெளி நாடுகளிலிருந்து விடுதலைப்புலிகளின் பணம் இங்குள்ள முக்கியநபர்கள் மூலம் தமிழ்ப் படத் தயாரிப்புகளில் புழக்கத்தில் விடப்பட்டுள்ளது. ஆயிரம் கோடியில் மூன்றில் ஒரு பங்கு, அதாவது 350 கோடி ரூபா வரை தமிழ்ப் படங்களில் இவ்வாறு புழக்கத்தில் விடப்பட்டுள்ளது. இதனால் தான் புதிய படங்களின் தயாரிப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளன. இதைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரைப்பட இயக்குநர் சீமான், 'நாம் தமிழர்' என்ற இயக் கத்தைத் தொடங்கி, செயல் வீரர்கள் கூட்டத்தை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தியிருக்கிறார்.

இக்கூட்டங்களில் சீமான் பேசியவை இந்திய இறையாண் மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் எதிரானவை. பணத்தைப் பற்றிக் கவலைப்படாதே, எத்தனை ஆயிரம் கோடி பணம் தேவைப் பட்டாலும் அதைத் தர பலரும் தயாராக இருக்கிறார்கள் என்றும் உறுதியளித்துள்ளார்.

இந்திய ஒருமைப்பாட்டின் மீது நம்பிக்கை வைத்து, கருணாநிதி செயலாற்றி வருவதை சீமானால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தலைவர்களுக்கு எதிராக மக்களை தூண்டிவிடும் வகையிலும் சீமான் பேசிவருகிறார்.

இந்தியா இனிமேல் எங்களுக்குப் பக்கத்து நாடு தான். எங்கள் நாடு இல்லை. இனிமேல் இந்திய இறையாண்மை என்று யார் பேசினாலும் அவர்களை நாடு கடத்துவோம். தமிழர் அல்லாதோர் கடைகளையும், நிறுவனங்களையும் அடித்து நொறுக்குங்கள், எதைப்பற்றியும் கவலைப்படாதீர்கள், நான் இருக்கிறேன்' என்றும் சீமான் பேசி வருகிறார்.

சீமானின் நடவடிக்கையை தடுத்து நிறுத்தாவிட்டால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிடும். முதல்வர் கருணாநிதி உட் பட பல தலைவர்களுடைய உயிருக்கும் உத்தரவாதம் இல்லாத நிலை ஏற்படும் - என்றார்.

## இந்திய வெளி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் தரப்புச் செய்திகள் சில தகவல் வெளியிட்டன.

அவரது இலங்கை வருகையை ஒட்டிய நிகழ்ச்சி நிரல் இன்று இறுதி செய்யப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-சி)

## ரஷ்யாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இலங்கைக் கடற்பகுதியில் எண்ணெய் அகழ்வை மேற்கொள்வது குறித்தும் இந்த நிறுவனம் விருப்பம் கொண்டுள்ளது. (அ-சி)

## பொன்சேகாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹஸானின் வாக்குமூலத்தையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பின்னர் பெற்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தலைமறைவாகியுள்ள தனுனா திலகரட்ணவிற்கு எதிராக நீதிமன்றப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## இலங்கையர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த கப்பலில் இலங்கைப் பணியாளர்கள் 13 பேரும் கிரேக்க நாட்டுப் பணியாளர் ஒருவரும் இருந்தனர் எனக் கென்ய கடற்படை அதிகாரிகளை மேற்கோள் காட்டி ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

எரிபொருள் ஏற்றிச் செல்லும் இந்த கப்பல் ஜப்பானில் இருந்து சவூதி அரேபியாவின் 'ஜந்தா' துறைமுகத்துக்கு சென்று கொண்டு இருந்தபோதே கடற் கொள்ளையார்களினால் கடத்தப்பட்ட டுள்ளது.

கென்யாவில் உள்ள கிழக்கு ஆபிரிக்காவுக்கான சமுத்திரங்கள் சார்ந்த நிவாரண அமைப்பின் இணைப்பதிகாரி அன்று முவல்குறா என்பவர் ரொய்ட்டர் செய்திச் சேவை வெளியிட்ட செய்தியை உறுதிப்படுத்தியுள்ளார். (அ-சி)

## நாடாளுமன்றில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அடிப்படையில் தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டிய அவசர தேவை ஒன்று எமக்கு ஏற்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான தேவையே அது.

கடந்த மாதம் ஐந்தாம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்பட்டு அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஒரு மாதம் முடிவடைந்துள்ளதால் மீண்டும் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலை உள்ளது. இதனால் இம்மாதம் மீண்டும் நாடாளுமன்றம் கூட்டப்படுகிறது.

நாடாளுமன்றம் கலைக்கப்படும்போதே எம்.பிக்களின் பாதுகாப்பும் நீக்கப்படுகின்றது. இப்போதும் அதே நிலைதான் உள்ளது. ஆனால், நாடாளுமன்றம் ஒன்பதாம் திகதி கூட்டப்படும்போது பாதுகாப்புப் பிரச்சினைகள் உள்ள எம்.பிக்கள் அரசிடம் சுட்டிக்காட்டிப் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். - என்றார்.

## அவசரகாலச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் தேவை அரசுக்கு ஏற்பட்டுள்ளதால் அடுத்த வாரம் நாடாளுமன்றம் விசேடமாகக் கூட்டப்பட்டு பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது.

நாட்டின்தும் நாட்டு மக்களினதும் பாதுகாப்புக் கருதி 1983 ஆம் ஆண்டு இந்த அவசரகாலச் சட்டம் முதலில் அமுல்படுத்தப்பட்டது. அது முதல் ஒவ்வொரு மாதமும் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் நீடிக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கணக்கீடு
A/L 2011
பங்குடமை
ஆரம்பம்: சனி 3 p.m
S.தவா
(B.Com (Hons)(Acc.Spl)
(தனிப்பட்ட அனுமதி)
Universal
யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்

விக்னா
கல்வி நிறுவனம்
52. ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
A/L DAY CLASS
இந்து நாகரிகம்
திரு. N.T. தான்
பகுதி 1, திங், செவ் (8மணி)
பகுதி 11 வியா, வெள்ளி (8மணி)
அடுத்த ரீயான பரீட்சைப் பரீட்சை

NEW SCINCE CENTER
Clock Tower Road, Jaffna
A/L 2011
S,P,d மூலக
இரசாயனம்
(Inoraganic)
By:
G.Beno Rajathayan (B.Sc)
(G.B Rajathayan)
ஆரம்பம் இன்று 3p.m
Thurs, Fri 3-4.30 p.m

பதவி வெற்றிடங்கள்
கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு முன் அனுபவமுள்ள தேர்ச்சியானவர்கள் உடன் தேவை.
1) Graphics Designer
2) கணக்காளர்
3) வரவேற்பாளர் (பெண்கள்)
4) களஞ்சியப் பொறுப்பாளர்
5) தமிழ் ஆங்கில ரைப்பிங் தெரிந்தவர்கள்
6) பக்க வடிவமைப்பாளர்கள்
7) Binding / Screen Printing தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்
05/03/2010 வெள்ளிக்கிழமை மற்றும் 06/03/2010 சனிக்கிழமை.
நேரம் : காலை 9.30 முதல் பகல் 1.00 மணி வரை.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ANDRA DIGITAL IMAGE
இல.356A, லக்சுமன் பிளாசா,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
பிரிவு 2 தரம் 6 தொடக்கம் O/L வரை
3.45 - 5.45
இப் பிரிவு தீவக மாணவர்களுக்கானது.
* கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
(C/565360)

இதோ! அரிய சந்தர்ப்பம்
கையிருப்பு உள்ளவரை மட்டுமே!
பாடசாலை அதிபர்களின் கவனத்திற்கு
பரீட்சை விடைத்தாள்
(Fullscap Sheet)
உங்கள் பாடசாலை இலச்சினையும், பாடசாலையின் பெயரும் தரமான முறையில் அச்சிடப்படுவதற்கு
A3 1Ream 550/= மட்டுமே
மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்
முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே.இல: 021 2229285, 021 ...2258

விக்னா
கல்வி நிறுவனம்
52. ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
A/L DAY CLASS
தமிழ்
திரு. குழந்தை
Mon, Tues, Thurs
9 - 10
தொடர்ந்து அனைத்து வகுப்புக்களும் நடைபெறும்.

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
பிரிவு 2
O/L DAY CLASS
ஆரம்பமாகிவிட்டது
* இப்பிரிவு வன்னி மாணவர்களுக்கும், பரீட்சைக்கு தோற்றாத மாணவர்களுக்குமானது.
* இப் பிரிவில் அனைத்துப் பாடங்களும் ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.
* விடுதி வசதிகளுண்டு.
* இந்த வருடமும் பிரிவு 6 மட்டுமே.
(C/565359)

ஜேர்மன் Deutsch, Dutch, French, Italiyan மொழி வகுப்புக்கள்
கொழும்பு விவேகானந்த அக்கடமியின் யாழ்.கிளையில் Germany & Netherland விஸாவுக்கான வகுப்புக்களும் French, Italy, Danish வகுப்புக்களும் தற்பொழுது நடைபெறுகின்றன.
* ஜூன் மாத எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch மொழி 2nd Batch மற்றும் Italiyan 1st Batch 06.03.2010 ஆரம்பமாகின்றது.
* ஒவ்வொரு Batch இலும் 10பேருக்கு மேல் கண்டிப்பாக அனுமதிக்கப்படுவதில்லை என்ற காரணத்தால் உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள்.
இலக்கம் 3, 2nd Lane (அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(C/565369)
தொ.பே.இல: 0774842464, 0213216928

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.